படைப்பு

ஊற்று-5 | நதி-4 | ஆகஸ்ட்-2022 | திங்களிதழ்

ISSN : 2582-4015

தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com

பொய்களுக்குத்தான் முழக்கங்கள் தேவை.. உண்மை முனங்கினாலே போதும்..

எழுத்தாளர் வசுமித்ரவுடனான நேர்காணல்

- வானவில் வண்ண மின்னல்

- ஆதிரன்

- கொண்டுகூட்டு

- அகமது திப்பு சுல்தான்.தை.கா.

- காடு செழித்தால் நாடு செழிக்கும்

- கோ.லீலா

படைப்பு
தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-5 | நதி-4 | ஆகஸ்ட் 2022

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

ஆசிரியர் :
ஆசியாதாரா

நிர்வாகக் குழு :
சகா(சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

தலைமை நிருபர் :
வலங்கைமான் நூர்தீன்

நிருபர்கள் குழு :
முனைவர் கோ.நித்தியா
க.சோ.திருமாவளவன்
ஸ்டெல்லா தமிழரசி
கலிங்கப்பட்டி க.கருப்பசாமி

முதன்மை வடிவமைப்பாளர் :
கமல் காளிதாஸ்

வடிவமைப்பு :
ப.முகம்மது புலவர் மீரான்

ஓவியக் கலைஞர்கள் :
அழ.ரஜினிகாந்தன்
அன்பழகன்

படைப்புகள் மற்றும் கருத்துக்களை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி :
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.
admin@padaippu.com
9489375575

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

உள்ளே...

- **தலையங்கம்** -பக். 04
- **பொய்களுக்குத்தான் முழக்கங்கள் தேவை..**
  உண்மை முனங்கினாலே போதும்..
  – எழுத்தாளர் வசுமித்ரவுடனான நேர்காணல் -பக். 05
- **இருப்பவன் தரமாட்டான்..**
  இல்லாதவன் விடமாட்டான்...
  – கவிஜி -பக். 14
- **கவிதைக்குள் கலந்திருக்கும் கதை**
  – மு.முருகேஷ் -பக். 27
- **வானவில் வண்ண மின்னல்**
  – ஆதிரன் -பக். 38
- **எட்டுத் தெசயும்..**
  – கவிஞர் ஏகாதசி -பக். 44
- **வ.உ.சி.யை ஏமாற்றினாரா காந்தி?**
  – சு. அருண்குமார் -பக். 54
- **காடு செழித்தால் நாடு செழிக்கும்**
  – கோ.லீலா -பக். 57
- **தமிழ்நாட்டில் தாய்வழிச் சமுதாயம்**
  – நா.வானமாமலை -பக். 60

சிறுகதைகள்

- **கொண்டுகூட்டு**
  – அகமது திப்பு சுல்தான்.தை.கா. –பக். 18

- **அருபத்தின் கரங்கள்**
  – அ.வால்டர் ராபின்சன் –பக். 32

- **அப்பாவின் காது**
  – ச.மோகன் –பக். 49

கவிதைகள்

- **சௌவி** –பக். 25

- **மா.காளிதாஸ்** –பக். 25

- **சக்தி அருளானந்தம்** –பக். 25

- **ரா.ராஜசேகர்** –பக். 26

- **பிரபுசங்கர் க** –பக். 26

- **சந்துரு.ஆர்.சி** –பக். 26

- **பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள் - 23**
  – ஜின்னா அஸ்மி –பக். 48

- **தி.கலையரசி** –பக். 56

- **தங்கேஸ்** –பக். 56

வணக்கம்.

படைப்பு ‘தகவு’ ஐம்பத்திரண்டாவது இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

ஒரு சமூகத்தில் இயல்பாக எவ்விடத்திலும் நடக்கவேண்டிய ஒரு செயல் அங்கொன்றும் இங்கொன்றுமாய் நிகழும்போது வித்தியாசமான செயலாக அடையாளப்படுத்தப்படுகிறது. பாடம் தாண்டிய சிறுவர்களின் வாசிப்பும் அப்படித்தான்.

பாடத்திட்டங்களிலும் கதைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் அங்கு அவர்களின் கற்பனை உலகம் வேலி அடைக்கப்பட்டது. அங்கு தேவதைகளுடன் பறக்கும்போதும் பின்னால் புன்னகையுடன் ஆசிரியர் வந்துகொண்டிருப்பார். கதைகளின் வரிகள் தேர்வு வினாக்களின் விடைகளாகத்தான் பல மாணவர்களுக்குத் தென்படும். ஒவ்வொரு குழந்தைக்கும் கற்பனைப் பரப்பு வேறுவேறு. எனவே பொதுமைப்படுத்தப்பட்ட கல்விசார் வாசிப்பைத் தாண்டி குழந்தைகளின் தனித்தனி ரசனைக்கேற்ப படைப்புகளை அறிமுகப்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

குழந்தைகள் உலகத்திற்கேற்ற படைப்புகளை அவர்களுக்கேற்ற முறையில் வழங்குவதில் பெரியவர்கள் தடுமாறியிருக்கிறோம். அவர்களுக்கு வாசிப்பு என்பது இயல்பானதாக இல்லை என்று நாம் அறிந்திருக்கிறோம். அதனால்தான் குழந்தைகள் தங்களுக்கான கார்ட்டூன் தொடர்களைப் பார்ப்பதை இயல்பென ஏற்கும் சமூகம் பாடம் தாண்டிய புத்தகங்களை வாசிக்கும் குழந்தைகளை அற்புதமெனப் பார்க்கிறது.

கார்ட்டூன்வழி சிறார் இலக்கியத்தின் ஒரு பகுதியை அறிந்துகொள்ளும் குழந்தைக்கு வாசிப்பின்வழி அதன் முழுமையை உணர்த்த வேண்டும். குழந்தை பார்ப்பதன்வழி ஒரு காட்சியைக் கற்றுக்கொள்ளும்.. புதிதாய் உருவாக்கக் கற்பனைத் திறன் மேலோங்க வேண்டுமல்லவா? கற்பனைக்கு வேலை இன்றிக் காட்சிகளை அப்படியே திரையில் காட்டும் நிலைக்கு அடுத்த நிலைக்குக் குழந்தைகளை அழைத்துச் செல்ல வேண்டும். அவர்கள் வளர்ந்துவிடுவதற்குள் அதனை நிகழ்த்திவிட வேண்டும். சிறார் இலக்கியவாதிகள் முன்னெடுக்க வேண்டிய முக்கிய இடம் இது. குழந்தைகள் இயங்கிவரும் தகவல் தொழில்நுட்ப உலகிற்கேற்ப இலக்கியவாதிகள் இயங்கவேண்டும்.

குழந்தைகளின் வாசிப்பிற்கேற்ற நூல்களை, இதழ்களைப் பரவலாக்காமல் அவர்களை வாசிப்பில் புகுத்த இயலாது. முறைசார் கல்வி வாசிப்பின்வழியே புகுத்தப்படும்போது அவர்களுக்கு அது கட்டாயப்படுத்துவதாகத் தோன்றுகிறது. எனவே பிறவற்றை வாசிக்கக் கூறுகையில் அவற்றையும் அக்கட்டாயப்படுத்துதலின் வாயிலாகவே நோக்குகின்றனர். கட்டாயமின்றித் தாமே ஏற்கும் வகையில் குழந்தை இலக்கிய உலகை விரிவுபடுத்த வேண்டும். தமிழில் இதற்கான தேவை மிக முக்கியமாய் இருக்கிறது. இது தமிழ் இதழியலாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியதாக உள்ளது.

தகவின் நேர்காணல், கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், தொடர்கள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

ஆசிரியர். ■

நேர்காணல்

அம்மு ராகவ்

பொய்களுக்குத்தான் முழக்கங்கள் தேவை.. உண்மை முனங்கினாலே போதும்..

-எழுத்தாளர் வசுமித்ரவுடனான நேர்காணல்

உங்களைப் பற்றிய அறிமுகம்..

ஊர் போடிநாயக்கனூர். அம்மா வீரலட்சுமி, அம்மாச்சி செல்லம்மாள் இருவரும் கூலித்தொழிலாளிகள். தம்பி நேதாஜி நரேந்திரநாத். பிழைப்பின் நிமித்தம் பல்வேறு கூலித்தொழில்களைச் செய்தேன். சித்தாள் தொடங்கி பனியன் கம்பெனி, ஹோட்டல் மேனேஜர் என்று பல்வேறு பணிகள். இப்பொழுது சின்னத்திரைக்கு வசனம் எழுதிக்கொண்டிருக்கிறேன். சினிமா நடிகனாகவும் இருக்கிறேன்.

ஆகவே நீங்கள் என்னைக் கொலை செய்வதற்குக் காரணங்கள் உள்ளன, ..எர்னெஸ்த்தோ ச்சே கெ'பாராவைக் கொலை செய்தல், கள்ளக்காதல், நித்ரா நீயல்லா வானம் எனக்குச் சிறு கரும்புள்ளி (ஆதிரனுடன் சேர்ந்து), தடை செய்யப்பட்ட புத்தகம், மரண இதிகாசம், பசலை ருசியறிதல், நுழை, இடக்கரடக்கல், ததாகம், கொலைக்குலவை ஆகிய கவிதை நூல்களை எழுதியிருக்கிறேன். ஆய்வுகளாக அம்பேத்கரும் அவரது தம்மமும், அம்பேத்கரியப் பார்ப்பனியம்.

"மொழியைக் கடவுளெனத் துதிக்காமல், நாயைப் போல் ஏவிவிட வேண்டும்" - இலக்கியம் எல்லாவற்றையும் இப்படி வெளிப்படையாகத்தான் பேசவேண்டுமா? பூடகமாகப் பேசுவதில் என்ன தவறு?

இலக்கியம் மறைமுகமாகப் பேச வேண்டிய விசயம் அல்ல. வெளிப்படையாகத்தான் பேசியாக வேண்டும். மறைக்க - மறக்கப்பட்ட விசயங்களைக் கொண்டுவருவதில் ஏன் மறைமுகம் காட்ட வேண்டும்.. வெளிப்படையாகப் பேசுவது என்பது உண்மையைப் பேசுவதென்பதாகும். நீங்கள் எவ்வளவுதான் பூடகமாகப் பேசினாலும் அதிலும் உண்மை இருக்க வேண்டும். வெளிப்படைத்தன்மை ஒரு படைப்புக்கு இல்லையெனில் அது யாருக்கோ தன் சேவகத்தைச் செய்கிறது என்பது என் கருத்து.

கவிஞன் அதிகாரத்திற்கு எதிரியாக இருக்க வேண்டும் என்றால், அவனுடைய இலக்கான விருதுகளை அடைவது எப்படி?

அதிகாரத்திற்கு எதிரியாகக் கவிஞர்கள் இருந்தால் அதிகாரத்திற்கு எதிரியாக இருப்பவர்கள் விருது கொடுப்பார்கள். இல்லையெனில் விருது வியாபாரமாக நடக்கும். இல்லையேல் நட்பின் அடிப்படையில் சாதி அடிப்படையில் குழுவாத விருதுகளாகக் கிடைக்கும். அத்தகைய விருதுகளை வைத்துப் படைப்பாளி பெருமைப்பட முடியாது. பின்வருபவர்கள் விருதைக் குறித்த ஏளனத்தையும் அதை வாங்கியவர் குறித்த திறனாய்வையும் முன்வைப்பார்கள். அது இறந்த படைப்பாளியைத் தோண்டித் தூக்கிலிடும். விருதுகளுக்காக எழுதுபவர்கள் விருதுகளை அடைய வாழ்த்துகிறேன். கவிஞர்களின் இறுதி இலக்கு விருதுகள்தான் என்றால் எதையாவது எழுதித் தனக்குத்தானே விருதுகள் வழங்கிக்கொள்ள வேண்டியதுதான். யாருக்கும் எந்த நட்டமுமில்லை.

உலகமயமாக்குதல் இலக்கியத்தை மாற்றியிருக்கிறது என்ற உங்களின் வாதம் சரியென்றாலும், அது சிலருக்குச் சேவகம் செய்கிறது என்பது உண்மையென்றாலும், அது ஒரு பரந்துபட்ட வெளியைத் திறந்துவிட்டிருக்கிறது, அதன்மூலம் சாமான்யனும் தன்னை ஒரு படைப்பாளியாக உருவாக்கிக்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தியிருக்கிறது என்பது சரியான போக்குதானே?

அனைத்துவிதமான அறங்களையும் உருவிவிட்டு வெறும் நுகர்வுக்கான பண்டமாய்த்தான் எழுத்தாளன் தெருவில் விடப்பட்டிருக்கிறான். எழுத்தாளனும் சாமான்யன்தான். சாமான்யர்களின் பொருட்டு எழுதும் அவன் உண்மையானவனும் கூட. அந்தச் சாமானியனைத்தான் உலகமயமாக்கல் கொன்றிருக்கிறது. பிச்சைக்காரர்கள் எண்ணிக்கை அதிகம் இருக்கிறது என்பதற்காக நாம் பெருமை கொள்ள முடியுமா என்ன? படைப்பு? அது நல்ல விசயந்தான். சாமான்யன் படைப்பாளியாக இருந்து எதை எழுதுவான். உலகமயமாக்கல் போட்ட பிச்சையில் நான் படைப்பாளன் ஆனேன் என்றா? இது உண்மையில் வேடிக்கையாக இருக்கிறது..

படைப்பாளியாக உருவாக்கிக்கொள்ளும் படைப்பாளர் தனது இடத்துக்கும் அங்கீகாரத்துக்குமாகத் தன்னை மட்டுமே முன்னிறுத்தி அலையும் அலைச்சல்கள் மிகக் கொடுமையாக இருக்கிறது. இதில் சாதிக்கும் பங்கிருக்கிறது. எந்தச் சாதியும் இதில் விதிவிலக்கில்லை. எழுத்தாளனின் சாதியை வைத்து இவர் எங்க சாதி எழுத்தாளர் என்பது வரை விருதுகள் அணைப்புகள் எல்லாம் உண்டு. விளைவு சாதிவாரியான பிழைத்தல்கள். சாமான்யர்கள் உயிர்வாழ்தலின் பொருட்டு கூலியாகிறார்கள். இவர்கள் தங்களை முன்னிறுத்த சாதியை விளம்பரம் செய்கிறார்கள். இது வரமல்ல சாபம். உலகமயமாக்கல் படைப்பாளர்களை உற்பத்தியாளர்களாகவும் படைப்புகளைப் பண்டங்களாகவும்தான் மாற்றியிருக்கிறது. இது வரவேற்கத்தக்கதல்ல.

தமிழில் இலக்கியவாதம் - இலக்கியவாதி என்பது பிழைப்புவாதமாக மாறிக்கொண்டிருக்கிறது. "இதுநாள் வரையில், மரியாதைக்கு உரியதாக இருந்த, பயபக்தியுடன் பார்க்கப்பட்டு வந்த, வாழ்க்கைத் தொழில் ஒவ்வொன்றையும்

முதலாளித்துவ வர்க்கம் மகிமை இழக்கச் செய்துவிட்டது. அது, மருத்துவரையும் வழக்குரைஞரையும், மதகுருவையும் கவிஞரையும், விஞ்ஞானியையும் தன்னிடம் ஊதியம் பெறும் கூலி-உழைப்பாளர்களாக ஆக்கிவிட்டது..'' என்ற மார்க்ஸ் எங்கெல்ஸின் வார்த்தை உறுதியாகிக்கொண்டே வருகிறது.

தமிழ் இலக்கியமும் அடையாள அரசியலும், தரகர்களும்; ஒரு இலக்கிய வரைபடம்- வாசக வழிகாட்டி என்கிற உங்களது படைப்பை ஓர் இலக்கிய அறிக்கையென எடுத்துக்கொள்ளலாமா?

அது படைப்பாளர்களும் வாசகர்களும் எடுக்க வேண்டிய முடிவு. என்ன நடந்தது? என்ன நடந்திருக்க வேண்டும்? எதை எப்படியெல்லாம் திரித்தார்கள்? மடைமாற்றினார்கள்? என்பதற்கான விளக்கங்கள் அதில் உண்டு. என் வரையில் அது ஒரு சிறிய சுட்டல்.

இலக்கியவாதிகளுக்குள் இருக்கும் சாதிய மனநிலையும் குழு மனப்போக்கும் குறித்துப் பின்நவீனத்துவம் பேசுகிறதா?

அத்தனைப் பிரிவுவாதங்களையும் பின்நவீனத்துவம் வளர்த்தெடுக்கும். சாதியை அடையாள அரசியலில் சேர்த்துப் பின்நவீனத்துவம் கைதட்டும். வரவேற்கும். அதற்குத் தத்துவ முலாம் பூசும். இங்கு பாதிப்பேருக்குப் புரியாமல் எழுதுவதுதான் பின்நவீனத்துவம் என்ற புரிதல் இருக்கிறது.

பின்நவீனத்துவம் ஒரு தத்துவமே அல்ல; அது எல்லாத் தத்துவங்களையும் நிராகரிக்கிறது. பின்நவீனத்துவம் வன்முறைக்கும் அதிகாரத்துக்கும் எதிரான அணுகுமுறை எனத் தன்னைப் பிரமாதமாய் அறிமுகப்படுத்திக்கொள்கிறது. ஆனால் தத்துவ அடிப்படை அல்லாத அணுகுமுறை எங்கே இருக்கிறது? எல்லா மொழித் தத்துவத்தையும் நிராகரித்தல் என்ற பெயரில் மதம், அரசியல் பொருளாதாரம், பகுத்தறிவு, மார்க்ஸியம் உள்ளிட்ட தத்துவங்களையும், அறிவியலையும் பெருங்கதையாடல் என நிராகரித்துவிடுகிறது.

பின்நவீனத்துவத்துக்கு வர்க்கம், அரசு, குடும்பம், மரபு, ஒழுக்கம் போன்றவை மொத்தத்துவப்படுத்துதலின் அடையாளங்கள். இவற்றை நிராகரிக்க வேண்டும் என்கிறது. எல்லா அதிகாரங்களையும் மறுத்து - பொதுக்கருத்து என்ற ஒன்றை நிராகரிக்கும் பின்நவீனத்துவம் அநீதிக்கு எதிரான கலகத்தின் தத்துவம் கூட அல்ல. உலகமயமாக்கலின்கீழ்

நுகர்வு அலகாக மாறிக் காணாமல்போன தனிமனிதனை மீட்டெடுத்துத் தனியனாக்கி அவனை ஒழுங்கற்ற குழப்பவாதி ஆக்குகிறது.

பின்நவீனத்துக்கென்று இருக்கும் நோக்கம் கலைப்புவாதமே. அனைத்துத் தனி மனித அவஸ்தைகளையும் வரவேற்றுத் தத்துவ முகம் கொடுத்துத் தனியாய் நிற்கச் சொல்லும். நோய்க்கான காரணத்தை விளக்காது. நோயை மட்டுமே வியாக்கியானத்தில் எடுத்துக்கொள்ளும். தனிமனிதத்துவமே சகல விடுதலை என்று கூறும். பிறகு தனது ஏற்படுத்தப்பட்ட அவஸ்தைகளைப் படைப்புகளாக அதன் பேரில் வைக்கும். அதற்கும் சமூகத்துக்கும் எந்தச் சம்பந்தமும் இருக்காது.

இங்கிருந்துதான் ‘எனது படைப்பு’ ‘என் சுதந்திரம்’ என்று பேசப்படுகிறது. எனது படைப்பை எவரும் விமர்சிக்கக் கூடாது என்கிற அகங்காரம் அதனடிப்படையில்தான் உருவாகிறது. மக்களுக்குப் புரியவில்லை என்றால் அது அவர்களது பாடு என்றும் விலக்கத்தக்க உறவுகளைச் சித்தரித்தும் ஆபாசமாகப் பொருத்தமற்ற கூற்றை வைப்பதும் அதன் பேரில் விளம்பரம் தேடிக்கொள்வதும் நடக்கிறது. ஆங்கிலப் படங்களைப் பார்த்துத் தமிழில் பெயர்களை வைத்துக் கதை எழுதுவதெல்லாம் நடக்கிறது. படம் பார்த்துக் கதை சொல் என்பதை அவர்கள்

இன்னமும் மறக்காமல் நவீன எழுத்தாளர்களாய் உருவாகிக்கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் தங்களது எழுத்துக்களில் இன்னமும் குடும்பத்தைத் தாண்ட முடியாமல் தவிப்பது புரிகிறது. அயலக சினிமாக்களில் குடும்பம் தாண்டிய அல்லது குடும்பத்தைக் காக்கத் தவிக்கும் ஏற்பாடுகளை எழுதிப்பார்க்கத் துணிகிறார்கள். விளைவு ரெண்டும்கெட்டானாய்த்தான் படைப்பு வந்துவிழுகிறது. இதில் பேர்பெற்றவர்கள் உள்ளனர். ஆதவனின் என் பெயர் ராமஷேசன் நாவலில் இருக்கும் ஒரு பாரா போன்று தன் வாழ்நாளில் எழுதிவிடமாட்டோமா பசித்த மானிடத்தில் ஒரு பக்கத்தையாவது எழுதிவிடமாட்டோமா என்று தவிக்கும் பல பேரைப் பார்த்திருக்கிறேன். சாத்தியமில்லை. காரணம் ஒன்றுதான். தான் அறியாத - நோக்கமற்ற ஒன்றை - தன் அடையாள நெருக்கடிக்காக எழுதவும் எழுதி விளம்பரம் தேடிக்கொள்ளும் ஆவலும், பிழைப்புவாதமும்தான்.

அவப்புகழ் தேடியாவது தன்னை நிரூபித்துக்கொள்ளத் துடிக்கும் களமாகத் தமிழ் இலக்கியம் மாறிவருவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். அசிங்கமாகப் பேசிவிட்டாலே அது இலக்கியத்தில் சேர்த்தியாகிவிடுகிறது. என்ன செய்வது? காலத்தில் மிஞ்சவே கூடாது என்ற கங்கணம் கட்டிக்கொண்டு அப்பொழுதைய சம்பவங்களைப் படைப்புகள் என்ற போர்வையில் உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். நடைமுறையில் ஒரு பாடல் பாப்புலராவது அடுத்து ஒரு புதிய பாடல் பாப்புலரானதும் மறக்கப்படுவது போல் இங்கு படைப்புகள் உருவாகத் தொடங்கிவிட்டன.

யதார்த்த எழுத்து செத்துவிட்டது என்று இவர்கள் முதலில் கூறியதற்குக் காரணம், தங்களது அடையாள நெருக்கடியில் தங்களுக்கான அடையாளத்தை எப்படியாவது, அவப்புகழ் தேடியாவது தங்களை வெளிச்சத்தில் மின்னச் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் செயற்கையான மற்றும் அதிர்ச்சி ஏற்படுத்தக்கூடிய வக்கிரங்களை

எழுத்தாக வைக்க முடியவில்லையே என்கிற மனநிலைதான். ஆனால் யதார்த்தம் செத்துவிட்டது என்று உரக்க முழங்கியவர்கள் தங்களது படைப்புகளில் குடும்பத்தைத்தான் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். உலகுதழுவிய பிரச்சினைகளை இவர்களால் காணமுடியாத பரிதாபம்தான் இங்கு இலக்கியமாக இருக்கிறது. விளைவு - அம்மா...அம்மம்மா.. அப்பா அப்பப்பா...

இது மிக விரிவாகப் பேச வேண்டிய ஒன்று என்பதை மட்டும் சுருக்கமாகச் சொல்லிக்கொள்கிறேன்.

தமிழ்ச் சிந்தனைப்பள்ளி அல்லது இலக்கியப்பள்ளியைத் தற்போதுள்ள விட்டேத்தியான சூழ்நிலையில் கட்டமைக்க முடியுமா?

சிந்தனைப்பள்ளி குறித்து ஏற்கனவே எழுதியுள்ளேன். நீங்கள் இங்கு கேட்பதால் அதையே கொஞ்சம் விரிவாக இணைக்கிறேன். தமிழில் இசங்களின் வருகைக்கு முன் எந்தப் படைப்பும் எந்தப் படைப்பாளியும் இசத்தை முன்வைத்து இங்கு உரையாட வரவில்லை. க.நா.சு, வெங்கட் சுவாமிநாதன், அதற்கடுத்து சுந்தரராமசாமி வகையிலான விமர்சனங்களில் அதிகமும் ரசனை சார்ந்த விமர்சனமும் குழு மனப்பான்மையுமே விமர்சனமாக இருந்தது. இன்னும் குறிப்பாகச் சொன்னால் கலை கலைக்காகவே எனச் சொன்ன பார்ப்பன சைவ வெள்ளாள விமர்சனமாகச் சாதி சார்ந்து இயங்கியது. படைப்பாளியும் விமர்சகனும் மாறி மாறி இயங்கியது இந்தப் புரிதலின் வெளியில்தான். உழைக்கும் வர்க்கமாக இவர்கள் இல்லாத நிலையில் இது மேலெழும்புவது புரிந்துகொள்ளத்தக்கதே.

இதற்கு எதிராக, அமைப்புரீதியாய், தத்துவப் பின்புலத்தை அடியொற்றி நடந்த விமர்சகர்களும் விமர்சன இயக்கங்களும் உண்டு. ஆனால் அவர்கள் இடதுசாரிகள், முற்போக்காளர்கள் என்ற காரணத்தினாலேயே ஒதுக்கப்பட்டும், ஒட்டுமொத்த மார்க்சியமே இலக்கியத்திற்கு எதிரி என்றும் வசைபாடப்பட்டார்கள். வர்க்கப் பார்வையை மட்டும் வைத்துக்கொண்டு ஒரு சமூகத்தை ஆய்வுக்கு உட்படுத்த முடியாது, வர்க்கம் என்பதெல்லாம் பெருங்கதையாடல் என்றவர்கள் அதற்குப் பதிலீடாக எந்த மாற்றுக் காரணியையும் முன்வைக்காமல் இசங்களில் தலை நுழைத்து நுண் அரசியல், மீச்சிறு அலகுகள் நிறுவன எதிர்ப்பு, அமைப்பு எதிர்ப்பு என மேற்கோள்களை வைத்தார்கள். இன்னும் அலை ஓய்ந்தபாடில்லை. கலை வேறு மக்கள் வேறு, கலைக்கு மக்களைப் பேச வேண்டிய தேவை இல்லை. அது விரும்பினால் எதுவும் பேசும் என்ற ரீதியிலான விவாதங்களும் நடந்தது உண்டு. நடந்துகொண்டிருக்கிறது.

சுருங்கச் சொன்னால் தமிழில் சிந்தனைப் பள்ளிகளும் எழுத்தாளர்களுக்கு வாய்க்கவில்லை. ஒரு வாதத்திற்காகத் தமிழ்ச் சிந்தனைப்பள்ளி, இலக்கியப்பள்ளி என எடுத்துக்கொண்டால் இங்கு சுந்தர ராமசாமியின் சிந்தனைப் பள்ளியில் வந்தவர்கள் ஜெயமோகன் தொடங்கி மனுஷ்யபுத்திரன், லஷ்மி மணிவண்ணன், சங்கர ராமசுப்பிரமணியன் வகையறாக்கள், அ.மார்க்ஸ் சிந்தனைப்பள்ளியை முன்வைத்து இயங்கியவர்கள் என்று பார்த்தால் ஷோபா சக்தி, ஒரு கால கட்டம் வரை வளர்மதி இன்ன பிறர். இதில் பலர் சேர விலகக் காரணங்கள் விவாதங்கள் இருந்திருக்கின்றன. இதற்குப் பின் அன்று தொடங்கி இன்று தற்காலச் சிந்தனைப் பள்ளி என்று பார்த்தால் கோணங்கி சிந்தனைப் பள்ளி.

இப்போது இந்து மடங்கள் போய் இலக்கிய மடங்கள் உருவாகியிருக்கின்றன. அச்சுறுத்தும் பிரச்சினைகளை மன அமைதியினால் எதிர்கொள்ளுங்கள் என அது தொடர்ந்து பிரச்சாரம் செய்துவருகிறது. அதன் கருதுகோள்கள் அனைத்தும் சாந்தி சாந்தி என்று முழங்குவதில்தான் போய் முடிகிறது. மடாதிபதிகளின் தூய வைதீக மரபையே ஜெயமோகன் இலக்கிய முன்வைப்பாக மாற்றிக்கொண்டிருக்கிறார்.

அதுதவிர, அச்சகம் அறுகியிருந்த காலத்தில் தங்களை மேதைகளாகக் காட்டிக்கொண்ட இந்தச் சிந்தனைப் பள்ளிகளைச் சார்ந்தவர்கள், இப்பொழுது எவர் வேண்டுமானாலும் புத்தகம் போடலாம் என்கிற காலம் வந்ததும் மறக்கப்படுகிறார்கள். விளைவு தன்னை மறந்து

போகக் கூடாது என்பதற்காகப் புதிதாக எழுத வருபவர்களைத் துதி செய்கின்றனர். விளம்பர வெளிச்சத்திற்கேற்ப பிஸ்கெட் பாக்கெட்டுகள் கிடைக்கின்றன. அவர்களும் இதற்குப் பதில் அளிக்கும் முகமாக என் சிந்தனையாளனே என்று கொஞ்சிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் படைப்பு முச்சந்தியில் சிரித்துக்கொண்டிருக்கிறது.

அதே சமயம் நா.வானமாமலை சிந்தனைப்பள்ளியை எடுத்துக்கொண்டால், மே.து.ராசுகுமார் தொடங்கி தோதாத்ரி, ஆ.சிவசுப்பிரமணியன், முத்துமோகன், பக்தவச்சல பாரதி, க.பஞ்சாங்கம் வரை இன்னும் பட்டியல் நீளும். விவாதத்திற்காக முன்னகர்த்தினாலும் பொருட்படுத்தக் கூடிய ஆய்வுகளை முன்னெடுத்த சிந்தனைப் பள்ளி இதுதான். இவர்கள் இலக்கியவாதிகள் அல்ல.

இதற்கடுத்துத் தனித்தனி விமர்சகர்களாக குறிப்பிட்டால் எஸ்.என்.நாகராசன் இடதுசாரிக் கருத்தியலை மேலை மார்க்சியம் கீழைய மார்க்சியம் எனப் பிரித்துக் கடைசியில் வைணவத்துக்குச் சென்று சேர்ந்து மார்க்சியத்தில் அன்பில்லை என இந்துத்துவச் சிமிழில் அடங்கினார். கோவை ஞானி தலித்தியத்திற்குத் தத்துவப் பின்புலம் இல்லை என்று கூறி இந்து மெய்யியலில் எல்லாம் உள்ளது எனக் கூறித் தமிழ்த் தேசியத்தை விதந்தோதினார். சோதிப்பிரகாசம் ஜெயமோகனால் சிரிக்கத் தெரிந்த மார்க்சியர் எனப் பட்டம் சூட்டப்பட்டுத் தான் எழுதிய ஆய்வுகளுக்கு எதிராக, ஜெயமோகனது இந்து தத்துவ தரிசன நூலுக்கு முன்னுரை கொடுத்தார். இவ்வகையில் பலரும் இடம்பெறுவார்கள்.

இந்தத் தத்துவச் சிந்தனைப்பள்ளிகள் தவிர, அமைப்பு விதியை ஏற்றுக்கொண்டு எழுத்தாளர்களுக்கென அமைப்பையும் பொறுப்பையும் சொல்லி அவர்களை வழி நடத்துகிற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கான இலக்கிய அமைப்பான தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கம், கலை இலக்கிய பெருமன்றம் போன்ற அமைப்புகள். எல்லா அமைப்புகளையும் பாதிப்பது போல் இதிலும் அடையாள அரசியல்வாதிகள் புகுந்து குழுவாதங்களை இலக்கியமாகவும் அறிவிக்கின்றனர்.

மார்க்சியத்தின் பின்புலத்தில் இருக்கும் அமைப்புகளான இதில் வருந்தத்தக்க பெரிய பிரச்சினை ஒன்று இருக்கிறது. மார்க்சிய ஆய்வாளர்களுக்கு இத்தகைய அமைப்புகளில் பெரிய மரியாதை இல்லை. கதைகளை எழுதுவது கவிதைகளை எழுதுவது அதன்பால் ரசனையோடு சமூகத்தை மாற்றும் படைப்பு இது என்று கற்பனையில் உலாவுவது போன்ற

விசயங்கள்தான் அதிகமும் நடக்கின்றன.

உண்மையில் இங்கு படைப்பாளர் என்றால் கதை கவிதை பாடல் எழுதுபவரை மட்டுமே குறிக்கப்படும் சொல்லாக உருமாறிப் போயிருக்கிறது. ஆய்வாளர்களை எவரும் முன்வைப்பதே இல்லை.

புனைவுக்கு இருக்கும் மரியாதை அபுனைவுக்கு இல்லை. அதனால்தான் சொல்கிறேன் இந்த வரிசையே தவறு. அபுனைவு – புனைவு என்றுதான் வரிசைப்படுத்த முடியும். உண்மை பொய் என்ற வரிசைக்குத் தத்துவ அடிப்படை உண்டு. பொய்- உண்மை என்ற வரிசை எதை முன்னிலைப்படுத்துகிறது என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். கதை கவிதை எழுதுகிறவர் தன் மனநிலையைத் தானாக உண்டாக்கலாம். கேட்டதில் பார்த்ததில் எல்லாம் அவரது மனநிலை பதிவாகியிருக்கும். அதனால்தான் வாசிப்பவர்கள் தங்கள் மனநிலைக்கேற்ப வித்தியாசமான பார்வைகளையும் விமர்சனங்களையும் வைக்க வாய்ப்பளிக்கிறது.

ஒரு கதையை - கவிதையை இப்படிப் புரிந்துகொள்ள வேண்டும் அப்படிப் புரிந்துகொள்ள வேண்டும் என்கிற பிரச்சினை இங்கு தொடங்கி, புரிகிற மாதிரி எழுதினால் என்ன என்ற நிலைக்கு வந்துவிடுகிறது. ஆனால் அபுனைவில் அப்படிப்பட்ட சாத்தியங்கள் குறைவு. கிட்டத்தட்ட இல்லையென்றே கூறலாம்.

ஒரு கட்டுரையை ஆவணத்தை எழுதும் படைப்பாளி தான் எடுத்துக்கொண்ட விசயம் குறித்துப் பல்வேறு ஆய்வாளர்களுடன் மக்களுடன் உரையாட வேண்டியிருக்கிறது. அவர்களின் கருத்துக்களைக் கேட்க வேண்டியிருக்கிறது. அதன் பின் தன் கருத்தை ஆணித்தரமாய் வைக்க வேண்டியிருக்கிறது. இது எல்லாம் போக அந்தக் கட்டுரை யாருக்காக எழுதப்பட்டது, அதன் நோக்கம் என்ன என்பதைக் கட்டுரை தெளிவாக அறிவித்திருக்கும். வியாக்கியானத்தை இதில் நாம் சேர்க்க முடியாது.

உதாரணத்திற்கு நான் இப்படிச் சொல்கிறேன். ஒரு ஊரில் ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்தவர் ஒரு கவிதையோ நாவலோ எழுதுகிறார். இதைப் படிக்கும் ஒடுக்கும் சாதியைச் சார்ந்தவர் கண்ணீர் மல்கலாம். ஆனால் அது கூட அவருக்கு அனுகூலத்தையே தருகிறது. தான் எவ்வளவு நல்லவராக இருந்தால் அழுதிருப்பேன் என்கிற மனநிலையை அவருக்கு சாதகமாகத் தருகிறது. யோசித்துப் பாருங்கள் இதையே ஆய்வாக அந்த ஊரில் இன்னார் இந்தப் பெயருடையோர் இந்தச் சாதியால் படுகொலை செய்யப்பட்டார் என்று ஆவணத்தை வைத்தால் அதை வாசிக்கும் ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்தவரின் மனநிலை என்னவாக இருக்கும். அழுவாரா? ஆத்திரப்படுவாரா? அம்பலப்படுவாரா?

ஆளும் வர்க்கம் எப்பொழுதும் மக்களுக்குக் கதைகளைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறது. நாம் பதிலுக்குக் கதையைச் சொல்வது சரியா? இல்லை ஆவணங்களை அதன் முகத்தில் எறிவது சரியா? என் வரையில் இது ஆவணங்களின் யுகம் என்றே சொல்வேன். ஒரு கூட்டத்தில் தமுஎகசவைச் சேர்ந்த கதையாளர் ஒருவர் கேட்டார். அப்படி எந்த ஆவணம் சமூகத்தை மாற்றியிருக்கிறதென்று. கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை என்றேன். அவ்வளவுதான். இந்த நிலையை இரு பெரும் அமைப்புகளான தமுஎகச- க.இ.பெ. ம- வும் தங்களின் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

பைபிள் கீதை குரான் இவைகள் கதைகளாலானவை. பதில்களைக் கதையால் திருப்பித் தரமுடியாது, ஆவணத்தாலும்- அறிவாலும் நாம் திருப்பித் தரவேண்டும். கட்டுரையாளர்களை வரவேற்க வேண்டும். இங்கு கதை கவிதைகளுக்கு வாசகன் உண்டு. கட்டுரைக்கு அப்படியில்லை. அங்கு எழுதப்பட்ட பிரச்சினையின் அடிப்படையில் தோள்கொடுக்கும் தோழர்களும் பிரச்சினைக்கு உள்ளானவர்களும்தான் இருப்பார்கள். உண்மையை அதிகமும் நாம் வரவேற்போம். வரவேற்கவேண்டும்.

இவ்வமைப்புகள் போக இலக்கியத்தின்பால் நாட்டம் கொண்டு ரசனை மரபை முன்னெடுக்கும் உதிரியான சில அமைப்புகளும் இருக்கின்றன.

அதன் செயல்பாடுகள் படைப்பாளிகளின் படைப்புகளுக்குத் திறனாய்வைச் செய்யாது பாராட்டுதல்களைச் சொல்லிக் கூட்டம் சேர்க்கிறது. இன்று திறனாய்வு என்பது இலக்கியவாதிகளுக்கு எட்டிக்கசப்பாய் முகம் சுளிக்கும் வசையாய்த் தெரிகிறது.

மேற்சுட்டிய அமைப்பு சாராது இசங்கள் சார்ந்து எழுதிய அனைவருக்கும் ஒரு ஒற்றுமை என்னவெனில் மார்க்சியத்தைத் தமிழ்ச் சூழலில் வைத்துக் கலாச்சாரரீதியாக ஒத்துவராது என்று பண்பாட்டு விமர்சன அடிப்படையை வைத்து மட்டுமே முடிவுக்கு வந்தவர்கள். அரசியல் பொருளாதாரம் குறித்துப் பெரும்பகுதியாக, ஒப்பீட்டளவில் எதையும் பெரிய அளவில் முன்வைத்ததில்லை. பின்நவீனத்துவம், பன்மைகள், உடைத்தல்கள், இவைகள்தான் மாற்றுச் சிந்தனை எனச் சொல்வது. இரண்டாவது, மனிதனுக்கு மதம் முக்கியம், அன்பு முக்கியம் எனத் தங்கள் நோக்கில் இந்து தத்துவ இயலை முன்வைத்தும் தமிழ்த் தேசியத்தை முன்வைத்தும் பேசியவர்களே.

தமிழ்ச் சிந்தனைப்பள்ளியை இப்பொழுதும் கட்ட முடியும். முதலில் அதற்கு சிந்தனைப்பள்ளிகள் என்றால் என்ன அதற்கான தேவை என்ன என்பதை அறிந்திருக்க வேண்டும். பண்பாட்டு அடிப்படையை ஆதாரமாகக் கொண்டு பொருளாதார அடிப்படையைப் பின்னுக்குத் தள்ளுவது மிகவும் ஆபத்தானது. விளைவு அதே பண்பாட்டு அடிப்படையைக் கொண்டுதான் பாசிசம் தன்னை நிலைநிறுத்துகிறது. விளம்பரப்படுத்துகிறது.

பொய்களுக்குத்தான் முழக்கங்கள் தேவை.. உண்மை முனங்கினாலே போதும்.

தற்போதைய எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் என்று யாரையெல்லாம் அடையாளம் காட்டுவீர்கள்?

முதலில் இந்த தற்போதைய என்ற வார்த்தை படைப்புகளுக்கு உதவாது என்றே எண்ணுகிறேன். தற்போது குப்பைக் கொட்டிகளும் இருக்கிறார்கள், உயிரோடு இல்லாமல் இன்னும் படைப்பாளிகளை உருவாக்கும் படைப்பாளிகளும் இருக்கிறார்கள். எனவே 'தற்போதைய' என்ற காலத்தைத் தள்ளிவிட்டு எனக்குப் பிடித்த படைப்புகளையும் படைப்பாளர்களையும் முன்மொழிகிறேன். குறிப்பாக மொழியை அளவுகோலாக நான் கொள்வதில்லை.

எனது கருத்துவரையில் சில படைப்புகளில் உயிரோடு உலாவும் எழுத்தாளர்கள் சில படைப்புகளில் பிணங்களாகக் காட்சியளிக்கிறார்கள். இதில் இன்னொரு பிரச்சினையும் இருக்கிறது. பொதுவாக படைப்பு என்றாலே இலக்கியம் மட்டுமே கவனத்தில் கொள்ளப்படுகிறது. அதை நான் ஏற்பதில்லை. உண்மையில் சமூகத்தை மாற்றியமைத்த மாபெரும் படைப்புகள் புதினங்களாக கவிதைகளாக இங்கு இல்லை. கோட்பாடுகளாகத்தான் இருக்கின்றன. படைப்பு என்றால் அதற்குத்தான் நான் முதலிடம் தருவேன்.

புனைவு – அபுனைவு என்கிற வரிசையே தவறு. அபுனைவு- புனைவு என்றுதான் இருக்க வேண்டும். அந்தவகையில், கார்ல்மார்க்ஸ்-எங்கெல்ஸ், லெனின், ஆகஸ்ட் பேபல், தேவிபிரசாத் சட்டோபாத்யாய, கோசாம்பி, டி.டி.கோசாம்பி, டி.என்.ஜா, ஆர்.எஸ்.சர்மா, ராகுல சாங்கிருத்தியாயன், ரொமிலா தாப்பர், ரங்கநாயகம்மா, இன்னும் ஏனைய இடதுசாரிப் படைப்பாளிகள். தமிழில்- தேவ பேரின்பன், தி.சு.நடராசன், கார்த்திகேசு சிவத்தம்பி, பஞ்சாங்கம், ராஜ்கௌதமன், ரவிக்குமார், எஸ்.வி.இராஜதுரை, அ.மார்க்ஸ், யமுனா ராஜேந்திரன் போன்றோர்.

புனைவுகளில் சில படைப்புகள் விதிவிலக்கானவை. ஏன் சொல்கிறேன் என்றால் நாவலாசிரியர்கள் அடுத்தடுத்த புனைவுகளில் தோல்வியைத் தழுவுவதும் உண்டு. அதனால் படைப்புகளின் பெயர்களை முன்மொழிகிறேன். காதுகள், என் பெயர் ராமஷேசன், பசித்த மானிடம், ஜே.ஜே. சில குறிப்புகள், சிலுவைராஜ் சரித்திரம், பீக்கதைகள், கூளமாதாரி, தாண்டவராயன் கதை, ஏழாம் உலகம், விஷ்ணுபுரம், பின் தொடரும் நிழலின் குரல், வெயிலைக் கொண்டு வாருங்கள், மகாராஜாவின் ரயில் வண்டி, ம், சொல் என்றொரு சொல் போன்ற நாவல்கள்,

கவிதைகளில் சங்க இலக்கியங்கள் தொடங்கி, இரவுகளின் நிழற்படம், அமுதபருவம் வலம்புரியாய் அணைந்ததொரு சங்கு, ஒடக்கு, ரத்த சந்தனப்பாவை, காமக்கடும்புனல், உறைமெழுகின் மஞ்சாடிப் பொன், கருப்பு வெள்ளைக் கவிதைகள், பேரழகிகளின் தேசம், முலைகள், நெரிந்து, குற்றத்தின் நறுமணம், அக்காளின் எலும்புகள், ஏழாம் நூற்றாண்டின் குதிரைகள் போன்ற படைப்புகள் இருக்கின்றன. இதோடு மொழிபெயர்ப்புகள் நிறைய உண்டு. தனியே பட்டியல் தேவைப்பட்டால் விரிவாகக் கொடுப்பேன்.

எழுத்தாளர்களுக்கு இணையாகப் பதிப்பகங்கள் அதிகம் உருவாகிறதே.. அது குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

படைப்புகளும் வந்தால் நல்லது என்று நினைப்பேன்.

தேனி மாவட்டத்தின் சினிமா தாகம், வசுமித்ர என்ற படைப்பாளியைச் சிதைத்துவிடும் என்கிற பயம் இருக்கிறதா?

எனக்குத் தாகமெல்லாம் இல்லை. பிழைப்பிற்கான வழி. அவ்வகையில் என்னை ஓர் கூலித் தொழிலாளியாகவே நினைக்கிறேன்.

எழுதிக்கொண்டிருக்கும் படைப்பு பற்றி ஏதேனும் முன்னோட்டம் கூற இயலுமா?

புத்தனின் மதுக்குடுவை என்கிற உருவம் வடிவுசெய்யப்படாத ஒரு பனுவல் இருக்கிறது. அயோத்திதாசர் குறித்து எழுதிக்கொண்டிருக்கிறேன். கவிதைகள் நாவல்கள் குறித்தான எனது திறனாய்வை விரித்து எழுதித் தனியாக ஒரு தொகுப்பாகக் கொண்டுவரும் எண்ணம் இருக்கிறது. பிணிகொள் மூஞ்சிப் பிசாசகன் என்ற ஒரு கவிதை நூலும் இருக்கிறது. உடனடியாகச் செய்யும் பணியாக கலை – மதத்தின் அந்தப்புரம் எனும் ஒரு ஆய்வை எழுதி வைத்திருக்கிறேன். முன்னர் கூறியதைப் போல புனைவு அபுனைவு செயல்படும் விதம், மதத்தின் அந்தப்புரமாக இலக்கியம் ஆன கதை இது குறித்தான விரிவான ஆய்வாக அதை முன்வைப்பேன்.

உங்களின் எழுத்துப் பயணத்தில் இதை எழுதிவிட்டால் போதும் என்று ஏதாவது ஒரு இலக்கு வைத்திருக்கிறீர்களா?

மார்க்சியத்திற்கு என்னாலான பணிகளைச் செய்ய வேண்டும் என்பது தவிர வேறெந்த இலக்கும் இல்லை. மார்க்ஸையும் எங்கெல்ஸையும் 'ஆசான்கள்' என்று அழைப்பதற்கான எனது தகுதியை அதிகமும் வளர்த்துக்கொள்ள விரும்புகிறேன். அவ்வளவே.

இணையர்கள் இருவரும் ஒரே தளத்தில் இயங்குவதன் சாதக பாதக அம்சங்கள் பற்றி?

மார்க்சியம்தான் இருவருக்குமான ஒரே தளம். மகிழ்ச்சியான விசயம். ஒருவருக்கொருவர் தத்துவார்த்த தளத்தில் பங்களிப்பதும் கற்றுக்கொள்வதும் உதவியாய் இருக்கிறது.

கொற்றவையும் காதலின் அறமும்?

எனது மிகச்சிறந்த மாணவி. என் ஆசிரியரும் கூட. காதலுக்கான அறமென்று நான் கருதுவது மரியாதையை.

உங்களின் சேகரிப்பில் இருப்பவற்றில் வாசிக்காத புத்தகங்கள் என்று எதுவும் இருக்காது என்றே சொல்லலாம். சமீபத்திய வாசிப்பில் சிறப்பான புத்தகம்/புத்தகங்கள் என்று ஏதேனும் இருக்கிறதா?

வாசிக்காத புத்தகங்களும் இருக்கின்றன. போரும் அமைதியும் போன்ற படைப்புகள் இருக்கிறது. கம்பராமாயணம், மஹாபாரதம் இருக்கிறது. அவ்வப்போது தோன்றுகிறபோது ஆய்வின் நிமித்தம் எடுத்து அவற்றைப் புரட்டுவேன். மற்றபடி வாசித்துக்கொண்டே இருக்க வைக்கும் கட்டுரைகள் உண்டு. மறுவாசிப்புக் கோரும் நூல்களே அதிகம். மூலதனத்தை முழுமையாக வாசிக்கும் தாகம் இருந்துகொண்டே இருக்கிறது. இக்கேள்வியை அடிப்படையாக வைத்து ஒரு சிறு விண்ணப்பம். அம்பேத்கரின் படைப்புகள் பெருந்தொகுப்பாக வர இருக்கிறது. அதை யாரேனும் வாங்கிக்கொடுத்தால் நன்றியுடையவனாய் இருப்பேன்.

வசுமித்ர கலகக்காரரா?

மார்க்ஸின் மாணவன். ■

● கவிஜி

திரைப்படம் : The Platform

இந்த உலகின் எல்லா மூலை முடுக்குகளிலும் விதிக்கப்பட்டது போலச் சபிக்கப்பட்ட இரண்டு இனங்கள் இருக்கும்.

ஒன்று பணக்கார இனம். ஒன்று ஏழை இனம். அது வாழ்விலும் சாவிலும் தனக்கென்று உருவாக்கிக்கொண்ட தனித்துவத்தோடுதான் எப்போதும் உலாவிக்கொண்டிருக்கிறது. வெற்றி தோல்வி குற்றம் வன்மம் என்று எல்லாமே அதனதன் கோணத்தில் அரங்கேறிக்கொண்டே இருப்பது அதன் அடிப்படை.

இச்சூழலில் நவீன யுக்தி கொண்டு வடிவமைக்கப்பட்ட *(Vertical Self-Management Center)* சிறையில் ஹீரோ மாட்டிக்கொள்கிறான்.

கதையே எதிர்காலத்தில்தான் நடக்கிறது. சிறையில் சக கைதியாக ஒரு வயதானவர் இருக்கிறார். அவன் பேச்சு கொடுத்துக்கொண்டேயிருக்கிறான். அவரோ எதற்கோ காத்திருக்கிறார். சற்று நேரத்தில் உணவு மேசை.. திறந்த லிப்ட்டைப் போலக் கீழிறங்கி வந்து அவர்கள் அறையில் நிற்கிறது. உடலில் கூரிய விழிகளைக் கொண்டிருக்கும் பெரியவர் ஒரு அமானுஷ்யத்தின் அதிரூபர் போல வேகமாய் வேகமாய் ஒரு வெறி கொண்ட மிருகத்தின் ஆழ்ந்த அமைதியோடு இரு கைகளாலும் உணவை எடுத்தெடுத்து வாய்க்குள் திணிக்கிறார். இரு கைகளிலும் அள்ள முடியாத பசியைத் திணித்துத் திணித்து அடைத்து அடைத்து உடல் நிரப்புகிறார்.

“சீக்கிரம் சாப்பிடு. அப்புறம் கஷ்டப்படுவ” என்று அறிவுறுத்துகிறார்.

ஹீரோவுக்கு ஒன்றும் விளங்குவதில்லை. என்ன நடக்கிறது என்று புரியாமல் உணவு மேசையைப் பார்த்துக்கொண்டே ஒரே ஒரு ஆப்பிளை மட்டும் எடுத்து வைத்துக்கொள்கிறான். பெல் அடிக்கிறது.

அடுத்த நிமிடம் உணவு மேசை கீழ் நோக்கி நகர.. அதே நேரம் அந்த அறை குளிரால் நிரம்பத் துவங்குகிறது. ஹீரோவைப் பார்த்து அந்த ஆப்பிளைக் கீழே நகர்ந்துகொண்டிருக்கும் உணவு மேசை மீது வீசி விடு.. என்று அர்த்தத்தோடு கத்துகிறார் பெரியவர்.

எதை ஒன்றையும் பத்திரப்படுத்தக்கூடாது என்பது விதி. இல்லையெனில் சூடோ குளிர்ச்சியோ அறையைக் கொல்லும் என்பது மாற்று.

ஹீரோ குளிர் தாங்காமல் ஆப்பிளை விட்டெறிகிறான்.

அந்த வெர்டிகள் வடிவத்துள் நடக்கும் தார்மீகமற்ற செயல்கள் ஒரு மாதிரி புரிய ஆரம்பிக்கின்றன. நாட்கள் நகர்கின்றன. அன்று இரவு சிவப்பு லைட் எரிகிறது.

ஹீரோவுக்கு அது புதிது. 'நாம் இருப்பது 48வது அறை. நாளை விடிகையில் நாம் எந்த அறையில் இருப்போம் என்று நமக்குத் தெரியாது. கீழே 150வது அறைக்கோ அதைத் தாண்டியோ போய்விட்டால் சாவு மட்டும்தான் விடை. அது நடக்கக்கூடாது என்று வேண்டிக்கொள்' என்று சொல்லித் தூங்கிவிடுகிறார். உள்ளே வருகையில் ஏதாவது ஒரு பொருள் கொண்டு வரலாம் என்ற சட்டதிட்டத்துக்கு உட்பட்டுத் தான் கொண்டு வந்த புத்தகத்தைப் படித்துக்கொண்டே தூங்கிவிடுகிறான் ஹீரோ.

விடியலில் அவர்கள் 171வது அறையில் இருக்கிறார்கள். திடுக்கிட்டு விழிக்கும் ஹீரோவால் கட்டிலில் இருந்து எழ முடியவில்லை. துணிகளால் ஆன கயிறு கொண்டு கட்டிலோடு கட்டப்பட்டிருக்கிறான். கட்டை அவிழ்க்கும் போராட்டத்தோடு கத்திக் கூச்சலிடுகிறான். எதுவும் நடப்பதில்லை. ஒன்றும் புரியாமல் தவிக்கிறான். யார் என்னைக் கட்டிப் போட்டது என்று கத்துகிறான்.

நான்தான் என்று சலனமற்ற புன்னகையில் சொல்லியபடியே உடல் மொழியில் வன்மத்தை நெகிழவிட்டுக் கழுத்து குறுகிய பார்வையைத் தருகிறார் பெரியவர்.

அதே நேரம் காலியான வெறும் உணவு மேசை வந்து நிற்கிறது. வெறி கொண்டு தேடும் பெரியவருக்கு ஒன்றுமே கிடைப்பதில்லை. ஹீரோவைப் பார்த்து... "இதுக்குத்தான் உன்னைக் கட்டிப் போட்ருக்கேன். நீ இளைஞன். உனக்கு என்னைவிட பலம் அதிகம். கட்டிப் போடாம உன்ன எப்படி வெட்டித் தின்ன முடியும்.... சொல்லு.." என்று சுயரூபம் காட்டுகிறார். போன மாதம் முழுக்க ஒரே அறையில் நம்மோடு எல்லாம் பகிர்ந்துகொண்டவரா இவர் என்று பயந்து கத்துகிறான் ஹீரோ. விஷம சிரிப்பில் சர்வைவல் ஆப் தி பிட்டெஸ்ட் விதியைச் சொல்லாமல் சொல்கிறார் பெரியவர்.

"என்னய்யா லூசு மாதிரி உளர்ற.." என்பது போலக் கட்டை அவிழ்க்கத் தொடர்ந்து முயற்சிக்கிறான். ம்ஹும்... விஷயம்... சீரியஸ்.

"இனி அடுத்த ஒரு மாதத்துக்கு நாம் இங்குதான். கண்டிப்பாக நமக்கு முன் இருக்கும் அறையில் இருப்போருக்கே உணவு முடிந்துவிடும். கொலைப்பசியில் இருப்பவன் அளவுக்கதிகமாக எடுத்துக்கொள்வான். கீழே வர வர... வெறும் மேசைதான் வரும். வேறு வழி இல்லை. நம்மை நாம் காப்பாற்றிக்கொள்ள இப்படித்தான் அனுசரித்துக்கொள்ள வேண்டும். நான் உன்னைக் கொஞ்சம் வெட்டி உண்டு என்னைக் காப்பாற்றிக்கொள்கிறேன். உன் தொடைப் பகுதியில்தான் வெட்டுவேன். உயிருக்கு ஒன்றும் நேராது. கண்டிப்பாக நீ சாக மாட்டாய். உனக்கும் கூட கொஞ்சம் தருகிறேன். வலியை மட்டும் பொறுத்துக்கொள்" என்று வாயில் துணியை வைத்து அடைத்துவிட்டு ஹீரோவின் தொடைப் பகுதியில் கொஞ்சம் சதையை வெட்ட ஆரம்பிக்கிறார். ஹீரோ கத்திக் கதற... அதே நேரம் நகர்ந்து வரும் உணவு மேசையில் இவர்களைப் போலவே ஒருத்தி அமர்ந்திருக்கிறாள். சூழ்நிலையைப் புரிந்துகொண்டு பட்டென்று அறைக்குள் குதித்துப் பெரியவரைப் பிடித்துத் தள்ளிவிட்டு அவன் கட்டை அவிழ்த்துவிட... கொலை வெறியில் இருக்கும் ஹீரோ பெரியவரின் கத்தியைப் பிடுங்கி அவரைச் சரமாரியாகக் குத்திச் சாய்க்கிறான். சிறைக்கு வந்த புதிதில் அகிம்சை பேசிய ஹீரோவை நக்கலாகப் பார்த்துக்கொண்டே செத்துப்போகிறார் பெரியவர்.

அந்தப் பார்வையில்... ஆயிரம் கேள்விகள். நாம் தொடர்ந்து வாதித்துக்கொண்டிருக்கும் மனிதத்தன்மையின் கடைசிப் பதம் என்னவாக இருக்கிறது போன்ற தத்துவார்த்தக் கிளறல்கள்.

வந்தவள்... பெரியவரின் உடலைக் கிழித்து வெட்டி அவனுக்கும் தருகிறாள். தானும் உண்கிறாள். வலிமையற்றுக் கிடக்கும் ஹீரோவுக்குக் கொஞ்சம் தெம்பு வருகிறது. அவள் தினமும் தன் பிள்ளையைத் தேடி இப்படி மேலும் கீழும் உணவு மேசையில் அமர்ந்து பயணித்துக்கொண்டே இருப்பது வழக்கம்தான். சில நாட்களில் வெறி கொண்டிருக்கும் மனிதர்களின் வன்புணர்வுக்கும் ஆளாகிறாள். அவளுக்கு எல்லாமே ஒன்றாகத்தான் தெரிகிறது. பசி. அவ்வளவுதான். ஒவ்வொரு அறையிலும் மனித மிருகங்கள் வன்முறைக்குத் தயாராய் அமர்ந்து உறுமிக்கொண்டுதான் இருக்கிறார்கள்...

ஆயுதமே பசியாக இருக்கையில்.... மீதி எல்லாமே உணவுதான்.

புழுக்கள் நெளியும் பெரியவரின் உடலைத் தின்று நாட்களைக் கடத்துகிறான் ஹீரோ. பெரியவர்... அவன் எதிரே வருகிறார். ஹீரோ அச்சத்தில் கத்துகிறான்.

"நீ ஏன் இன்னும் இங்கயே இருக்க" என்று திட்டுகிறான்.

"எப்போது என்னை நீ தின்றாயோ அப்போதே நான் உன்னுடலுக்கு வந்துவிட்டேன். இனி நீயும் நானும் ஒன்று" என்று தத்துவம் பேசுகிறார். தலைக்குள் எதுவோ நிகழ.. நிஜத்துக்கும் கற்பனைக்கும் இடையே பசி கொண்ட மானுட நடுக்கம் புலம்புகிறது.

மனிதனை மனிதன் தின்னும் காலம் வரும் என்று பைபிள் சொல்கிறது. மனிதன் அத்தனை அழிச்சாட்டியம் செய்துவிட்டான். எல்லாமே வியாபாரம் ஆகிப்போனது. எல்லாமே ஆண்டான் மனநிலை. தனக்குக் கீழே பத்து பேராவது அடிமையாய் இருக்க வேண்டும் என்று ஒரு மேலாண்மை புத்தி திட்டமிட்டுக்கொண்டே இருக்கிறது. அதன் சூழ்ச்சி வலையில் எல்லாப் பக்கங்களிலுமிருக்கும் பெருச்சாளிகளும் ஒன்று சேர்ந்துகொள்ளும் வடிவமைப்புதான்... ஊரு ஊருக்கு இருக்கும் ஒரு பத்து பணக்காரர்கள். அடிமைகளே இந்த உலகை அலங்கரிக்கிறார்கள். அதை ஆண்டான்கள்

ஆள்கிறார்கள். இரண்டுமே சிக் மனநிலை.

அடுத்த முறை வேறொரு அறையில் இன்னொரு பெண்ணோடு இருக்கும்படி அட்டவணை மாறி இருக்கிறது. ஹீரோ உள்ளே வருகையில்... அந்தச் சிறைச்சாலையில் அதிகாரியாகப் பணி ஆற்றிய பெண்தான் அவள். அதிகாரத்தின் கோரப் பிடியில் தண்டனைகளில் வித்தியாசங்கள் கிடையாது. குற்றவாளிகளைக் குற்றவாளிகளிடமே விட்டுவிடும் அதிகாரம்... மிகக் கொடூரமான வடிவத்தைப் பூர்த்தி செய்துகொண்டே இருக்கிறது.

இருப்பவன் எடுத்துக்கொள்வதும் இல்லாதவன் பசிக்குச் சாவதும் காலம் காலமாய் நடந்துகொண்டிருக்கும் மனுஷ சாபம்தான்... இந்தச் சிறைச்சாலையில் மையம் கொண்டிருக்கிறது. தினம் தினம் தின்று செரிக்கும் பசி உடன் இருக்கும் மனிதனையும் நாயையும்கூட கொன்று தின்னக்கூடிய கட்டத்துக்கு இழுத்துச் செல்கிறது. ஹீரோ பேப்பரைத் தின்னும்போது உலகம் சூனியத்தில் சூழ ஆரம்பிக்கிறது. சக மனிதனின் உடலைத் தின்னும்போது வாழ்வின் அடிப்படை மீண்டும் கட்டவிழ்கிறது. இருப்பவன் பதுக்கிக்கொண்டால் அல்லது அளவுக்கு அதிகமாக எடுத்துக்கொண்டால்... இல்லாதவன் திருடுவான். அதன் நீட்சியில் அவன் வன்முறைக்கு ஆளாவான். அதுதான் நடக்கிறது.

ஹீரோவும் ஒரு நல்லவனும் சேர்ந்து உணவைப் பகிர்ந்து கொடுக்கும் செயலில் ஈடுபடுகிறார்கள். அங்கே ஒரு செய்தி காத்திருக்கிறது. சமதர்மத்தின் மத்தியில் இருந்தே இந்த மானுட சமூகம் தன்னைச் சுத்திகரித்துக் கொள்ளும். மற்றபடி அதற்கு எந்த வகையிலும் சூழல் ஒத்துழைக்காது என்பதுதான் கால விதி.

பசி கொண்ட உலகத்தில் வாக்குவாதத்துக்கு இடமில்லை. சக உயிர் உட்பட.. பசியே இங்கு ஆதாரம். அதனடிப்படையில்தான் இந்த வாழ்வின் தளம் அதனை அமைத்துக்கொண்டிருக்கிறது. காலத்தின் தேவையைக் காலமே பூர்த்தி செய்துகொள்ளும். அந்த வகையில் படம் நெடுகிலுமான கதை வாழ்வின் எல்லா முனைகளையும் ஒன்றாக்கி எதிர் எதிரே நிற்க வைத்து மெய்ஞானம் பேசுகிறது. அதிகாரத்துக்கும் அடிமைக்கும் இடையே நிகழும் வர்க்கப் போராட்டம்.. வேறு வேறு இடங்களில்.. வேறு வேறு வடிவங்களில்... ஒரு சூதாட்டத்தை நிகழ்த்தி வேடிக்கை பார்த்து... ஆதி மன அரிப்பைப் பூர்த்தி செய்துகொள்கிறது. ரேஷன் என்ற பதத்தின் தேவை எத்தனை முக்கியமானது என்பதைக் காய்ந்து சுருங்கி வெறி கொள்ளும் மனித வயிறு காட்டிக் கொடுக்கிறது.

இறுதியில் திரும்பும் பக்கமெல்லாம் பசி நிரம்பி இருக்கும் இந்த உலகம்... ஒரு ஹாலுஸினேஷன் என்பதாக மாறுகிறது.

கக்கடைசியில் "பட்டுக்கோட்டை" சொன்னதுதான் நினைவுக்கு வருகிறது.

"இருப்பவன் தரமாட்டான். இல்லாதவன் விடமாட்டான்..."

இயக்குநர் : Galder Gaztelu-Urrutia

மொழி : Spanish

ஆண்டு : 2020

■

சிறுகதை

அகமது திப்பு சுல்தான். தை. கா.

கொண்டுகூட்டு

நடுநிசி. அந்த நூலகத்தில் இருந்த நூல்களின் ஒவ்வொரு பக்கத்தில் இருந்தும் ஒவ்வொரு அட்டையில் இருந்தும் மரச்சட்டகங்களின், இரும்புச் சட்டகங்களின் கால்களைப் பிடித்து எறும்புகளைப் போல வரிசையாக இறங்கிக்கொண்டிருந்தன எழுத்துகள்.

அன்று வியாழக்கிழமை. எழுத்துகளுக்கும் சொற்களுக்குமான வார இறுதி நாள். ஏதுராஸ் மாநகரத்தில் இருக்கும் பழமைவாய்ந்த அந்த மிகப்பெரிய சிண்டிகேட் நூலகத்தின் மைய மண்டபத்தில் எல்லா எழுத்துகளும் கூடி நின்றன. சொற்கள் பொருள் துறந்து எழுத்துகளாகப் பிரிந்து நின்றன. ஓரெழுத்துச் சொற்கள் ஓசைகளாகத் திரிந்து, திரிந்த ஓசைகள் இசைக்கத் தொடங்கின.

இப்படித்தான் ஒவ்வொரு வியாழக்கிழமை இரவும் பார்ட்டி துவங்கும். ஒரே ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம்தான். வெள்ளிக்கிழமை ஓய்வு. மிகவும் ரகசியமானது இந்தப் பார்ட்டி. பார்ட்டி முடிந்தவுடன் மிகவும் நிதானமாக ஒவ்வொரு எழுத்தும் தனக்குரிய நூல்களின் பக்கங்களிலும் அட்டைகளிலும் சென்று வார்த்தைகளாக, வாக்கியங்களாக அமர்ந்துகொள்ளப் பழகி இருந்தன. இதற்கான சூத்திரங்களை அங்குள்ள கணிதசாஸ்திர நூல்கள் வகுத்திருந்தன. ஒவ்வொரு எழுத்திற்கும் வரிசைக்கிரமமாகக் குறியீட்டெண்கள் வழங்கப்பட்டு அதன்படியே எழுத்துகள் தங்கள் இடங்களைச் சென்றடைய வேண்டும். மிகவும் நிதானத்துடனும் கவனத்துடனும் இந்தச் செயல் திட்டமிட்டபடி முடிக்கப்பட வேண்டும். கொஞ்சம் பிசகினாலும் குழப்பம்தான். புதிதாக அந்நூலகத்திற்கு வரும் புத்தகங்களுக்கு இதற்கான பயிற்சி அளிப்பதற்கென்றே சில வராகமிகிர காலப்புத்தகங்கள் உண்டு.

மிகவும் கிழிந்து கந்தலாகிவிட்ட பழைய நூல்கள் வருடாந்திரக் கணக்கெடுப்பின்போது கழிக்கப்படும். அதர்வணக் காலத்து ஓலைச்

சுவடிகளில் உள்ள மந்திரங்களின் உதவி கொண்டு கழிக்கப்படும் நூல்களில் உள்ள எழுத்துகள், சொற்களின் நினைவுகள் யாவும் மறக்கடிக்கச் செய்யப்படும். ஏனெனில் அவை வெளியே செல்ல வாய்ப்புண்டு. வெளியே செல்லும் நூல்கள் மூலம் ரகசியம் கசிந்துவிடும் அபாயம் உள்ளதால் இந்த ஏற்பாடு.

மனிதர்களோ, ஆர்வமிக்க வாசகர்களோ, ஏன் எழுத்தாளர்களும் கூட ஒரு உண்மையைப் புரிந்துகொள்ள முயல்வதில்லை. எழுத்துகளுக்கும் சொற்களுக்கும் எப்போதும் வேலைப்பளு அதிகம் என்பதுதான் அவ்வுண்மை. ஒரு எழுத்தாளர் ஒரு படைப்பினை உருவாக்க எந்த அளவு மெனக்கெட வேண்டி இருக்கிறதோ அந்த அளவுக்கு எழுத்துகளும் சொற்களும் பல மெனக்கெடல்களைச் செய்ய வேண்டி இருக்கிறது. எழுத்துகளுக்கான வேலைப்பளு அறிவு சார்ந்த ஒன்று. அப்பூதியானது. யாராலும் சரியாக விளங்கிக்கொள்ள இயலாது.

ஒருவர் ஒரு நூலை வாசிக்க ஆரம்பிப்பதிலிருந்து வாசித்து முடிக்கும் வரையில் எழுத்துகளும் வார்த்தைகளும் ஏன் ஓசைகளும் கூட கடுமையான மனஇறுக்கத்திற்கும் மன அழுத்தத்திற்கும் ஆளாக நேரிடும். முதலில் ஒரு படைப்பாளி அல்லது எழுத்தாளர் இறக்கிவைத்த கருத்துச் சுமையே கனம் மிகுந்ததாக இருக்கும். படைப்பாளியின் சிந்தனை, பொருள், ஓசை ஆகியவற்றை ஒருங்கே சுமந்து வாழும் எழுத்துகளுக்கும் சொற்களுக்கும் இந்த மூன்றையும் வாசகரிடம் பொருள் திரியாமல் கொண்டு சேர்ப்பது என்பது மலையைப் பெயர்த்து மடியில் கட்டிச் சுமக்கும் கதைதான். அது கலவியை ஒத்தது என்று சில எழுத்துகளும் சொற்களும் தனது குறிப்பேடுகளில் எழுதி வைத்திருக்கின்றன. “வாசிப்பு என்பது கலவியை ஒத்தது. எந்த அளவு நிதானமாக ரசித்து, உட்கிரகித்து கண்களால், செவிகளால், நாவால், சுவாசத்தால், கரத்தால், அறிவால், கண்டும், கேட்டும், சுவைத்தும், முகர்ந்தும், ஸ்பரிசித்தும், பகுத்தறிந்தும் ஒருவர் அனுபவிக்கின்றாரோ அந்த அளவிற்கு எழுத்தின் சொல்லின் பொருளின் தரிசனம் கிட்டும். உச்சம் எட்டும்”, என்கிறது அக்குறிப்பு.

எல்லா வாசகரும் இக்கலையில் வல்லவரில்லை. ஒவ்வொருவரின் திறத்திற்கேற்ப கால்நிர்வாண அல்லது அரைநிர்வாண தரிசனம். அவசரக்கார வாசகருக்குத் துரித ஸ்கலிதம். அதோகதி உச்சம். படைப்பாளியின் கற்பனையோடும் படைப்புத் திறனோடும் வாசகனின் உட்கிரகிக்கும் ஆற்றலும் பகுத்தறிவும் ஒரே நேர்க்கோட்டில் பயணிக்கும்போது மட்டுமே அனுபவத்தில் பரவசத்தை அடைய முடியும். அந்த நேர்க்கோட்டைக் ‘கிழிப்பது’தான் எழுத்துகளுக்கும் சொற்களுக்கும் மிகப்பெரிய சவால்.

படைப்பாளியின் உள்ளக்கிடக்கையை இதுவரை எந்த ஒரு வார்த்தையோ இசையோ கலையோ ஓவியமோ எந்த ஒரு ரசிகனுக்கும், வாசகனுக்கும், பார்வையாளனுக்கும் முழுமையாகக் கொண்டு சேர்த்ததில்லை. எந்த அளவு குறைவாக வாசகரிடம் கொண்டு சேர்க்கப்படுகிறதோ அந்த அளவிற்குப் படைப்பு தரம்மிக்கதாக கருதப்படுவதாக நவீனமும் பின் நவீனமும் எழுதப்படாத வரையறை ஒன்றைப் புகுத்தியிருப்பது திண்ணம். இக்காரணிகளால் எழுத்துகளின் பணிச்சுமை சமீப காலங்களில் இன்னும் பல மடங்காகிவிட்டது.

இதுவரை கேட்டிராத ஒரு குரலை ஒருவர் கேட்கும்போது மனதில் தோன்றும் அந்தக் குரலுக்கான கற்பனை உருவம் இவ்வுலகத்தில் எந்த இருவருக்கும் ஒரே மாதிரியாகத் தோன்றுவதில்லை. இது உளவியலின் அதிசயம். ஒவ்வொருவரின் நனவிலி மனதின் பதிவுகளுக்கு ஏற்றவாறு குரலுக்கான உருவம் மாறுகிறது. மனித மனவியலின் இந்தத் தனித்தன்மை எழுத்துகளுக்கும் சொற்களுக்குமான பணியில் மிகப்பெரும் தடைக்கல்லாக இருக்கின்றது. ஒவ்வொருவரின்

மனநிலைக்கு ஏற்பப் புரிந்துகொள்ளும் தன்மை மாறும்போது துல்லியத்தை அடைவது அரிது. பெரும்பாலான வாசகரிடம் பொருளைக் கொண்டு சேர்ப்பதில் எழுத்துகள், சொற்களின் வெற்றி என்பது பாதிக்கும் குறைவே. இதற்கிடையே தவறான உச்சரிப்பு, தவறான வாசிப்பு, சொல்லுக்குச் சொல் பொருளைக் கற்பிதம் செய்யும் வாசகரின் இயல்பறிவு இவையெல்லாம் சேர்ந்து எழுத்துகளின் வேலையை இன்னும் மிகப்பெரும் சுமையாக மாற்றிவிடுகின்றன.

இதனால் எழுத்துகள் இப்பெரும் பணிச்சுமையில் இருந்தும் மன உளைச்சலில் இருந்தும் தங்களை ஆசுவாசப்படுத்திகொள்ளத் தேடிக்கொண்ட வழிதான் இந்த ரகசியப் பார்ட்டி. இதன் மூலம் எழுத்துகளின் சோர்வு குறைவது போலவும் மன அழுத்தம் தணிவது போலவும் உணர்வதாக எழுத்துகளின் இன்னொரு நாட்குறிப்பில் பதிவுகள் காணக் கிடைக்கின்றன. பார்ட்டியில் ஆட்டம், பாட்டம், கதையாடல், உரையாடல் தவிர வேறு எதுவும் இருப்பதில்லை. குறிப்பாக போதை இல்லை. காந்தத்தின் ஒரே திசைகள் ஒன்றையொன்று விலக்குவது போல. எழுத்தே போதை என்பதால் போதைப் பொருட்களுக்குப் பார்ட்டியிலிருந்து விலக்கு.

மீயொலி அலைவரிசையில் நடக்கும் இந்தக் கூத்தில் சப்தத்திற்கு வேலையில்லை. நூலகம் 'மயான' அமைதிக்கான இடம். அங்கே ஏதேனும் சப்தம் அதுவும் நடுநிசியில் கேட்டால் அவ்வளவுதான். மூடநம்பிக்கைகளெல்லாம் ஒன்று சேர்ந்து புதினம் ஒன்றை எழுத ஆரம்பித்துவிடும். நூலகத்தில் ஆவிகள் நடமாட்டம் இருப்பதாகப் புரளிகள் கிளம்பும். ஏற்கனவே நூலகம் வருபவர்களின் எண்ணிக்கை குறைந்துவரும் நிலையில், நூல்களின் தலைவர் எந்தவிதமான பரிட்சார்த்த முயற்சிகளிலும் இறங்க முயல்வதில்லை. நூலகத்தைச் சுற்றி இருக்கும் வௌவால்களே ரகசியப் பார்ட்டியின் மீயொலிப் பாடல்களைக் கேட்டுக் கைதட்டி ஆரவாரம் செய்யும் சியர்லீடர்ஸ்.

வௌவால்களுக்கும் எழுத்துகளுக்கும் இடையேயான நட்பு ஆழமானது. சில எழுத்துகளுக்கும் வௌவால்களுக்கும் ரகசிய உறவு இருப்பதாகவும் அதற்கு சாட்சியாக வௌவால்களின் எச்சங்களும் மூத்திரமும் புத்தகங்களின் பக்கங்களுக்கு இடையே கிடைத்ததாக நூலகத்தின் புத்தகப்புழுக்கள் புகார் செய்ததாக ஒரு பேச்சு அடிபட்டது. சில வௌவால்களுக்கு 'யோலன் ச்சாங்'-இன் புத்தகத்தில் உள்ள சித்திர எழுத்துகளைப் போலக் குட்டிகள் பிறந்ததாக ஆவணப்படம் ஒன்றும் விவரிக்கிறது.

அன்றும் அப்படித்தான் எல்லா எழுத்துகளும் கூத்திற்குத் தயாராக இருந்தன. மானுடவியல், பூலோகம், பௌதீகம், ரசாயனம், ரசவாதம், உயிரியல், தொல்லியல், வரலாறு, புவியியல், அரசியல், சமூகவியல், மனோவியல், தர்க்கம், தத்துவம், இலக்கியம், இசை, மருத்துவம், பொருளியல், வணிகம், தன்னம்பிக்கை, சுயமுன்னேற்றம், மனநலம், நளபாகம், கருவியல், விளையாட்டு, கலவியியல், கல்வியியல், அண்டவியல், ஆன்மீகம், சோதிடம், வாஸ்து, கம்யூனிசம், சோஷலிசம், ஜென், தாவோயிசம், அரசியலமைப்பு, பொழுதுபோக்கு, சுயசரித்திரம், இன்னபிற நூல்களில் இருந்தும் எழுத்துகளும் ஓசைகளும் தயாராக இருந்தன.

ஓரெழுத்துச் சொல்லின் ஓசைகள் இசையமைக்க சித்திர எழுத்துகள் நடனமாடின. ஹிந்தி, பிரஞ்சு, சைனீஸ், ஜப்பானீஸ், ஆங்கிலம் எனப் பல மொழிச் சொற்களும் ஒன்றாக இணைந்து ஆடிப்பாடுவதைப் பார்க்கும்போது மொழிச் சமதர்மமே மலர்ந்திருப்பதைக் காணலாம். மாண்டரீன் எழுத்துகளின் நடனம் அழகு; தமிழ் எழுத்துகளின் அபிநயம் அதிசயம்; ஆங்கிலத்தின் நடை நேர்த்தி; ஹிந்தியின் குரலில் கம்பீரம். அனைத்தும் நன்றாகவே சென்றுகொண்டிருந்தது. அந்த விபரீதம் நடக்கும்வரை.

திடீரெனக் கதவு திறக்கப்படும் சப்தம்.

எழுத்துகள் அப்படியே ஸ்தம்பித்து நின்றன. என்னவாக இருக்கும் என்று யோசிப்பதற்குள் குழல் விளக்குகள் மின்னல் போல வெட்டி ஒளிர்ந்தன. உஷாரான எழுத்துகள் நிதானம் தவறின.

நூலகர் சுவடிமேயர் பொதியானாயன் வந்திருந்தார். அவரின் காலடிச் சத்தம் எழுத்துகளின் இதயத்துடிப்புக்குச் சுருதி சேர்த்தது. துரிதமாகச் செயல்பட்டன எழுத்துகள். ஓசைகள் எழுத்துகளாகி, எழுத்துகள் வார்த்தைகளாகி, தனக்கான புத்தகத்தில் சென்று தனக்கான பக்கத்தில் சரியாக அமர வேண்டும். இதற்கான சூத்திரம் எல்லாம் ஏற்கனவே கற்பிக்கப்பட்டிருந்தாலும் நிதானத்திற்கு நேரமில்லை. அவசரத்தில் அண்டாவிற்குள் கைவிட்டாலும் நுழையாது என்பது போலக் கண்ணில் பட்ட சட்டகங்களில் இருந்த நூல்களின் பக்கங்களில் எல்லாம் வார்த்தைகளான எழுத்துகள் தற்காலிகமாகப் புதைந்து கொண்டன. தலைமை நூலான சிரிட்டானிக்கா இண்டிக்கா என்ற ராட்சச உசாத்துணைக்கும் அது சரியென்றேபட்டது. நூலகர் சென்றபின்பு ஏற்கனவே கற்பிக்கப்பட்ட சூத்திரங்களின்படி உரிய நூல்களில் சென்று அமர்ந்துகொள்வது என்பது திட்டம்.

அத்தனைச் சொற்களும் கிடைத்த இடத்தினில் பதுங்கிக்கொண்டபோது கோட்டினைப் பிடித்துத் தொங்கும் எழுத்துவடிவம் கொண்ட மொழியைச் சேர்ந்த நான்கு எழுத்துகள் மட்டும் இடம் கிடைக்காமல் கடைசி நேரத்தில் ஒரு கிழிந்து தொங்கிய ஒரு நூலின் அட்டையில் ஆசிரியர் பெயர் இருக்க வேண்டிய இடத்தில் ஒட்டிக்கொண்டன. தொங்கியே பழகியிருந்த அந்த எழுத்துகளுக்கு அட்டையில் ஒட்டிக்கொண்டு இருப்பது கடினமாக இருந்தது.

சுவடிமேயர் பொதியானாயன் அருகில் வந்தார். ஒவ்வொரு சட்டகமாகப் பார்த்தார். குறிப்பிட்ட சில நூல்களை எடுத்தார். எண்களைக் குறித்துக்கொண்டார். தலைப்பைக் குறித்துக் கொண்டார். பிறகு எழுத்தாளரின் பெயரைக் குறித்துக்கொண்டார். அந்தப் புத்தகங்களை எடுத்து ஒரு பையில் வைத்துக்கொண்டார். பிறகு அந்த நான்கு எழுத்துகளும் ஒட்டிக்கொண்டிருந்த நூலை எடுத்தார். எடுக்கும்போதே எழுத்துகளின் கனம் தாளாமல் அட்டை கிழிந்து தொங்கியது. பிடிமானக்கோடு எதுவும் இல்லாமல் சரிந்து விழுந்த எழுத்துகள் அட்டையின் நுனியைப் பிடித்துத் தொங்கிக்கொண்டிருந்தன.

அந்த நூலைக் கண்டவுடன் பொதியானாயனின் முகத்தில் மகிழ்ச்சி. அலைபேசியை எடுத்தார். தொடர்புஎண்ணை அழுத்தி யாருடனோ பேசினார். நூலின் தலைப்பைக் கூறியவர் ஆசிரியரின் பெயரைக் குறித்துச் சொல்ல மறந்துவிட்டார். ஏற்கனவே எடுத்த நூல்களையெல்லாம் மீண்டும் அதே இடத்தில் வைத்துவிட்டு எழுத்துகள் தொங்கிக்கொண்டிருந்த நூலை எடுத்துக்கொண்டு சென்றார். கொண்டு வந்த பையில் வைப்பதற்கு முன் அக்குளில் வைத்துக்கொண்டு பேசிக்கொண்டிருந்தார். அதற்குள் கனம் தாளாமல் கிழிந்திருந்த அட்டை மேலும் கிழிய, தொங்கிக்கொண்டிருந்த எழுத்துகளுடன் கீழே விழுந்தது. “கொண்டுகூட்டு” என்று தலைப்பு கொண்ட அந்த நூல் அநாமதேயராக நூலகரின் பையில் பயணித்தது.

சில நாட்கள் சென்றதும் சுவடிமேயர் சற்று, பயங்கர பதட்டத்துடன் நூலகத்தில் ஏதோ செய்துகொண்டிருந்தார். பதிவேடுகள் எல்லாம் அவர்முன் குவிந்து கிடந்தன. ஒவ்வொன்றாகப் புரட்டிப் பார்த்தார். ஒரு குறிப்பிட்ட எண் கொண்ட நூலைத் தேடிக் கொண்டிருந்தார் போல.

அங்கு வந்த பனுவல்புழுவன் என்ற ஆராய்ச்சியாளர் நூலகரிடம் வந்து அவருக்குத் தேவையான நூல் ஒன்றின் பெயரைச் சொல்லி அதை எடுத்துக் கொடுக்குமாறு கூறினார். வேலையிலிருந்த சுவடிமேயர் பொதியானாயன் சற்று எரிச்சலுடன் “சார் இன்னக்கி எனக்கு நேரமில்ல. வேறொரு முக்கியமான வேலையா

இருக்கேன். நீங்க வேணும்னா நாளக்கி வாங்களேன்” என்று கூறினார்.

“சார் எனக்கும் அவசரம்தான் சார். எனது ஆய்வுக்குக் கண்டிப்பா இந்த உசாத்துணை தேவை சார். இங்கே உக்காந்து படிச்சுட்டு இங்கே வச்சுட்டுப் போயிட்றேன்” என்றார் பனுவல்புழுவன்.

அவரின் தொடர்நச்சரிப்பைத் தாங்கமுடியாத பொதியானாயன் “சார் இந்த நூலுக்கு இன்டெலிவோஸ்டுப்பிடிடோக்கியா நாட்டின் உயரிய விருதான செவாசேசேநோபிலாட்சர்க்கர் விருது கிடச்சுருக்கு. “கொண்டுகூட்டு” என்பது நூலின் தலைப்பு. ஆனால் அதன் ஆசிரியர் யாருன்னு தெரியல. நூலிலுள்ள விபரங்களும் இங்க இருக்க பதிவுகளோடு ஒத்துப் போகல. இப்படி ஒரு நூல் இருந்ததாகவும் பதிவுகளில் இல்லை. இப்ப என்ன செய்றதுன்னு தெரியாம தலயப் பிச்சுக்கிட்டு நிக்கேன். இந்தா பாருங்க, இதுதான் அந்த நூலின் எண். இங்கிருக்கும் ஆயிரக்கணக்கான பதிவுப் புத்தகங்களில் இருக்கும் விபரங்களில் இருந்து இந்த நூலின் ஆசிரியர் யார் என்று தேடி எடுக்கணும். இந்நூலின் பிரதி வேற எங்கயும் கெடக்கல. கணிப்பொறியில் இருக்கும் பதிவுகளிலும் இல்ல. கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு முந்தைய பதிவேடுகளத் தேடியாச்சு. இப்போது இந்த நூலகம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து பராமரிக்கப்படுகின்ற பதிவேடுகளில் தேடிக்கிட்டிருக்கேன். தயவுசெய்து ஒருவாரம் கழிச்சு வாங்க. அவசரமா இருந்தா அந்தா பாருங்க, அங்க குவிஞ்சு கிடக்கும் புத்தகங்களில் தேடிப்பாருங்க” என்று நீட்டி முழங்கினார் சுவடிமேயர் பொதியானாயன்.

பிரச்சனையின் வீரியத்தைப் புரிந்துகொண்டு அவ்விடத்தை விட்டு அகன்ற பனுவல்புழுவனின் காலுக்குக் கீழே கிடந்த அந்த நான்கு எழுத்துகளும் நைந்து சிதைந்தன. காலணியில் அப்பிக்கொண்டு சிறிது தூரம் பயணித்த அந்த நான்கு எழுத்துகள் சற்றேறக்குறைய அறுந்து தனித்தனியாகச் சிதறின. சிறிது நேரத்தில் ஒரு பெருக்குமாரு அந்த எழுத்துகளைப் பெருக்கி ஓரத்தில் ஒதுக்கியது. மெல்லிய காற்று அந்த எழுத்துகளை ஒரு மரச்சட்டகத்தின் அடியில் கிடத்தியது.

விஷயத்தை அறிந்துகொண்ட மற்ற நூல்கள் “கொண்டுகூட்டு”-இன் மேல் கடும் பொறாமை கொண்டன. அன்று நடந்த குழப்பத்தில் அந்த நூலகத்தில் உள்ள ஒவ்வொரு நூலிலும் இருந்த கிடக்கைகளின் தொகுப்பாகவே “கொண்டுகூட்டு” உருவானதாகவும் அப்படி உருவான அந்த நூலுக்கு எப்படியோ ஒரு முழுமையும் தொடர்பும் கிடைத்திருப்பது அதிசயம்தான். அந்த முழுமையும் தொடர்பும் நடுவர்களுக்கு மிகவும் புதியதாக வியப்பாகத் தோன்றியிருக்கக்கூடும். அதனால்தான் விருதினைப்பெற முடிந்துள்ளது என்ற கருத்தில் நூல்கள் ஒருமித்து நின்றன. அதுவே உண்மையும் கூட.

அதனால் அந்த விருது எல்லா நூல்களுக்கும் கொடுக்கப்படவேண்டும் என்று நூலகரிடம் முறையிடுவதற்கு நூல்களின் தலைவருடன் எல்லா நூல்களும் நூலகரைச் சூழ்ந்து நின்றன. நூல்கள் புடைசூழ நின்ற சுவடிமேயர் பொதியானாயன் அச்சத்தில் உறைந்து போனார். முகத்தில் துளிர்த்த வியர்வைத் துளிகளைத் துடைத்துக்கொண்டு முன்னின்ற நூல்களைத் தள்ளிக்கொண்டு பின்னங்கால் பிடறியில் அடிக்க அங்கிருந்து ஓடினார் சுவடிமேயர்.

“பயப்படாதீங்க சார். நாங்க சொல்றதக் கொஞ்சம் கேளுங்க” என்று சிரிட்டானிக்கா இண்டிகா நூலகரை நோக்கிக் கத்தியது. நூலகத்தின் கதவினை அடைத்துத் தாழிட்டது ஒரு பேரகராதி. கடைசியில் சுவடிமேயர் செய்வதொன்றும் அறியாமல் வாயடைத்துப் போய் நூல்களிடம் சரணடைந்தார்.

நடந்த அனைத்தையும் சொல்லி முடித்தது சிரிட்டானிக்கா இண்டிக்கா. சாட்சியாக அங்கிருக்கும் சில நூல்களை எடுத்து அதில் சில பக்கங்களோ பத்திகளோ எழுத்துகள் ஏதும் நிரப்பப்படாமல் காலியாக இருப்பதை

விரித்துக் காட்டினார்.

கண்முன் நடக்கும் எதையும் நம்ப முடியாத சுவடிமேயர் பொதியானாயன் நூலகத்தைப் பிசாசுகள் ஆக்கிரமித்திருப்பதாக நினைத்துக்கொண்டு சில மந்திரங்களை ஜெபித்தார். சினமடைந்த நூல்கள் செய்த கிளர்ச்சியில் நூல்களுக்கிடையே மாட்டிக்கொண்ட சுவடிமேயர் அவற்றின் கால்களுக்கடியில் நசுங்கிச் செத்தார்.

நூலகப் பராமரிப்புப் பணியின்போது நூல்களை அடுக்கி வைக்கையில் சரிந்து விழுந்த நூல்களுக்கிடையே மாட்டி உடல் நசுங்கிச் செத்ததாக வழக்குப் பதிவு செய்யப்பட்டது. கொலை, விபத்தாக்கப்பட்டது. அந்த நாளை அகில உலக நூலகப் பேரவை உடனடியாக நூலகர் தினமாக அறிவித்து தொடரும் ஆண்டு முதல் அனுசரிக்க முடிவுசெய்தது.

செவாசேசேநோபிலாட்சர்க்கர் விருதுக் குழு அவசரமாகக் கூடியது. இந்த நூலின் பிரதி உலகில் வேறு எங்கும் இல்லை, ஆசிரியர் பெயரும் கண்டுபிடிக்க இயலவில்லை என்று வந்த தகவல்கள் உறுதிசெய்யப்பட்டதன் அடிப்படையில் சில தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டி அக்குழு கூடியது. நூலின் தலைப்பை அறிவித்து ஆசிரியரைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பது முடிவு. யார் அந்த நூலின் கருத்துருவைச் சரியாகச் சொல்கிறார்களோ அவரே அந்த நூலின் ஆசிரியர் என்று கண்டுபிடித்துவிடலாம் என்பது குழுவின் கணிப்பு.

தலைப்பை அறிவித்தவுடன் "கொண்டுகூட்டு" உலகெங்கும் பிரபலமானது. எல்லா நூலகங்களையும் புத்தகக் கடைகளையும் பழைய புத்தகக் கடைகளையும் வாசகர்கள் மொய்க்கத் தொடங்கினர். பழைய புத்தகங்களைப் பத்திரப்படுத்தினர். பழைய புத்தகக் கடைக்காரர்கள் யாரும் எந்தப் புத்தகத்தையும் யாருக்கும் விற்கக் கூடாது என்று முடிவு செய்தனர்.

அந்த ரகசியப் பார்ட்டி நூலகத்தை நோக்கி உலகத்தின் மூலை முடுக்கில் இருந்தும் பிரபல இலக்கியவாதிகளும், ஆய்வாளர்களும், மொழியியல் வல்லுனர்களும், பல்துறை அறிஞர்களும் வந்து சேர்ந்தனர். ஒவ்வொரு நூலிலும் சில பக்கங்கள் காலியாக நிரப்பப்படாமல் விடுபட்டிருப்பதைக் கண்ட ஆய்வாளர்கள் நூலகத்துறையின் மீது ஊழல் வழக்குத் தொடர்ந்தனர். அனைத்து நூல்களையும் கள்ளப்பதிப்பு என்று குற்றம் சாட்டினர். நூலகத்துறை முன்னாள் இன்னாள் ஆணையர்கள் கைது செய்யப்பட்டனர்.

இது ஒருபக்கம் நடந்துகொண்டிருக்க, "கொண்டுகூட்டு" உலகத்தின் பேசுபொருளானது. முகநூல், புலனம், சமூக வலைதளங்கள் அனைத்திலும் கொண்டுகூட்டைப் பற்றியே கருத்துப்பரிமாற்றங்கள் நடந்துகொண்டிருந்தன. காணொளிகள் நடந்தன. ஆய்வரங்குகள் நடந்தன.

ஆனால் யாரும் "கொண்டுகூட்டு"-ஐ வாசிக்க முடியவில்லை. உலகத்தில் ஒரே ஒரு பிரதி மட்டுமே இருந்தது. அது விருதுக்குழுவிடம் இருந்தது. "இதை நான்தான் எழுதினேன்" என்று உரிமை கொண்டாடவும் யாரும் இல்லை. செவாசேசேநோபிலாட்சர்க்கர் விருதுக்குழு உறுப்பினர்களும் தலைவரான அவார்டிகோ அட்வெர்டோவும் "கொண்டுகூட்டு"-க்கு விருதினை வழங்கியே ஆக வேண்டும் என்ற நிலையில் ஆசிரியர் அநாமதேயர் என்று குறிப்பிட்டு எந்த நூலகத்தில் இருந்து பெறப்பட்டதோ அந்த நூலகத்திற்கே விருதினை வழங்குவது என்று முடிவு செய்தனர். இறுதியாக அந்த நாளும் வந்தது.

"இந்த வருடத்திற்கான செவாசேசேநோபிலாட்சர்க்கர் விருதை அநாமதேயரான "கொண்டுகூட்டு" தட்டிச் செல்கிறது. ஏதுராஸ் மாநகராட்சியின் சிண்டிகேட் நூலகத்தின் தற்போதைய நூலகர் இரண்டாம் சுவடிமேயர் பொதியானாயன் விருதினைப் பெற்றுக்கொள்வார்" என்று நிகழ்ச்சித் தொகுப்பாளர் அறிவித்தவுடன் பழுப்பு நிறத்தில் இருந்த எழுதுகோல் வடிவ

விருதினைச் சிறப்பு விருந்தினரான முந்தைய வருடம் செவாசேசேநோபிலாட்சர்க்கர் விருதைப் பெற்ற எழுத்தாளர் தாகுரதிதாசமான், நூலகரிடம் வழங்கும்போது கரகோஷங்களால் அரங்கமே அதிர்ந்தது.

‘கொண்டுகூட்டு’ என்னும் தலைப்பு உலகத்தின் மூலைமுடுக்கெல்லாம் ஏற்படுத்திய தாக்கத்தினால் உலக மக்கள் அனைவரும் விருது வழங்கப்படும் நிகழ்வைத் தொலைக்காட்சிகளிலும் சமூக வலைதளங்களிலும் கண்டு மகிழ்ந்தனர்.

ஆசிரியர் யார் என்று தெரியாத புத்தகம் உலகம் முழுவதும் வாசிக்கப்படப் போகிறது. செவாசேசேநோபிலாட்சர்க்கர் விருதுக் குழு இந்த நூலை உலகம் முழுவதும் பதிப்பித்து விற்பனை செய்யும் என்று அறிவித்தபோது வாசகர்களுக்கும் ரசிகர்களுக்கும் ஏற்பட்ட உள்ளக்கிளர்ச்சிக்கு அளவே இல்லை. அதில் என்னதான் எழுதப்பட்டிருக்கிறது என்பதை அறியும் ஆர்வம் இன்னும் அதிகமாகியது.

“இந்த நூல் ஒரு கட்டுரையா? கவிதையா? புதினமா? நாடகமா? என்றால் எல்லாவற்றிற்கும் ‘ஆம்’ என்றும் சொல்லலாம் ‘இல்லை, என்றும் சொல்லலாம். ஏனென்றால் உள்ளமைப்பும் கிடக்கையும் அப்படி. சில இடங்களில் கவிதை, சில இடங்களில் நாடகம், சில இடங்களில் புதினம், சில இடங்களில் உரைநடை போல இருக்கும். ஒரே நெட்டில் வரிசையாகப் படித்தால் இந்தப் புத்தகத்தின் கிடக்கை விளங்காது. முதல் பக்கத்தின் பொருள் மூன்றாவது பக்கத்தில் விளங்கும். கடைசி அத்தியாயத்தின் புதிருக்கான விடை மூன்றாம் அத்தியாயத்திலேயே அவிழ்க்கப்பட்டிருக்கும். இதுதான் இந்த நூலின் புதுமையே. இப்படிப்பட்ட ஒரு நூல் உலகத்தின் எந்த மொழியிலும் இதுவரை வந்ததில்லை. இனிவரப்போவதும் இல்லை” என்று கூறி மீண்டும் ஒருமுறை பலத்த ஆரவாரங்களுக்கு இடையே இரண்டாம் சுவடிமேயர் பொதியானாயன் கையில் இருந்த விருதினைப் பிடித்துத் தூக்கிக் காட்டினார் விருதுக்குழுத் தலைவர் அவார்டிகோ அட்வெர்டோ.

அதே நேரம் ரகசிய நூலகத்தின் மரச்சட்டத்திற்குக் கீழ் கிடந்த நான்கு எழுத்துகளும் பிடித்துத் தொங்குவதற்கு, துண்டாகிப்போன ஒரு பல்லியின் வால் கிடைத்த மகிழ்ச்சியில் திளைத்திருந்தன. அந்த நான்கு எழுத்துகளும் சேர்ந்து உருவாக்கும் சொல்லுக்குக் ‘கவுடள்’ என்று நேரடியாகவும் ‘கடவுள்’ என்று கொண்டுகூட்டியும் பொருள் கொள்ளலாம் என்று சில நூல்கள் பேசிக்கொண்டன.

நான்கு எழுத்துகள் பல்லிவாலைப் பிடித்திருக்கின்றனவா? இல்லை “கொண்டுகூட்டு”-ன் ஆசிரியர் பெயராக ஒட்டிக்கொண்டிருந்த ‘கவுடள்’ என்ற ‘கடவுள்’ விருதைப் போல இந்தப் பல்லிவாலைப் பிடித்துக்கொண்டிருக்கிறாரா? என்பது அந்தக் கடவுளுக்கே வெளிச்சம்.

இவ்வாறு முடிந்த அந்தக் கதையை ஏதுராஸ் மாநகரத்தின் சிண்டிகேட் நூலகத்தில் அமர்ந்து அந்நூலகத்தின் தற்போதைய நூலகர் நான்காம் சுவடிமேயர் பொதியானாயன் படித்து முடித்தபோது இரவு பத்து மணி. புத்தகத்தின் அட்டையில் எழுதியவரின் பெயர் என்ன என்று பார்க்க முனைந்தபோது சற்று முன் இருந்த ஆசிரியரின் பெயர் இல்லாதிருப்பதைக் கண்டு திடுக்கிட்டார் சுவடிமேயர் பொதியானாயன்.

பதற்றத்துடன் எழுந்து எச்சிலை முழுங்கியவாறு விறுவிறுவென நடந்து படபடப்பு அடங்காது நூலகத்தைப் பூட்டிவிட்டுக் கிளம்பினார்.

நடுநிசி. மூடப்பட்ட நூலகத்திற்குள் இருந்த ஒவ்வொரு புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் அட்டையிலும் இருந்து எழுத்துகள் மரச்சட்டங்கள், இரும்புச்சட்டங்கள் கால் வழியாக எறும்புகள் போல வரிசையாக இறங்க ஆரம்பித்தன. ■

கடைசிப் பேருந்தும்
வந்து போய்விட்டது
இனி அந்தப் பேருந்து நிறுத்தத்தில்
அடுத்த நாள் காலை வரை
யாரும் வந்து
காத்திருக்கப்போவதில்லை

ஆட்கள் பேருந்துக்கு
அமர்ந்து காத்திருக்கும்
சிமெண்ட் பெஞ்சில்
ஒரு போர்வையை விரித்து
மற்றொரு போர்வையை
தன்மீது போர்த்திக்கொண்டு
உறங்கத் தொடங்குகிறான் அவன்
வழக்கம்போல

இனி யாரும் வரப்போவதில்லையென
இலேசாகப் பெய்துகொண்டிருந்த மழை
வலுத்துப் பெய்யத் தொடங்குகிறது

பேருந்து நிறுத்தம்
மெல்ல மெல்லப் பெயர் மாறி
உறங்குபவனின் வீடாகிறது

இந்த
அவனுடைய வீடு
நாளை காலையில் மறுபடியும்
பேருந்து நிறுத்தமாகிவிடும்
அதுவரை அது
அவனுடைய வீடென்றே இருக்கட்டும்

- சௌவி

அதுவொரு
சின்னப் பை போலத்தான் இருந்தது.

மிகவும் கவனமாக
ஒருவரும் அறியாதவண்ணம்
திறந்து காட்டியபோது முகத்தில் தெறித்தது
இனம் புரியாத பூ வாசம்.

உள்ளிருந்து நீ
எடுத்து எழுதிய சொற்களில்
அவ்வளவு நீர்மையும்
கொஞ்சமே கொஞ்சம்
உலர்ந்த விதைகளும் இருந்தன.

மறதியில் யாரோ
மடக்காமல் போட்ட குறுங்கத்தி கிழித்து
சின்னப்பையில் சில சொட்டுகள்
சிந்தியதை
வழக்கம் போல் காட்டிக்கொள்ளவில்லை நீ.

அடிக்கடி திறந்து மூடுகையில்
ஒலிக்கும் குரல் உன்னுடையதா என்றதற்கும்
நமட்டுச்சிரிப்புடன் நகர்ந்தாய்.

போடுவதற்குப் பொருள் ஏதுமின்றி
வாய் பிளந்து கிடக்கும்
அந்தச் சின்னப் பையில்
ஒரு குளவி கூடுகட்டிக் கொண்டிருக்கிறது.

வீட்டின் சின்னப் பை போல இருக்கும்
ஜன்னலைத் திறந்து வைக்கிறாய்,
குளவி வந்து போக வசதியாய்.

- மா.காளிதாஸ்

தன் முதுகின்மேல் அழுத்தும்
ஓட்டின் சுமைகுறித்து
யோசிக்கும் முன்பே
நத்தைக்குச் சொல்லப்பட்டிருந்தது
ஓடற்று இருந்தால்
எறும்பு தின்றுவிடுமென!

- சக்தி அருளானந்தம்

சொல் சாகட்டும்

காற்றிலசைந்தது
சின்ன ஜன்னலின்
சிறுகதவொன்று
நிழலணிந்து

கசிந்தது நீள்வெளிச்சம்
சூரியக் கோடொன்றில்

துளிநீரோடை
தொங்கியது
ஈரம் போர்த்திக்கொண்டு

இருள்கறுப்பு வரைந்த மீசை
வெளிர்மஞ்சள் பரப்பில்

இப்படியெல்லாம்
சாலையோர ஏழைச் சிறுமியை
வர்ணிக்க இயலாமல்
அழகியலை உமிழ்ந்து சபித்து

குளிக்க சோப்பும்
கிழிந்த ஆடை உதறிப் புத்தாடை அணியவும்
வாங்கிக்கொடுத்தான் வலிபொறுக்கா கவிஞன்
பசியால் தன் வயிறு நிறைத்து
சொல் செத்து செயல் பிழைத்த தருணத்தில்

- ரா.ராஜசேகர்

"சிக்னல் இல்லாத இடத்துக்கு
ரெண்டு நாள் டூர் போறேன்
உன்கிட்ட பேசாம
ஒரு மெசேஜ் கூட பண்ணாம
எப்படி இருக்க போறேன்னு
தெரியல பேபி
ஐ மிஸ் யூ - லவ் யூ பேபி"
காதலனிடம் அலைபேசியில்
கொஞ்சிக்கொண்டிருக்கிறாள்
இருபதைத் தொடும் யுவதியொருத்தி

காதல், திருமணம்
இவற்றின் மீதெல்லாம்
சுத்தமாக நம்பிக்கையில்லாமல்
போய்விட்டதாக விரக்தியுடன்
புலம்பிக்கொண்டிருக்கிறாள்
காதல் திருமணம் புரிந்த
நாற்பதைக் கடந்த தோழியொருத்தி

"பாத்ரூம் போகும்போது
என்னை எழுப்ப வேண்டியதுதானே
தனியாப் போய்த் தடுமாறி விழுந்தா
என்ன பண்ணுவேன்"
செல்லமாகக் கடிந்துகொண்டே
எண்பதைத் தொடும் கணவருக்கு
தைலம் தேய்த்துக்கொண்டிருக்கிறாள்
கிழத்தியொருத்தி

இந்த மூவரும் ஒருத்திதான்
என்பதை மட்டும்
அவளுக்கே தெரியாத
இரகசியமாய் வைத்திருந்தது
காதலின் சுழற்சி விதி.

- பிரபுசங்கர் க

மழை வந்ததும்
எங்கே போகின்றன
தும்பிகள்.
மகளுக்குத் தாலிகட்டும்போது
காணாமல் போகும்
அந்தக்காலத்து
அம்மாக்களைப்போல்.

- சந்துரு.ஆர்.சி

● மு.முருகேஷ்

கவிதைக்குள் கலந்திருக்கும் கதை

ஆட்டமும் பாட்டும் பிடிக்காத குழந்தைகளென்று இப்பூமியில் யாருமில்லை. ஆடாமலும் பாடாமலும் இருந்த பள்ளி நாட்கள் நம் நினைவிலிருந்து எப்போதோ மொத்தமாக நீங்கிவிட்டன. மகிழ்வோடு பள்ளியில் குதித்தாடிய பொழுதுகளே இன்னமும் மனதில் தேங்கித் தளும்பி நிற்கின்றன.

எனது ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர்களில் மறக்கவே முடியாத இருவர் கமலா டீச்சரும் மேரி டீச்சரும். இருவருமே குழந்தைகளிடம் அன்பாகப் பேசுவார்கள் என்பதை விடவும், பாடல் சொல்லித்தரும்போது ஆடிக்கொண்டே சொல்லித் தருவார்கள் என்பது கூடுதல் சிறப்பு. அரை நூற்றாண்டினைக் கடக்கவிருக்கும் இவ்வேளையிலும் அந்த ஆசிரியர்களை நினைக்கையில், நான் இரண்டாம் வகுப்பு படித்த வகுப்பறைக் காட்சிகள் என் கண்முன்னே வந்துபோகின்றன.

'அதோ பாரு காரு;
காருக்குள்ளே யாரு..?
நம்ம மாமா நேரு...
நேரு என்ன சொன்னாரு..?
நல்லாப் படிக்கச் சொன்னாரு..!'

- என்று கமலா டீச்சர் பாடும்போதெல்லாம், 'அதோ பாரு காரு...' எனப் பள்ளிக்கூட வாசலுக்கு வெளியே நீளும் அவரது சுட்டுவிரலை நோக்கியே என் பார்வையும் செல்லும். அது வெறும் பாடலாக எனக்குள் பதியவில்லை. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான பண்டித ஜவஹர்லால் நேருவே எங்கள் பள்ளிக்கு வந்து, என்னைப் பார்த்து, 'நல்லாப் படி' என்று சொல்வது போலவே இருக்கும்.

அதேபோல், முகத்திற்கு நேராகக் கையை நீட்டி, ஒரு பெரிய வட்டத்தைப் போட்டபடியே பாடத் தொடங்குவார் மேரி டீச்சர். பாடும்போது இடுப்பை ஆட்டிக்கொண்டு, அதிலும் ஒரு வட்டம் போடுவார்.

'வட்டமான தட்டு
தட்டு நிறைய லட்டு
லட்டு மொத்தம் எட்டு.

எட்டில் பாதி விட்டு,

எடுத்தான் மீதம் கிட்டு.

மீதம் உள்ள லட்டு

முழுதும் தங்கை பட்டு

போட்டாள் வாயில், பிட்டு.

கிட்டு நான்கு லட்டு;

பட்டு நான்கு லட்டு;

மொத்தம் தீர்ந்த தெட்டு

மீதம் காலித் தட்டு!'

- என்று வெறும் கையையே தட்டாகப் பாவித்து, அவர் அதைக் கவிழ்த்துப் போடுகையில் எட்டு லட்டுகளையும் தின்று தீர்த்த களிப்பு எனக்கு உண்டாகும்.

ஒருமுறை எங்கள் பள்ளிக்குத் தொடக்கக் கல்வி அலுவலர் ஒருவர் பார்வையிட வர, அவர் முன்னே பாடலொன்றினைப் பாடுவதற்கு ஆசிரியர் என்னைத் தயார்படுத்தினார்.

'அணிலே, அணிலே ஓடி வா

அழகு அணிலே, ஓடி வா.

கொய்யா மரம் ஏறி வா.

குண்டுப் பழம் கொண்டு வா.

பாதிப் பழம் உன்னிடம்;

பாதிப் பழம் என்னிடம்;

கூடிக் கூடி இருவரும்

கொறித்துக் கொறித்துத் தின்னலாம்!'

- என்று குழந்தைத்தனத்திற்கான குதூகலத்தோடு நான் ஆடிக்கொண்டே பாடி முடிக்க, "வாயை நல்லாத் தொடச்சிக்க. கொய்யாப்பழம் ஒட்டியிருக்கு பாரு!" என்று சொல்லி, என் கன்னத்தைத் தட்டிச்சென்ற அந்தத் தொடக்கக் கல்வி அலுவலரை எப்படி மறப்பேன்?

அப்போதெல்லாம் பாடல்களைப் பாடி முடித்ததும், கடைசியாக எழுதியவரின் பெயரையும் பாடலின் முடிவில் சேர்த்துச்சொல்வது வழக்கம். அப்படியாக நான் பள்ளி நாட்களில் உச்சரித்த பெயர்களில் அதிகமாகச் சொன்ன பெயர் அழ.வள்ளியப்பா என்பதாகவே இருக்கும். வெறும் பெயராக மட்டுமே நான் சிறுவயதில் அறிந்திருந்த 'குழந்தைக் கவிஞர்' என்று எல்லோராலும் அறியப்படும் சிறுவர் இலக்கிய ஆளுமையான அழ.வள்ளியப்பாவை, எண்பதுகளின் தொடக்கத்தில்தான் நான் கவிதைகள் எழுதத் தொடங்கிய நாட்களில் நெருக்கமாகக் கண்டுகொண்டேன்.

எனது மாமாவின் உறவினர் வீட்டுத் திருமணம் ஒன்றிற்காக அம்மா என்னை இராயவரத்திற்கு ஒருமுறை அழைத்துச் சென்றார். அந்த ஊரில்தான் அழ.வள்ளியப்பா பிறந்தார் என்பதறிகையில் என் மனமும் உடலும் மெல்லச் சிலிர்த்தன.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள இராயவரத்தில் 1922ஆம் ஆண்டு நவம்பர் 7 அன்று, அழகப்ப செட்டியார், உமையாள் ஆச்சி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவரே அழ.வள்ளியப்பா. பெற்றோர் சூட்டிய பெயர் வள்ளியப்பன். இராயவரம் காந்தி ஆரம்பப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை படித்துவிட்டு, பிறகு இராமச்சந்திரபுரத்திலுள்ள பூமீசுவரசுவாமி இலவச உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து படித்தார்.

தன் வீட்டிலிருந்து 4 கி.மீ தொலைவிலுள்ள பள்ளிக்குத் தினமும் நடந்து சென்றுதான் படித்து வந்தார் அழ.வள்ளியப்பா. செல்லும் வழியெங்கும் இருக்கும் மரங்களையும், செடிகளையும், பூக்களையும் கண்டு மகிழ்ச்சி கொள்வார். பறவைகளைக் கண்டால் உற்சாகமாகிவிடுவார். கவிதை மனதோடு இருந்த அழ.வள்ளியப்பா, தனது 13ஆவது வயதில் கவிதைகளை எழுதத் தொடங்கினார்.

பொருளாதார நெருக்கடியில் மேலும் படிக்க இயலாமல் 1940இல் சென்னைக்கு வந்த அழ.வள்ளியப்பா, 'சக்தி' வை.கோவிந்தன் நடத்திவந்த 'சக்தி' பத்திரிகையில் காசாளராகப் பணியில் சேர்ந்தார். 'சக்தி' ஆசிரியராக இருந்த தி.ஜ.ரங்கநாதனின் தூண்டுதலில் அழ.வள்ளியப்பா எழுதிய முதல் கதை, 'ஆளுக்குப் பாதி' எனும் பெயரில் வெளியானது. இந்தியன் வங்கியில் 1941ஆம் ஆண்டு பணியில் சேர்ந்தார். வங்கிப் பணியைச் செய்துகொண்டே, சிறுவர்களுக்கான கவிதை, கதை, கட்டுரைகளையும் எழுதத் தொடங்கினார்.

1944ஆம் ஆண்டில் தனது 22ஆவது வயதில் 23 பாடல்கள் கொண்ட 'மலரும் உள்ளம்' சிறுவர் பாடல் நூலை வெளியிட்டார். சிறுவர்கள், பெரியவர்கள் என அனைவரையும் அழ.வள்ளியப்பாவின் பாடல்கள் ஈர்த்தன. எளிய உவமைகளைக் கொண்ட, சிக்கலில்லாத மொழியில் எழுதப்பட்ட அழ.வள்ளியப்பாவின் பாடல்களுக்கென்று ஒரு இரசிகப் பட்டாளமே உருவானது.

1950ஆம் ஆண்டு தமிழ்ச் சிறுவர் படைப்புகளின் பொற்காலமானது. பல நூறு சிறுவர் படைப்பாளர்கள், எண்ணற்ற சிறுவர் இதழ்கள் வெளிவந்த காலமது. வங்கிப் பணியிலிருந்துகொண்டே பாலர் மலர், டமாரம், சங்கு போன்ற சிறுவர் இதழ்களுக்குக் கௌரவ ஆசிரியரானார் அழ.வள்ளியப்பா. 'பூஞ்சோலை' இதழின் ஆசிரியராக 1951 முதல் 1954 வரை பொறுப்பேற்றார். 41 ஆண்டுகாலம் வங்கிப் பணியாற்றி ஓய்வுபெற்றதும், 1983 தொடங்கி 1987 வரை 'கோகுலம்' இதழின் ஆசிரியராகப் பணி செய்தார். குழந்தை எழுத்தாளர்கள் சங்கம் எனும் அமைப்பினை 1950இல் உருவாக்கி,



அதன் தலைவராக சக்தி வை.கோவிந்தனை அமர்த்தி, அச்சங்கத்தின் செயலாளராக இருந்து செயல்பட்டார். பிறகு நிறுவனர், தலைவர் உள்ளிட்ட பல பொறுப்புகளை வகித்தார்.

ஒருவர் கவிஞராக இருந்துவிடலாம். ஆனால் குழந்தைக் கவிஞராக இருப்பதென்பது கடினமானது. ஏனென்றால் ஒப்பனைகளே இல்லாத குழந்தைகளின் இயல்புலகில் உண்மையும் எளிமையுமே பிரதானமானது. அதுவும் குழந்தைகளுக்குப் பிடித்தமான மொழியில், குழந்தைகள் விரும்பிப் படிக்கும் நடையில் எழுத வேண்டும். இந்தச் சவாலான பணியைச் செய்து, குழந்தை இலக்கியத்தில் சாதனை படைத்தவர் அழ.வள்ளியப்பா. 'வீடு எங்கே?' என்றொரு குழந்தைப் பாடல், எப்போதும் என் நினைவிலிருக்கும் அற்புதமான பாடலது;

'வண்ணக் கிளியே, வீடெங்கே?
மரத்துப் பொந்தே என்வீடு.

தூக்கணாங் குருவி, வீடெங்கே:
தொங்குது மரத்தில் என்வீடு.

கறுப்புக் காகமே, வீடெங்கே ?
கட்டுவேன் மரத்தில் என்வீடு.

பொல்லாப் பாம்பே, வீடெங்கே ?
புற்றும் புதருமே என்வீடு.

கடுகடு சிங்கமே, வீடெங்கே?
காட்டுக் குகையே என்வீடு.

நகரும் நத்தையே, வீடெங்கே?
நகருதே என்னுடன் என்வீடு!'

-வெறும் பாடல் மட்டுமா இது; இல்லையே... சிற்றுயிர்கள் வாழும் இடங்களைச் சுட்டுவதோடு, நம்மைப்

போலவே அவையும் இந்த மண்ணில் வாழ்கின்றன என்பதைக் குழந்தைகள் மனதில் இயல்பாகப் பதியுமாறு செய்துவிடுகிறார் அழ.வள்ளியப்பா.

ஒருமுறை செய்தியாளர் ஒருவர் அழ.வள்ளியப்பாவிடம், "நீங்கள் ஏன் பெரியவர்களுக்காக எழுதுவதில்லை?" என்று கேட்டார். "பெரியவர்களுக்கு எழுதுவதற்காகத்தான் ஏராளமான பெருங்கவிஞர்கள் இருக்கிறார்களே, நான் எதற்காக எழுத வேண்டும்?" என்று பதில் கேள்வி கேட்டார் அழ.வள்ளியப்பா.

தான் எழுதுவதோடு நில்லாமல், சிறுவர் படைப்புகள் எழுதும் எழுத்தாளர்கள் அனைவரையும் அமைப்பாக ஒன்று திரட்டி, அவர்களுக்கெல்லாம் வழிகாட்டியாகவும் முன்னோடியாகவும் விளங்கியவர் அழ.வள்ளியப்பா. சிறுவர் இலக்கியங்களுக்கு ஆண்டுதோறும் போட்டிகள் நடத்தி, தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வழங்கினார். தமிழில் மட்டுமல்லாது திராவிட மொழிகளிலும் குழந்தை இலக்கியப் படைப்புகள் தரமான நூல்களாக வெளிவர காரணமாகவும் இருந்தார்.

*1981*இல் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில் 'வளர்ந்து வரும் குழந்தை இலக்கியம்' எனும் தலைப்பில் சிறப்பானதொரு உரையினை ஆற்றினார். அம்மாவும் அத்தையும், ரோஜாச்செடி, உமாவின் பூனைக்குட்டி, மணிக்கு மணி, கதை சொன்னவர் கதை, மூன்று பரிசுகள், எங்கள் கதையைக் கேளுங்கள், பாட்டிலே காந்தி கதை, நேரு தந்த பொம்மை, நீலா மாலா, சின்னஞ்சிறு வயதில், பெரியோர் வாழ்விலே... என ஐம்பதுக்கும் மேற்பட்ட அழகிய நூல்களைப் படைத்து, சிறுவர் இலக்கியம் செழித்துயரச் செய்த பெருமை அழ.வள்ளியப்பாவினுடையது. *1961*இல் 'சிரிக்கும் பூக்கள்' சிறுவர் பாடல் தொகுப்பினை வெளியிட்டார். அந்த நூல் 'குழந்தைக் கவிஞர்' எனும் சிறப்புப் பட்டத்தைக் கவிஞருக்குப் பெற்றுத் தந்தது. தென்னாட்டு ஆறுகள் பற்றி 'நம் நதிகள்' என்ற தலைப்பில் அழ.வள்ளியப்பா எழுதியவை, நேஷனல் புக் டிரஸ்ட் மூலமாக *14* இந்திய மொழிகளிலும் நூலாக வெளியாயின.

'ஏடு தூக்கிப் பள்ளியில்

இன்று பயிலும் சிறுவரே

நாடு காக்கும் தலைவராய்

நாளை விளங்கப் போகிறார்!'

- எனும் நம்பிக்கையைக் குழந்தைகள் மீது வைத்ததோடு, அதனைக் குழந்தைகள் மனதில் பதியும்வண்ணமாக அர்த்தமிக்க பாடல்களாகவும் தந்தவர் குழந்தைக் கவிஞர். "குழந்தைகள் இன்பமே எனது இன்பம். அவர்களுக்குத் தொண்டு செய்வதே என் முக்கியக் குறிக்கோள்" என்று தனது 'மலரும் உள்ளம்' நூலின் முன்னுரையில் எழுதிய வரிகளுக்கேற்ப வாழ்ந்துகாட்டியவர் அழ.வள்ளியப்பா.

"தமிழில் நான்கு வகையான பாக்கள் உண்டு என்பது தெரியும். ஆனால், என்னைப் பொறுத்தவரை பா வகைகள் ஐந்து. அவை ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, வள்ளியப்பா!" என்று மூதறிஞர் வ.சுப. மாணிக்கத்தால் பாராட்டப்பெற்ற அழ.வள்ளியப்பாவின் குழந்தைப் பாடல்களில் எளிமை, இனிமை, தெளிவு ஆகிய பண்புகள் நிறைந்திருப்பதோடு, குழந்தைகளின் ஆளுமையைச் செதுக்கும் வகையில் நேரடியான போதனைகளில்லாத நல்ல செய்தியொன்றும் உட்பொதிந்திருக்கும்.

குழந்தைகளோடு பழகும்போதும், குழந்தைப் பாடல்களை எழுதும்போதும் தானுமொரு குழந்தையாக மாறிவிடுபவர் அழ.வள்ளியப்பா. விடுமுறை நாட்களில் கதை கேட்பதற்கென்றே அவரது வீட்டை நோக்கிக் குழந்தைகள் படையெடுத்து வருவர். தமிழகத்தில் குழந்தைப் புத்தகக் காட்சி, குழந்தை நூல் வெளியீடு, குழந்தைகள் நாடக விழா, குழந்தை எழுத்தாளர் மாநாடு, குழந்தை எழுத்தாளர்களுக்குப் பரிசுகள், பதக்கங்கள்

போன்றவற்றை முன்னெடுத்த முதல் ஆளுமையாகத் திகழ்ந்தார் அழ.வள்ளியப்பா. 'குழந்தை எழுத்தாளர் யார்? எவர்?' எனும் நூலினைக் குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் மூலமாக வெளியிட்டார்.

தனது நூல்களுக்காக இரண்டு முறை மத்திய அரசின் பரிசினையும், ஆறு முறை தமிழக அரசின் பரிசினையும் பெற்ற தமிழ் எழுத்தாளர்கள் வேறு யாருமில்லை என்பதும் அழ.வள்ளியப்பாவின் சிறப்புகளுள் ஒன்று.

குழந்தைகளுக்கென்றே 2000க்கும் அதிகமான பாடல்களை எழுதியுள்ள குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா, நூற்றுக்கும் மேற்பட்ட சிறுவர் கதைப் பாடல்களையும் எழுதியுள்ளார். ஒவ்வொரு பாடலுக்குள்ளும் இருக்கும் சுருக்கமான – அழகான கதை, படிக்கும் எவர் மனதிலும் ஒரு தாக்கத்தை உண்டாக்கத் தவறாது. எல்லாப் பாடல்களையும் படித்த பிறகு எந்தப் பாடலைத் தேர்வு செய்வதென்று புரியாமல் குழம்பிப்போனேன். ஆனாலும் உங்களுக்காக ஒன்று;

'அன்னை மொழி' என்பது அந்தக் கதைப் பாடலின் பெயர்.

'குருவி ஒன்று மரத்திலே
கூடு ஒன்றைக் கட்டியே
அருமைக் குஞ்சு மூன்றையும்
அதில் வளர்த்து வந்தது.
நித்தம் நித்தம் குருவியும்
நீண்ட தூரம் சென்றிடும்
கொத்தி வந்து இரைதனைக்
குஞ்சு தின்னக் கொடுத்திடும்.
இறைவன் தந்த இறகினால்
எழுந்து பறக்கப் பழகுவீர்
இரையைத் தேடித் தின்னலாம்
என்று குருவி சொன்னது.
நன்று நன்று நாங்களும்
இன்றே பறக்கப் பழகுவோம்
என்று கூறித் தாயுடன்
இரண்டு குஞ்சும் கிளம்பின.
ஒன்று மட்டும் சோம்பலாய்
ஒடுக்கிக் கொண்டு உடலையே
அன்று கூட்டில் இருந்தது
ஆபத் தொன்று வந்தது.
எங்கி ருந்தோ வந்தனன்
ஏறி ஒருவன் மரத்திலே
அங்கி ருந்த கூட்டினை
அருகில் நெருங்கிச் சென்றனன்.
சிறகு இருந்தும் பறக்கவே
தெரிந்தி டாமல் விழித்திடும்
குருவிக் குஞ்சைப் பிடித்தனன்
கொண்டு வீடு சென்றனன்.
குருவிக் குஞ்சு அவனது
கூட்டில் வாட லானது
அருமை அன்னை உரைத்தது
அதனின் காதில் ஒலித்தது.'

இந்தச் சின்னஞ்சிறு கதைப் பாடலின் வழியே குழந்தைகள் மனதில், 'பெற்றோர் சொல் கேளீர்' என்பதை எவ்வளவு ஆழமாக – நேர்த்தியாகப் பகிர்ந்துள்ளார் அழ.வள்ளியப்பா.

தமிழ்ச் சிறுவர் இலக்கியத்தின் முகமாக விளங்கிய அழ.வள்ளியப்பா, தனது 67ஆவது வயதில் 1989ஆம் ஆண்டு மார்ச் 16 அன்று இம்மண்ணுலக வாழ்விலிருந்து விடைபெற்றார்.

2022ஆம் ஆண்டு குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பாவின் நூற்றாண்டு விழா. அவர் பிறந்த மண்ணில் நானும் பிறந்து, அவரது நூற்றாண்டில் ஒன்றிய அரசு வழங்கும் சிறுவர் இலக்கியத்திற்கான 'பால சாகித்திய புரஸ்கார்' விருதினை, எனது 'அம்மாவுக்கு மகள் சொன்ன உலகின் முதல் கதை' நூலிற்காகப் பெற்றதில் உளமாற மகிழ்ந்தும் நெகிழ்ந்தும் போகிறேன்.

- இன்னும் சொல்வேன்... ■

சிறுகதை

அ.வால்டர் ராபின்சன்

ஓவியங்கள் : திண்டுக்கல் தமிழ்பித்தன்

அரூபத்தின் கரங்கள்

நெருப்பு புகைந்து சிகரெட்டின் கடைசி நுனியை நெருங்கிக்கொண்டிருந்தது. நிஜந்தன் உதட்டைக் குவித்து மூச்சை உள்ளிழுத்தபோது அலைபேசி ஒலித்தது. `

`சார்.. நெய்க்காரபட்டிகிட்ட ஒரு பொண்ணு இருக்கு சார். டீச்சரா இருக்குது. பிரைவேட் ஸ்கூல் டீச்சர்தான். ரெண்டு வருசத்துக்கு முந்தி அந்தப் பொண்ணோட வீட்டுக்காரு ஆக்ஸிடண்ட்ல இறந்துட்டாப்ல. இப்போ அவங்க வீட்ல வரன் பார்த்துட்டு இருக்காங்க. கேட்டுப் பாப்போமா?`

`என்னப் பத்தின விவரங்கள மொதல்ல சொல்லிப் பாருங்க. அதுக்குப் பெறகும் அவங்க என்னோட போட்டோவ கேட்டா காட்டுங்க. மத்ததெல்லாம் பின்னாடி பேசிக்கலாம்..`

தரகரின் கேள்விக்குப் பதிலளித்துவிட்டு சிகரெட்டைக் கீழே போட்டு அணைத்தான். வழக்கமாகத் தரகர் கேட்கும் அதே கேள்வி, மாற்றங்களே இல்லாமல் அவன் கூறுகிற அதே பதில். இம்முறையும் பெரிய வேறுபாடுகள் ஏதுமில்லை.

அறையை நோக்கி வேகமாக நடந்தான். வழியில் ஒரு பால் பாக்கெட்டை வாங்கிக்கொண்டான்.

வீட்டின் கதவைத் திறந்ததும் `மியாவ்` என்ற சத்தம் வந்த திசையில் பச்சை நிற விழிகளை உருட்டிக்கொண்டு மிஸ்ஸியம்மா இருளில் நின்றுகொண்டிருந்தது. உள்ளே நுழைந்ததும் தாழிட்டுக்கொண்டான். பகலோ இரவோ ஒருநாள் கூட நிஜந்தன் தனது அறையில் வெளிச்சத்தை அனுமதித்ததே இல்லை. விளக்கை

எரியவிட மாட்டான். தேவைப்பட்டால் அலைபேசியின் விளக்கையோ அல்லது திரை ஒளியையோ பயன்படுத்துவான்.

`கொஞ்சம் பொறு மிஸ்ஸி.. மாமா பால காய்ச்சிட்டு உனக்குத் தர்றேன்.`

அவனது சொற்களுக்குப் பதிலளிப்பது போல `மியாவ்வ்வ்வ்` எனச் சிணுங்கியது.

`வீட்ட விட்டு வெளியில போகவே பிடிக்கல. இந்த மனுசங்க ஏன் இப்டி இருக்காங்க மிஸ்ஸியம்மா?`

அடுப்பங்கரையிலிருந்து அவன் கேட்ட கேள்விக்கு உணர்ச்சியற்று நின்றுகொண்டிருந்தது மிஸ்ஸி. அறையின் இருளுக்குள் வாயு அடுப்பின் நெருப்பு ஒளியில் ஒரு கோட்டோவியம் போல அவன் மிஸ்ஸியின் கண்களுக்குத் தெரிந்தான். கைக்குட்டையை முக்கோணமாக மடித்து முகத்தில் கட்டியிருந்தான். வீட்டிற்குள் நுழைந்ததிலிருந்து இன்னமும் அவன் அதை அகற்றவில்லை. வீட்டை விட்டு வெளியில் செல்லும்போதெல்லாம் இப்படி கைக்குட்டையை முக்கோணமாக முகத்தில் கட்டிக்கொண்டு, கருப்பு நிறக் கண்ணாடியை அணிந்துகொள்வான்.

பாலைக் காய்ச்சி எடுத்துவந்து ஒரு பீங்கான் தட்டில் ஊற்றி மிஸ்ஸியின் முன்னால் வைத்தான். அது தன் முன்னங்கால்களை விரைப்பாக வைத்துக்கொண்டு அவனைப் பார்த்தது.

`நான் சாப்பிட்டேனானு பாக்குறியா? மாமா.. கோழி நாடார் கடைல செட் பரோட்டா சாப்டேன். நீ பாலக் குடி..`

அவன் சொன்ன அடுத்த நொடி பாலைக் குடிக்க ஆரம்பித்தது மிஸ்ஸி. முகத்திலிருந்த கைக்குட்டையை அகற்றி வீசியெறிந்தான். மிஸ்ஸி பாலைக் குடிப்பதை நிறுத்திவிட்டுத் தனது பச்சை நிற விழிகளை உருட்டி அவனது முகத்தைப் பார்த்துக்கொண்டேயிருந்தது.

`என்னா.. மிஸ்ஸிமா மாமாவையே பாத்துக்கிட்டு இருக்க? இந்த மூஞ்சிய ஏறெடுத்துப் பாக்குறது நீ மட்டும்தான். இதுல கொசகொசனு வெட்டுத் தழும்பும், ஒதுங்குன தாடையும் தவிர வேற என்னா இருக்கு? பாலக் குடி.`

மிஸ்ஸி பாலைக் குடிப்பதும் அவனை நிமிர்ந்து பார்ப்பதுமாக இருந்தது.

`சரி.. உங்கிட்ட ஒன்னு கேக்கணும்.. இந்த வீட்டுக்குள்ள வேற யாராவது இருக்காங்களா? உன்னையும் என்னையும் தவிர! உன் கண்ணுக்குத் தெரிஞ்சா சொல்லு மிஸ்ஸிம்மா.`

மிஸ்ஸி அவனைப் பாவமாகப் பார்த்தது. அதனருகில் வந்து மெல்லிய குரலில் கிசுகிசுத்தான்.

`ஏன் கேக்குறேன்னா.. நடு சாமத்துல நல்லா அசந்து தூங்குறப்ப, யாரோ என் தலையில கைய வச்சு வருடிக் குடுக்குற மாதிரியே இருக்கு மிஸ்ஸிமா. சரி.. முழிச்சு யாருனு பாக்கலாம்னு தோணும், என் தலைய இவ்வளவு அன்போட வருடிக் குடுக்குற அந்தக் கைய ஒரு தடவையாவது தொடணும்.. அந்த முகம் யாரோடதுனு பாக்கணும்னு ஆசையா இருக்கும். ஆனா பயத்துல கண்ண இறுக்கமா மூடிக் கண்ணுக்குத் தெரியாத அந்த அன்ப அனுபவிச்சிக்கிட்டே தூங்கிடுறேன். கடைசி பத்து நாளா இது தெனமும் நடக்குது. உங்கிட்ட சொல்லணும்னு நினைப்பேன். ஆனா மறந்துடுறேன். அதான் கேட்டேன் உன் கண்ணுக்கு ஏதாவது தென்படுதானு. ஒரு வேள லட்சுமி அத்தையா இருக்குமோனு தோணுச்சு. ஆனா அதான் செத்துப்போச்சே... அந்தக் கை என் தலைய வருடிக் குடுக்குறப்போ அவ்வளவு நல்லாருக்கு. ஆனா பயமாயிருக்கு. இதுவரைக்கும் ரெண்டு மூனு தடவ அந்தக் கை என் தலைய தொடுறப்போ தூக்கத்துல இருந்து முழிச்சிருக்கேன். ஆனா சுத்திப் பாத்தா யாருமே இருக்க மாட்டாங்க. சரின்னு படுத்தா கொஞ்ச நேரத்துல திரும்ப வந்து தலைல கை வைக்கும். பயந்து போயி அந்த மூலையில கண்ண மூடி நைட்டு முழுக்க உக்காந்து இருந்துருக்கேன்னு உனக்குத் தெரியாது. நான் கூட நீயா இருப்பியோனு நினைச்சேன். ஆனா நீதான் கட்டிலுக்கு அடியில போயிப் படுத்துருப்பியே?! யாருன்னே தெரியல மிஸ்ஸி. வெளியில போயி இதச் சொன்னா நாலு பேரு என்ன

நெனப்பான்? ஏற்கனவே என் மூஞ்சி இப்பிடி இருக்கு. இதச் சொன்னா அவ்வளவுதான். அதனால நீ என்ன பண்ற... இன்னைக்கு நைட்ல இருந்து என் பக்கத்துல படுக்குற.. என்னைய தனியா விட்டுட்டுக் கட்டிலுக்குக் கீழ போயிப் படுக்காத மிஸ்ஸிம்மா ப்ளீஸ்.`

இயல்பாகச் சொல்லிவிட்டு அவன் அலைபேசியில் எதையோ ஆர்வமாகப் பார்த்துக்கொண்டிருந்தான். இப்படித்தான் அவன் உறங்கும்போதெல்லாம் ஒரு கை அவனது தலையைக் கோதிவிட்டுக்கொண்டிருப்பதாக நினைத்தான்.

துவக்கத்தில் இதைக் கனவென்று நினைத்தான். பகல் பொழுதுகளில் வேலையிலிருக்கும்போது அந்தக் கரத்தின் தீண்டல்கள் நிகழப்போகிற இரவிற்காக ஆவலோடு காத்திருப்பான். ஆனால், இரவுகளில் அந்தக் கரம் அவன் தலையைத் தீண்டும்போதெல்லாம் பயமும் மகிழ்வும் கலந்த, தன்னை அதனிடம் முழுமையாக ஒப்படைத்துவிட்டதைப் போல உணர்ந்தான்.

இரண்டு நாட்களுக்கு முன்பு கூட மதிய உணவு நேரத்தில், அந்தக் கரத்தின் தோற்றத்தைக் கற்பனை செய்து பார்த்தான். வானத்திலிருந்து நிஜந்தனை நோக்கி இறங்குகிற அந்த மஞ்சள் நிறக் கரம், அவனது தலையின் மீது தன் ஐந்து விரல்களால் அழுத்தியபோது அவன் வாழ்வின் மொத்தப் பிணிகளும் மின்னலைப் போல வெளியேறி அவன் முகமும் உடலும் முன்பைப் போல அழகாக மாறின. இமைகளை மூடி லயித்திருந்த நிஜந்தனின் தலையைப்



பேரன்போடு வருடிக் கொடுக்கத் துவங்கிய அந்தக் கரத்தில் மிக நெருக்கமானதொரு பெண்மையின் கதகதப்பை உணர்ந்தான்.

அவனது இரவுகளில் அரவணைக்கும் அந்தக் கரத்தின் தீண்டலுக்கும், கற்பனை செய்த மஞ்சள் நிறக் கரத்தின் தோற்றத்திற்கும் யாரோ ஒருத்திதான் உடையவளாக இருக்க வேண்டும் என்பது அவனது அவதானிப்பு. இனி வரப்போகிற இரவுகளில் நிச்சயம் அந்தக் கரம் தலை கோத வரும். அப்படி தன்னைத் தொடுகிறபோது சட்டெனப் பற்றி, அந்தக் கரத்திற்குச் சொந்தக்காரியின் முகத்தைப் பார்த்துவிட வேண்டும் என்கிற ஆவல் அவனுக்குள் அதிகரித்தது. ஆனால் அதை விடப் பெரிதாக முன் நிற்கும் பயத்தைத் தாண்டி இதை எப்படி நிகழ்த்துவது என்பது சவாலாகத் தோன்றியது. அதனால்தான் மிஸ்ஸியின் கண்களுக்கு எதுவும் உருவம் தெரிகிறதா? என இப்போது கேட்டுப் பார்த்தான்.

நிஜந்தன் இன்னமும் அலைபேசியில்தான் மூழ்கியிருந்தான். கைக்குட்டையால் மறைக்கப்படாத அவனது முகம், இருள் சூழ அலைபேசித் திரையின் வெளிச்சத்தில் கொடூரமாகத் தெரிந்தது.

மிஸ்ஸி பாலை முழுவதுமாகக் குடித்துவிட்டு மீண்டும் அவனது முகத்தை ஆராயத்துவங்கியது. நிஜந்தனின் முகத்திலிருந்த ஆழமான வெட்டுத் தழும்புகள் மிஸ்ஸியை அதன் பால்யத்தின் சில நினைவுகளுக்குள் இழுத்துச் சென்றன.

மிஸ்ஸி பிறந்து இரண்டு வாரமாக இருக்கும்போது, லட்சுமி அத்தை வீட்டில் வைத்துதான் முதன்முதலாக நிஜந்தன் அதைப் பார்த்தான்.

`எப்போ இருந்து பூனை வளக்க ஆரம்பிச்சீங்க அத்த?` எனக் கேட்ட பொழுதில்தான் மிஸ்ஸியும் நிஜந்தனைப் பார்த்தது.

`காலைல அஞ்சர மணியிருக்கும்.. மூக்கன் கடையில பால் வாங்கப் போனப்போ காலுக்குள்ளாரப் புகுந்து ஓடிக்கிட்டிருந்துச்சு. பாவம்.. அதால குளுரு வேற தாங்க முடில.

அப்பிடியே பின்னாடி வர ஆரம்பிக்கவும் சரினு கூட்டியாந்துட்டேன்.`

`தொட்டா பறாண்டுமா அத்த?`

`அதெல்லாம் ஒன்னும் பண்ணாது சும்மா தூக்கு... குட்டிதான.`

லட்சுமி சொன்னதும் தயக்கத்தோடு தொட்டுத் தூக்கினான்.

பொசுபொசுவென மயிர்களும், எலும்பும் தோலுமான உடலும் அவனது உள்ளங்கைகளில் நெளியத் துவங்க, சட்டெனக் கீழே இறக்கிவிட்டான்.

`கையெல்லாம் ஒரு மாதிரி கூசுதுத்த..`

`மொத வாட்டி தூக்குரல்ல. அப்பிடித்தான் இருக்கும். ஒரு ரெண்டு மாசத்துக்கு நல்ல ஊட்டமாக் குடுத்தா கொழுகொழுனு தேறி வந்துரும்.. சரி.. உனக்கு நேரங் கெடைக்கிறப்ப சதீசுக்குக் கொஞ்சம் இங்கிலீசு சொல்லிக்குடேன். அது ஒன்னுதான் அவனுக்கு வர மாட்டுது.`

`சொல்லித் தர்றேங்கத்த.`

`இந்த வருசத்தோட காலேஜ்ஜ முடிச்சுட்டு, சீக்கிரமா நல்ல வேலைல சேர்ந்து உங்கம்மா அப்பாக்குச் சம்பாதிச்சுப் போடு. அப்பவாச்சும் உன்ன கரிச்சுக் கொட்டுறத ரெண்டு பேரும் நிப்பாட்டட்டும்.`

மிஸ்ஸியை மடியில் வைத்து வருடிக்கொண்டே லட்சுமி சொன்னாள். அது நிஜந்தனுக்குச் சரியென்பதாகத்தான் தோன்றியது. அவனுக்கு ஏழு வயதாக இருந்தபோது, வீட்டுக்கு எதிரிலிருந்த டெய்லர் கடை ஓனரோடு தன் அம்மா படுத்திருந்ததை நிஜந்தன் பார்த்துவிட்டதால், எங்கே வெளியே சொல்லிவிடுவானோ என்கிற பயத்தில் ஈச்சமாறு பிய்ந்து உதிரியாகிற அளவிற்கு இப்படிச் சொல்லித்தான் அடித்தாள்.....

`எம் மூத்த மக பொறந்தப்போ வீட்டுல செல்வம் கொட்டோ கொட்டுனு கொட்டுச்சு.. சனியன் நுழைஞ்ச மாதிரி எப்போ நீ வந்து பொறந்தியோ.. எல்லாம் வழிச்சு நக்கிட்டுப் போயிருச்சு. உங்கப்பனுக்கும் எனக்கும் ஓயாத சண்ட. பொழுதைக்கும் குடி.. குடும்பமே உன்னால நாசமாப் போச்சு. நீ பொறக்கவே கூடாதுனு திங்காத மருந்தில்ல. வேண்டாத சாமியில்ல. எங்களக் காவு வாங்குறதுக்குனே வந்துருக்கு எழவு..`

நல்ல வருமானம் வந்த மிதப்பில் குடித்தும் சூதாடியும் தொழிலை நட்டமாக்கிக்கொண்ட நிஜந்தனின் அப்பனும் `எங்களுக்குனு வந்த தரித்திரம்` என அவனை அடிக்காத நாளில்லை.

அம்மாவும் அப்பாவும் தம்பியைப் பற்றிச் சொல்வது உண்மையென அக்காளும் நம்பினாள்.

`ஏன் அடிக்கிறார்கள், திட்டிக்கொண்டேயிருக்கிறார்கள்? அப்பா அம்மாவே வெறுக்கும் அளவிற்கு அப்படி என்ன செய்துவிட்டோம்?` என நிஜந்தன் யோசித்தும் விடை கிடைத்ததில்லை.

`என்னாலதான் எங்கப்பா அம்மாவுக்கு இவ்வளவு கஷ்டம்` என்கிற குற்றவுணர்ச்சி, பதினைந்து வயதைக் கடப்பதற்குள்ளாகவே மனதளவில் அவனைக் கொன்று போட்டது.

அவன் பதினோராம் வகுப்பிற்குள் அடியெடுத்து வைத்தபோதுதான் நான்கு வீடு தள்ளி லட்சுமி அத்தை குடி வந்தாள். நிஜந்தனின் அம்மாவோடு லட்சுமி அத்தை பேசும்போதெல்லாம் அவனைப் பற்றி எதிர்ப்பதமாகத்தான் கேள்வியுற்றாள். ஆனால் நிஜந்தன் தன் பெற்றோரைப் பற்றி ஒருமுறை கூட லட்சுமியிடம் தவறாகச் சொன்னதில்லை.

லட்சுமி தன் மகனையும் மிஸ்ஸியம்மாவையும் மடியில் சாய்த்துக்கொண்டு தலை கோதிவிடுகையில் நிஜந்தனுக்குத் தன் அம்மாவின் மடியில் இதே போல படுத்துக்கொண்டு அவள் விரல்களால் தனது தலையையும் கோதிட வேண்டும் என ஆசையாக இருக்கும். ஆனால் அதெல்லாம் நிகழச் சாத்தியங்கள் இல்லையெனத் தன்னைத் தானே ஆசுவாசப்படுத்திக்கொள்வான்.

கல்லூரி முடித்து ஒன்றிரண்டு திங்கள்கள் கடந்திருந்தன. வீட்டில் அவனைத் தவிர எல்லாரும் வேலைக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். சதீஸோடு சேர்ந்து

தெருவில் இருக்கும் பையன்களோடு கிரிக்கெட் விளையாடப்போனாலும், இவனுக்குச் சரியாக விளையாடத் தெரியாதெனச் சொல்லி `சொத்தை சொத்தை` எனக் கேலி செய்வார்கள். அதனால் பகல் பொழுதுகளில் தனக்குக் கொடுக்கப்பட்ட வீட்டு வேலைகளை முடித்துவிட்டு, லட்சுமி அத்தையின் வீட்டில் மிஸ்ஸியம்மாவோடு பேசிக்கொண்டிருப்பான்.

அன்றும் அப்படித்தான் அம்மா கோதுமையை அரைக்கச் சொல்லியிருந்ததால், அரவை மில்லில் கோதுமையை அரைத்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தான்.

`தேர்வு முடிவுகள் வந்துவிட்டால், லட்சுமி அத்தை சொன்னது போல ஏதாவது ஒரு வேலையில் சேர்ந்து இப்படியான எல்லாச் சிக்கல்களிலிருந்தும் விடுபட்டுவிடலாம்` எனச் சிந்தித்துக்கொண்டு நடந்தபோது, அவனுக்குப் பின்புறத்திலிருந்து அதிவேகமாக வந்த கார் ஒன்று அவனை அடித்துத் தூக்கியெறிந்து அருகிலிருந்த கடைகளுக்குள் புகுந்தது.

சாலையோரக் கடைகள் என்பதால் எல்லாம் நொறுங்கிப்போயின. கடைகளில் நின்றுகொண்டிருந்தவர்கள் என்ன ஆனார்களோ என்கிற பதற்றத்தோடு கூட்டம் கூடிவிட்டது. முதன்முதலாக நிஜந்தனின் மீதுதான் மோதியது என்பதை யாரும் கவனிக்கவில்லை. இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்டபோது மூன்று பேர் இறந்திருந்தார்கள்.

முகம் சிதைந்த நிலையில் கடைசியாகத்தான் நிஜந்தன் மீட்கப்பட்டான். தாடை நொறுங்கி விலகியிருந்தது. மதுரை அரசு மருத்துவமனையில் வைத்துதான் சிகிச்சையளிக்கப்பட்டது. முகத்தில் மட்டும் நான்கு அறுவை சிகிச்சைகள். அவன் கண் விழித்தபோது எதையும் நம்பமுடியவில்லை. உயிரோடு இருப்பதற்காக முதல் முறையாக கவலையுற்றான்.

அம்மாவும் அப்பாவும் பேருக்கு இரண்டு நாட்கள் இருந்தார்கள். லட்சுமி அத்தை வந்தபோது அக்காவும் நழுவிக்கொண்டாள்.

`பேசாம போய்ச் சேர்ந்திருக்கலாம். இப்பவும் தொடுத்துக்கிட்டு நிக்கிது. நல்ல வேள மூஞ்சோட போச்சு. கை காலு போயிருந்தா இவன யாரு வச்சிப் பாக்குறது` என அம்மாவே சொல்வதைக் கேட்கிற பாக்கியம் அவன் காதுகளுக்கு வாய்த்திருந்தது.

தையல்கள் மொய்க்கும் அவனது முகத்தைப் பார்ப்பதற்கு அவர்கள் மூவருக்கும் அருவருப்பாய் இருந்தது. சுருட்டை முடியும் அமைதி உறைந்த அழகுமாகப் பார்த்த நிஜந்தனின் முகத்தை உருக்குலைந்து பார்த்தபோது, லட்சுமி அத்தைதான் நெஞ்சில் அடித்துக்கொண்டு அழுதாள். சங்கரன் மாமாவும் லட்சுமி அத்தையும் வேலையெல்லாவற்றையும் ஒதுக்கிவைத்துவிட்டு நிஜந்தனைக் கவனித்துக்கொண்டார்கள்.

விபத்திற்குப் பிறகு முதல்முறையாக அவன் முகத்தைப் பார்த்த மிஸ்ஸி, பயத்தில் மிரண்டு ஓடியது.

`அவனப் பாத்து எதுக்கு மிரண்டு போற? அவன் உம்மேல எவ்வளவு பாசமா இருக்கான். அவன் அப்பன் ஆத்தா பண்ற மாதிரியே நீயும் பண்றியே.. மத்தவங்க மனசு நோவுற மாதிரி இனிமே நடந்துக்காத மிஸ்ஸிம்மா. எனக்குப் பெறகு நிஜந்தா மாமாதான் உன்ன நல்லா கவனிச்சுக்கிறான். அவன விட்டு நீ எங்கயும் போகமாட்டனு அம்மாக்கு சத்தியம் பண்ணு..` என மிஸ்ஸியின் வலது முன்னங்காலைப் பிடித்துத் தன் தலையில் வைத்தாள்.

மிஸ்ஸியும் தன் காலை லட்சுமியின் தலையில் சில நொடிகள் வைத்து எடுத்தது.

ஒன்றரை வருடங்களுக்குப் பிறகு குழறிக் குழறிப் பேசத் துவங்கியிருந்தான். முன்பை விட இப்போது தாடையை அசைப்பதில் வலி குறைந்திருந்தது.

`மாட்டாஸ்பத்திரில அட்டண்டர் வேல இருக்காம். மாமா உன்னைய எழுதிப் போடச் சொன்னாரு. நீ அது என்ன வெவரம்னு மாமா வந்ததும் கேட்டு ஆக வேண்டிய வேலையப் பாரு.`

லட்சுமி அத்தை சொல்லித்தான், சங்கரன் மாமா உதவியோடு அட்டண்டர் வேலை கிடைத்தது. வேலையில் சேர்ந்த பிறகு, வீட்டிற்குக் கொடுக்க வேண்டிய

தொகையெனக் கொஞ்சத்தை மாதா மாதம் கொடுத்தான்.

அவன் உழைத்துக் கொடுத்த காசில் மட்டும், எந்தத் தரித்திரமோ அருவருப்போ அவர்களுக்குத் தெரியவில்லை. வேலை கிடைத்து எட்டு வருடங்கள் கடந்த பிறகு லட்சுமி அத்தையும் சங்கரன் மாமாவும் போன வருடம் கொரோனா காய்ச்சலில் அடுத்தடுத்து இறந்துபோனார்கள்.

வெறுமையை உணர்ந்த நிஜந்தன் தன் குடும்பத்தை விட்டு ஒரு சிறிய வீட்டில் வாடகைக்குக் குடியேறினான். அவன் தனியாகக் குடியேறியபோதே மிஸ்ஸியம்மாவும் அவனோடு வந்துவிட்டது.

`லட்சுமி அத்தையின் அன்புக்கு நிகரான ஒருத்தி தனக்காக இங்கேதான் எங்கோ இருக்கிறாள்` எனத் தரகரிடம் சொல்லி இன்றுவரை தேடிக்கொண்டிருக்கிறான்.

மிஸ்ஸி தலையை இடவலமாகக் குலுக்கிப் பழைய நினைவுகளிலிருந்து தன்னை வெளியேற்றிக்கொண்டது.

`மியாவ்வ்வ்` என அவனுக்கு சமிக்ஞை காட்டியதும் அலைபேசியைக் கீழே வைத்தான்.

`இந்த ப்ரோக்கர் பய நாளைக்கி போன் பண்ணி அந்தப் பொண்ணு வீட்ல வேணாம்ங்குறாங்க, வேற இடம் பாப்போம்னு சொல்லுவான் பாரேன். இதோட அறுபது இடத்துக்கு மேல பாத்துட்டான். என்னைய கட்டிக்கிறதுக்கு எந்தப் பொண்ணும் ஒத்துக்காதுனு தெரியும். ஒரு வேள ஒத்துக்கிட்டா?! அப்பிடினு ஒரு அற்ப ஆச அவ்வளவுதான். என்ன பண்றது... விடிஞ்சதுல இருந்து இருட்டுற வரைக்கும் இங்க எல்லாருக்கும் ஒவ்வொரு முகம் இருக்கு. உண்மையே இல்லாத முகம். ஒவ்வொரு முகமும் இன்னொரு முகத்த நம்புது, இல்ல ஏமாத்துது. ஆனா என்னைய பாரேன்.. வெளித் தோற்றத்துலயே எல்லாரும் பாத்தா கண்ண மூடிக்கிற அளவுக்கு இருக்கேன். பொய்யா நடிக்கிறதுக்குக் கூட உதவாத மூஞ்சி என்னோடது. ஆனா பாரு... மனசு முழுக்க ஒன்னுத்துக்கும் உதவாத பாசமும் எல்லாரையும் நம்புற குணத்தையும் வச்சிக்கிட்டு ஒன்னுமே கிடைக்கலயே.! எங்கம்மா சொன்ன மாதிரி அந்தக் கார் அடிச்சி போட்டப்பவே என் உயிரு போயிருக்கலாம் இல்ல மிஸ்ஸி..`

மிஸ்ஸியின் விழிகள் இப்போது பளபளவென இருந்தன. அது கண்ணீரின் பிசுபிசுப்பாகக் கூட இருக்கலாம். நிஜந்தன் கட்டிலில் படுத்துக்கொண்டான்.

`மிஸ்ஸிமா.. கட்டில் மேல வந்து மாமா பக்கத்துல படு` என்றதும் மிஸ்ஸி கட்டிலில் நிஜந்தனின் பக்கத்தில் படுத்துக்கொண்டது.

`கண்ண மூடுறதுக்குப் பயமா இருக்கு மிஸ்ஸிமா.. இன்னைக்கும் அந்தக் கை வருமோனு.. ஒருவேள அது யாருன்னு நீ பாத்தன்னா.. விரட்டி விட்ரு.. என்னதான் தலைய அன்பா வருடிக் குடுத்தாலும் தெரியாத ஆளுககிட்ட நமக்கு என்ன சகவாசம் வேண்டிக்கிடக்கு?! உன்னதான் நம்பியிருக்கேன்.`

அவன் சொல்வதையெல்லாம் கேட்டுக்கொண்ட மிஸ்ஸி.. அவன் உறங்கிய சில நிமிடங்களில் கண்ணயர்ந்தது.

நள்ளிரவுக்கு மேல் அறையில் மெல்லியதாகச் சிணுங்கல் சத்தம் கேட்டது. கண்விழித்த மிஸ்ஸி தலையைத் தூக்கிப் பார்த்தது.

ஆழ்ந்த உறக்கத்திலிருந்த நிஜந்தன், ஏதோ முனகியபடி மெதுவாகச் சிரித்துக்கொண்டிருந்தான். அவன் தலையில் யாரோ கை வைத்திருப்பது போலத் தெரிந்தது.

மிஸ்ஸி நன்றாகக் கவனித்துப் பார்த்தது. நிஜந்தனின் வலது கை மேலுயர்ந்து, அவன் தலையை வாஞ்சையாக வருடிக் கலைத்துவிட்டுக்கொண்டிருக்க, அவனே அவனது கன்னங்களைக் கிள்ளிக் கொஞ்சிச் சிரித்துக்கொண்டிருந்தான்.

அதிர்ச்சியில் உறைந்த மிஸ்ஸியம்மா தனது பச்சை நிற விழிகளை உடல் நடுங்க இறுக்கமாக மூடிக்கொண்டது. ■

தொடர் 3

ஆதிரன்

வானவில் வண்ண மின்னல்

இம்முறை மூன்று குறிச்சொற்கள் மட்டும் பார்க்கலாம்:

மனம் (mind)

நான் சிந்திக்கிறேன். அதனால் இருக்கிறேன்.

-ரெனெ தெகார்தே *(René Descartes)*.

எத்தனை முறை நீங்கள் உங்களையே கேட்டிருப்பீர்கள், `மனம் என்றால் என்ன` என்று. அடுத்த பக்கத்தைப் புரட்டும் முன், இந்தக் கேள்வியை உங்கள் மனதில் இப்பொழுது கேட்டுப் பாருங்கள். ஒரு நிமிடம் எடுத்துக்கொள்ளுங்கள். மனம் என்றால் என்ன என்ற கேள்விக்கு இந்தக் கணத்தில் உங்கள் பதில் என்ன என்பதைத் தொகுத்து அதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். மனம் பற்றிய எனது சிறிய விளக்கத்தைப் படித்தபின் நீங்கள் அதை ஒப்பிட்டுப் பார்க்கலாம். சுவாரஸ்யமாக இருக்கும்.

இப்படி தொடங்கலாம், மனம் என்பது மூளையின் ஒட்டுமொத்தச் செயல்தொகுப்பு. அதாவது மூளையின் செயல்களான பிரக்ஞை *(consciousness)*, உணர்தன்மை *(qualia)*, மயக்க நிலை *(sub consciousness)*, கனவு நிலை, சிந்தனை, நினைவு, கற்பனை மற்றும் மன உறுதிப்பாடு போன்றவற்றின் தொகுப்பு ஆகும். எளிமையாகச் சொல்லவேண்டுமென்றால், மூளை என்பது பொருள், மனம் என்பது அதன் செயல் அவ்வளவுதான்.

ஒரு உறுப்பு இயங்குவதற்கு ஒரு ஊடகம்

தேவை அல்லவா அதாவது ஒரு வாகனம் ஓடுவதற்கு எரிபொருள் வேண்டும் என்பது போல அல்லது இதயம் இயங்கக் குருதி தேவை என்பது போல மூளை என்கிற உறுப்பு செயல்பட பௌதீகமாகக் குருதியும் அபௌதீகமாகப் `பொருள்` என்கிற ஒரு ஊடகமும் தேவை என்பது சிந்தனையாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளின் முடிவு. அதாவது புறவுலகில் எதுவும் இல்லை என்றால் மூளை செயல்படாது. எடுத்துக்காட்டாக, பிறந்த குழந்தையை ஒரு தனி அறையில் வைத்து வளர்த்தோமேயானால் அந்தக் குழந்தையின் மூளை ஏறக்குறைய செயல் புரியாது போய்விடும் அல்லவா. அடிப்படைத் தேவையான பசி, வலி போன்றவற்றைத் தவிர அதன் உணர்வுத்தன்மை முற்றிலுமாக அற்றுப் போய்விடும் என்கிறது ஆய்வு.

ஆக மனம் என்பதன் இயக்கத்திற்குத் தேவை புற உலகம் என்பது அறிவியல். ஆரம்பகாலத் தத்துவவாதிகள் முதல் சமகால ஆன்மீகவாதிகள் வரை இன்றும் மனம் என்பது ஒரு மாயை. அதாவது இங்கு எதுவுமே உண்மை இல்லை, புற உலகம் என்பது ஒரு கற்பனை என்பது போன்ற பல்வேறு நோக்கில் சிந்தித்து, ஒருவகை மாயத்தன்மை மிக்க தத்துவச் சிக்கலில் மாட்டித் தள்ளாடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அறிவியலாளர்கள் மனம் என்பதை ஏறத்தாழ வரையறுத்து அதற்கான தனித்துவமான விளக்கத்தை உருவாக்கிவிட்டார்கள். எனவே, மனம் என்றால் என்ன என்பதை அறிவியல்பூர்வமாக நாம் கீழ்கண்டவாறு தொகுக்கலாம்.

1. மனதின் பௌதீக வடிவம்தான் மூளை. மூளையும் மனமும் வெவ்வேறானது அல்ல. மூளையிலிருந்து மனம் தோன்றுகிறது, தன்னை இருத்திக்கொண்டு மூளையுடன் இணைந்து செயல்படுகிறது. ஒன்று இல்லை என்றால் மற்றொன்று இல்லை. ஒவ்வொன்றிற்கும் மற்றது அடிப்படைத் தேவை.

2. மனம் என்பது மூளையின் `ஒருங்கிணைந்த தகவல் திறனாய்வுச் செயல்பாட்டுமுறை` ஆகும் *(composite of the information-processing processes of the brain).* மனம் என்பது ஒரு அபௌதீகச் *(non-physical)* செயல்பாடு. மூளை என்பது மனதின் கொள்கலன். மூளைக்கு நிறை *(mass)*, சக்தி *(energy)* மற்றும் விசை *(force)* இருப்பது போல மனதிற்கு இல்லை.

3. மனதின் உணர்தன்மை *(qualia)* உருவாக்கம் என்பது புறவயமான பொருட்களால் உண்டாகக்கூடிய பௌதீக *(physical)* நிகழ்வுகளாகும். அதாவது பூவின் வாசம் அல்லது ஒரு வீட்டின் அமைப்பு அல்லது மனதின் எந்தவொரு உணர்வுப்பூர்வமான *(consciousness)* அனுபவமும் பௌதீகமானதாகும். மேலும் உணர்தன்மை என்பது தனித்துவமான நரம்பியக்கமுறை குறியீட்டு வகைமை *(special kinds of neural-process signaling pattern)* எனக் கொள்ளலாம். `உணர்வு` அல்லது `பிரக்ஞை` என்பது இந்தத் `தனித்துவமான குறியீட்டு வகைமையின்` விளைவு என்று மேலோட்டமாகச் சொல்லலாம்.

இந்த விளக்கம் மிகமிகச் சுருக்கமானது. நாம் ஒன்றை மிகத் தெளிவாக நினைவில் கொள்ள வேண்டும். மனித மூளை அதன் இன்றைய அமைப்பிற்கு வந்து சேர பரிணாமத்தில் பத்து லட்சம் வருடங்களுக்கும் மேல் ஆகியிருக்கிறது. எனவே அதன் துல்லியமான மற்றும் முழுமையான செயல்பாட்டு முறையை அறிந்துகொள்ள நமக்கு நிச்சயம் நீண்ட காலம் பிடிக்கும்.

`எவ்வளவு கடினமான விசயமானாலும் அதை எளிமையாக விளக்கிச் சொல்ல முயலலாம்... ஆனால் எதையும் எளிமைப்படுத்திவிடக் கூடாது...` என்றார் மாபெரும் விஞ்ஞானி ஐன்ஸ்டின். அதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். மனித மூளையின் கற்றல் *(cognitive)* செயல்பாட்டிலிருந்துதான் மனதின் தன்மைகளும் விளைவுகளும் உருவாகின்றன. இது மனிதருக்கு மனிதர் வேறுபடும். மாறுபடும் இத்தன்மைக்கு வளர் சூழலும் *(rearing environment)* புறச்சமுதாயச் சூழலும் *(eco-society environment)* பெரும் காரணிகளாகத் திகழ்கின்றன.

எனவே மனம் என்பதை மிகச் சுருக்கமாக, பத்து லட்சம் வருடங்களுக்கு மேலாகப் பரிணாமம் கொண்ட மூளையின் செயல்பாடு, குழந்தை தனது தொடக்க வருடங்களில் ஏற்படுத்திக்கொண்ட கற்றல்கள் மற்றும் பல நூற்றாண்டுகளாக மனித வரலாற்றின் மூலம் கிடைத்த கருத்துகளின் தொகுப்புகள் ஆகிய மூன்று வெவ்வேறு காலகட்டங்களின் நேரடி விளைவு எனச் சொல்லலாம்.

பொதுவாக தமிழ்ச் சித்தாந்த மரபில் உள்ளம் என்பதை நான்காகப் பிரித்து விவரிக்கும் பாங்கு உள்ளது. அவை; மனம், அறிவு (புத்தி), நினைவு (சித்தம்) மற்றும் முனைப்பு (அகங்காரம்). இவற்றின் வரலாற்று மரபுகளில் மத வகைப்பட்ட ஆன்மீகத் தன்மையினை நீக்கிப் பார்த்தோமானால் ஓரளவிற்கு அறிவியல்பூர்வமான விளக்கம் கிடைத்துவிடும் எனலாம்.

- மனித மூளை சற்று பழுப்பு நிறமான, சுருக்கங்கள் நிறைந்த திசு அமைப்பு. கருவின் நான்காவது வாரத்திலேயே மூளை உருவாகத் தொடங்கிவிடுகிறது. மனித உடலில் 2% எடை கொண்ட மூளையானது உடலின் 20% ஆக்ஸிஜனை எடுத்துக்கொள்கிறது. உடலின் ஒட்டுமொத்த குளுகோஸ் உற்பத்தியில் 25%ஐப் பயன்படுத்திக்கொள்கிறது. மனித மூளையில் நூறு பில்லியன் நரம்பு செல்கள்(நியுரான்கள்) உள்ளன. இந்த நியுரான்களின் வழியாகத்தான் மூளையின் அனைத்துத் தகவல் பரிமாற்றங்களும் நிகழ்கின்றன. மூளை உடலுக்கு அளிக்கும் கட்டளைகளை நியுரோ டிரான்ஸ்மிட்டர்கள் என்ற வேதியியல் சமிக்ஞைகளாக (chemical signal) அனுப்புகிறது. இந்த சிக்னல்கள் நியுரான்களின் வழியாக பயணிக்கின்றன. இரண்டு நரம்பு செல்களுக்கிடையே கடக்கும்போது சினெப்ஸ் எனும் ஒரு இணைப்பு உருவாகிறது. புதிதாக நாம் அறியும் ஒவ்வொரு தகவல்களின்போதும் இந்த இணைப்பு உருவாகிறது. மீண்டும் மீண்டும் ஒரே தகவல் படிப்பதாலோ, நினைவுகூர்வதாலோ இந்த இணைப்பு உறுதியாகிறது. இதனால் அந்தத் தகவல் நம் மூளையிலிருந்து மறக்காது.

நுண்ணறிவு (intelligence)

புத்தி உள்ள மனிதரெல்லாம் வெற்றி காண்பதில்லை

வெற்றி கண்ட மனிதரெல்லாம் புத்திசாலி இல்லை

\- கண்ணதாசன்

மனதின் இயக்கப்புலத்தில் (mental phenomena) எதைச் சரியாகப் புரியவைக்க முடியவில்லையோ அல்லது எது சூழலுக்குத் தக்கவாறு தன்னைத் தகவமைத்துக்கொள்கிறதோ அல்லது அறிவுப்போக்கில் ஒரு குறுக்கு வழியைச் சட்டென்று கண்டுபிடித்துப் பயன்படுத்துகிறதோ அதை 'நுண்ணறிவு' (intelligence) எனலாம். நுண்ணறிவைப் புரிந்துகொள்வதென்பது, 'புலன்' (sense) என்பதை நாம் எவ்வாறு புரிந்துகொள்கிறோம் என்பதில் உள்ளது. பொதுவாய் நாம் ஐந்து புலன்கள் பற்றி அறிவோம் அல்லவா. கண், காது, மூக்கு, வாய், மற்றும் தோல் ஆகிய ஐந்து உறுப்புகளின் புலன் வழியாக மூளையால் உணரப்படும் பண்பை 'பட்டறிவு' என்று நாம் புரிந்துகொள்கிறோம். (பயம், பசி போன்ற அடிப்படை அறிவை நான் இங்கே கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை). எனவே அறிவு (knowledge) என்பது சமூக வெளியில் 'நடைமுறை சார்ந்த புரிதல்' (practical understanding) ஆகும்.

பரந்துபட்ட மற்றும் ஆழமான அறிவாற்றலின் விளைவாக உருவாகும் ஞானத்தின் (wisdom) செயல்முறைக் கூறுதான் (applied factor) நுண்ணறிவு. மிகவும் எளிமையாக நுண்ணறிவு என்பது மனதின் உச்சபட்ச 'செயல்திறன்' என்றால் மிகையல்ல. பொதுவாக நுண்ணறிவு குறித்த நான்கு கோட்பாடுகளை ஆய்வாளர்கள் வரையறை செய்துள்ளனர்.

1. உள-அளவீட்டுக் கோட்பாடு (psychometric theories): இந்தக் கோட்பாடானது உளவியல்ரீதியாக, வழக்கமான சோதனைகள் மூலம் மனவளத்தை மதிப்பீடு செய்யும் வழிவகைகளைக் குறிக்கிறது. ஒரு மனத்தின் அறிதிறனை - கல்வி பின்புலத்தில் - எண்ணியல் (number-series test), நினைவாற்றல் மற்றும் பகுப்பாய்வு (reasoning) ஆகியவற்றின்

அடிப்படையில் சோதனை செய்து அறிய முற்படும் கோட்பாடு.

2. கற்றல் கோட்பாடு *(cognitive theories):* மனதின் சிந்தனைச் செயல்பாட்டின் மூலம் ஒரு மனிதரின் பொதுவான நடத்தை *(behavior)* குறித்த முடிவுகளை அவருடைய கற்றல், புரிந்துகொள்ளுதல் போன்றவற்றின் அளவீடுகள் வழியே ஆராய்ச்சி செய்வதைக் குறித்தான கோட்பாடு இது. இது அந்த மனிதர் தனது சமுதாயத்தில் நடந்துகொள்ளும் நடத்தை பற்றிக் கணக்கீடு செய்ய உதவக்கூடியதாக இருக்கும்.

3. கற்றல் - சூழல் கோட்பாடு *(cognitive-contextual theories):* இது மேற்சொன்ன வகையில் ஒரு குறிப்பிட்ட சூழலில் ஒரு குறிப்பிட்ட மனிதரின் நிலைபற்றி அறிய முற்படும் கோட்பாடாகும். எடுத்துக்காட்டாக ஒரு மனிதர் குறிப்பிட்ட பணிச்சூழலில் தன்னை எவ்விதம் வெளிப்படுத்திக்கொள்கிறார் அல்லது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் உள்ள பண்பாட்டோடு தன்னை எப்படி பொருத்திக்கொள்கிறார் என்கிற வகையிலான சோதனைக் கோட்பாடு எனலாம்.

4. உயிரியல் கோட்பாடு *(biological theories):* மூளை உள்ளிட்ட மனித உடல் உறுப்புகளின் திறன் என்பது மனதின் கற்றல் மற்றும் செயல் திறன்களைப் பாதிக்கிறது. எனவே, உடல் உறுப்புகளின் திறனைச் சோதனை செய்வதன் மூலம் மனத் திறனை *(mental ability)* அளவீடு செய்வது குறித்தான கோட்பாடு இது.

• நுண்ணறிவு வகைகள்

1. மொழிப் புல நுண்ணறிவு *Linguistic intelligence ("word smart")*

2. தர்க்ககணிதப் புல நுண்ணறிவு *Logical-mathematical intelligence ("reasoning smart")*

3. வெளிப் புல நுண்ணறிவு *Spatial intelligence ("picture smart")*

4. மெய்ப் புல நுண்ணறிவு *Bodily-Kinesthetic intelligence ("body smart")*

5. இசைப் புல நுண்ணறிவு *Musical intelligence ("music smart")*

6. மக்கட் புல நுண்ணறிவு *Interpersonal intelligence ("people smart")*

7. அகப் புல நுண்ணறிவு *Intrapersonal intelligence ("self-smart")*

8. இயற்கைப் புல நுண்ணறிவு *Naturalist intelligence ("nature smart")*

மேலும் நுண்ணறிவு பற்றிய புரிதலுக்கு அதன் மூலப் பொருளான கற்பனை (imagination) பற்றியும் அதன் விளைபொருளான படைப்பாற்றல் (creativity) பற்றியும் அறிந்துகொள்வது அவசியம். ஆதியிலிருந்து இன்றுவரை 'கற்பனை' என்பதுதான் மனித சமுதாயத்திற்கான ஒட்டுமொத்த வளர்ச்சிப் போக்கின் மூலாதாரம் என்பதுதான் மறுக்க முடியாத உண்மை.

சிக்கிமுக்கிக் கல்லைக் கொண்டு நெருப்பை உருவாக்க அல்லது கற்பாறையை உருளையாக்கிச் சக்கரத்தைக் கண்டுபிடிக்க மனிதர் உபயோகித்த கருவி 'கற்பனை'. இருப்பதிலிருந்து இல்லாததை உருவாக்கும் / படைக்கும் திறன் இந்தக் கற்பனையிலிருந்துதான் உருவாகிறது. வெறும் ஒலிச் சமிக்ஞையிலிருந்து மொழியை உருவாக்கிய கற்பனை. இதுவரையிலும் இனிமேலும் மனித சமுதாயம் மற்றும் அவர்களது முடிவுறாத வளர்ச்சிக்கு ஆதாரமாய் விளங்குவதும் இந்தக் கற்பனை வளம்தான்.

இப்படிப்பட்ட கற்பனை என்பது ஒரு மனிதருக்கு அடிப்படை உரிமை. ஆனால் எளிய மக்களிடம் குறிப்பாக மாணவர்களிடம் கற்பனை வளத்தை உருவாக்காமல் அதைச் சிதைக்கும்வண்ணம் சினிமா, விளம்பர மற்றும் ஊடகத் துறைகள் கூடுமானவரை செவ்வனே பணி செய்து மனித குலத்தின் ஒருவகையான அடிமைச் சமூகத்தை வளர்த்துக் கொண்டுள்ளன. எனவே, நுண்ணறிவு, கற்பனை மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொள்வது மனதின் செயல்வடிவத்தைப் புரிந்துகொண்டு அதைக் கட்டுப்படுத்த முயல்வதற்கு முதற்படி. ஏனென்றால், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நமக்கு நடக்கும் அனைத்திற்கும் நாம்தான் காரணியாக இருக்கிறோம். நாம் சிந்திப்பதற்கும் உணர்வதற்கும் நமது அன்றாடங்களுக்கும் இடையே ஒரு இணைப்பு இருக்கிறது.

ஆக, நுண்ணறிவு என்பதைச் சுருக்கமாக இவ்வாறு கூறலாம்: பகுப்பாய்வு செய்தல், திட்டமிடல், தீர்வு காணுதல், பூடகமாகச் சிந்தித்தல், கடினமான கருத்துக்களைப் புரிந்துகொள்ளுதல், விரைவாகவும் அனுபவத்திலிருந்தும் கற்றுக்கொள்ளுதல் போன்றவற்றின் தொகுப்பாகும். மொத்தத்தில் சூழலை அதன் அகல ஆழங்களுடன் புரிந்துகொண்டு அதற்கு எவ்வாறு எதிர் வினைபுரிய வேண்டும் என்கிற செயல்முறை.

உணர்வு (emotion)

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க
காவாக்கால்

தன்னையே கொல்லுஞ் சினம்

- திருக்குறள் (305)

ஒரு பணக்காரச் சிறுவன் தெரு மணலில் புரண்டு விளையாடிக் குதூகலித்து ஆட்டம்போடும் மற்றொரு ஏழைச்சிறுவனைப் பார்க்கும்போது அவனுள் ஏற்படுகின்ற உணர்வு அல்லது தனது முதல் நரைமுடியை ஆடியில் பார்க்கும் ஒரு பெண்ணிற்கு அந்த ஆடியின் மேல் ஏற்படும் உணர்வு அல்லது ஒரு குறிப்பிட்ட பொருளுக்காக ஒருவர் நீண்டகாலமாக ஏங்கிக்கொண்டிருக்கும்போது (longing) அவருடைய பொதுவான உணர்வு போன்றவற்றையெல்லாம் இன்னவகை உணர்வுகள் என்று எளிமையாக விளக்கிவிட முடியாது.

பொதுவாகவே உணர்வை வரையறை செய்வது கடினமானது. அதனால்தான் உணர்வைப் பொதுவகைமைகளுக்குள் பிரித்து வைத்திருக்கிறார்கள் உளவியல் அறிஞர்கள். உணர்வு என்பதை இசையின் ஏழு ஸ்வரம் போல ஏழாய்ப் பிரித்து வைத்திருக்கிறார்கள். அந்த ஏழு ஸ்வரங்களுக்குள் கலந்து வெளியேறும் கோடிக்கணக்கான ராகங்கள் போல ஏழு வகையான பொது உணர்வுகளிலிருந்து மூளை வழியாக மனம் கட்டுக்கடங்காத உணர்வுகளை உணர்கிறது.

`உணர்வுகள் மனித நினைவுகளின் அடிமைகள்... போலவே மனிதர்கள் உணர்வுகளின் அடிமைகள்` என்கிற எலிசபெத் கில்பெர்ட்டின் (eat pray love) வரிகள் எனக்குப் பிடிக்கும். எனவே, மூளை, மனம் மற்றும் நுண்ணறிவிற்கும் இடையேயான இணைப்பை அறிந்து அவற்றின் விளைவுகளான `உணர்வுகளை` ஒவ்வொருவரும் சரியான முறையில் அறிந்துவைத்திருப்பது அவசியம். ஏனென்றால் இவைகளைப் பற்றிய அடிப்படை தெரிந்தால் உணர்வுசார் நுண்ணறிவு (emotional intelligence) பற்றிப் புரிந்துகொள்ள முடியும். உணர்வுசார் நுண்ணறிவைக் கட்டுப்படுத்துவது மூலம் ஒருவர் தனது வாழ்வுமுறையை வளமை மிக்கதாக உருவாக்க வாய்ப்பு அதிகம்.

இந்த உணர்வுசார் நுண்ணறிவை இன்னும் அதிகமாகப் புரிந்துகொள்ள கீழ்க்கண்ட ஐந்து விசயங்கள் பற்றியும் அவற்றின் அர்த்தங்கள் பற்றியும் புரிந்துகொள்வது அவசியம்.

1. விழிப்புணர்வு (awareness)
2. ஒழுக்கம் (regulation)
3. ஊக்கம் (motivation)
4. மற்றமையுணர்வு (Empathy)
5. சமூகத் திறன் (social skill)

மனதின் செயல்பாடு பற்றிய விழிப்புணர்வுடன் தம்முள் உருவாகின்ற உணர்வுகளைப் புரிந்துகொண்டு அதை ஒழுங்கு செய்து, அகத்திலிருந்தும் புறச்சூழலிலிருந்தும் தேவையான ஊக்கம் பெற்று முழுமையான ‘மற்றமையுணர்வு’டன் தனது உணர்வுகளையும் மற்றவர்களது உணர்வுகளையும் கையாள்வது மூலம் மேற்சொன்ன உணர்வுசார் நுண்ணறிவைக் கட்டுப்படுத்தி ஒழுங்கமைக்கலாம்.

இதில் இந்த ‘மற்றமையுணர்வு’ பற்றி விக்கிபீடியா விளக்கத்தை இங்கு குறிப்பிடுவது நல்லது என்று நினைக்கிறேன். மற்றமையுணர்வு என்பது மற்றவர்களுடைய அனுபவத்தை / உணர்வை அவர்களது நிலையில் (frame of reference) இருந்தே புரிந்துகொள்ளும் திறன் ஆகும். இந்த மற்றமையுணர்வு என்கிற பண்பு உணர்வுசார் நுண்ணறிவின் மிகச் சிறந்த பண்பாகும். கோபம் (Anger), பயம் (Fear), வெறுப்பு (Disgust), மகிழ்ச்சி (Happiness), சோகம் (Sadness), வியப்பு (Surprise) என்பன பொது உணர்வுகள்.

கவிஞர் ஏகாதசி

எட்டுத் தெசயும்...

சிறு தெய்வ வழிபாடு என்பது தத்தம் மூதாதையர்களை வணங்குகிற ஒரு நிகழ்வு ஆகும். அப்படியான ஒரு விழா எல்லாக் கிராமங்களிலும் காலங்காலமாக நடந்துவருகிறது. அங்கே நடக்கும் வழிபாடுகளும் வேண்டுதல்களும் மிக எளிமையானவை. கிடாய் வெட்டிப் பொங்கல் வைத்தல் வழிபாடெனில், கை காலுக்குச் சொகத்தக் குடுத்து உன் பேரன் பேத்திகள காப்பாத்து சாமி என்பது வேண்டுதலாகும்.

ராமனை வணங்குதலுக்கும் பேய்க்காமனை வணங்குதலுக்கும் வேறுபாடு இருக்கிறது. ராமன் என்பது ஒரு எழுத்தாளனால் உருவாக்கப்பட்ட கதாபாத்திரம்.

சிறுதெய்வங்கள் எல்லாம் முற்காலத்தில் மனிதர்களாக வாழ்ந்தவர்கள் மட்டும் அல்ல, சத்தியத்திற்காக மரணித்தவர்களாகவும், சமூகப் போராட்டங்களில் ஈடுபட்டவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். இதற்கு மிக முக்கியமான சாட்சியங்கள் என்னவென்றால், தங்களின் குலத்திற்காக ரத்தம் சிந்திய மூதாதையர்களைத் தங்களின் குலசாமியாக வழிபடுதலும், அந்தக் குலசாமிகள் பெரும்பாலும் அவர்கள் வாழ்ந்த வீடுகளிலேயே இருப்பதையும் நாம் பார்க்க முடியும். ஒவ்வொரு இனக்குழுவிற்கும் சாமிவீடு என்று ஒரு பழங்கால வீடு இருக்கிறது. பிற்காலங்களில் அவற்றில் சில சிறு சிறு கோவில்களாகவும் மாறியுள்ளன.

நமக்கான முகத்தையும் அடையாளத்தையும் இழந்துவிடாமல் இருக்க நாம் கண்கொத்திப் பாம்பாக இருக்கவேண்டியுள்ளது. மதுரை மாவட்டம் ஆ.கொக்குளம் பஞ்சாயத்து பெரியது. ஆ.கொக்குளம், க.பாறைப்பட்டி, தேங்கல்பட்டி, சிக்கம்பட்டி, ஒத்தப்பட்டி, அய்யம்பட்டி ஆகிய ஆறு முக்கிய கிராமங்களைக் கொண்ட பஞ்சாயத்து. இந்தப்

பஞ்சாயத்து ஆறூரு பஞ்சாயத்து என்றே மக்களால் பேசப்படுகிறது.

ஆறு சகோதரர்களும் ஒரு மூத்த சகோதரியும் கொண்ட ஆதிக் குடும்பம்தான் இது. பிற்காலத்தில் ஆறு சகோதரர்கள் வாழ்ந்து கிளை பரப்பிய ஊர்கள்தான் இந்த ஆறு ஊர்கள் என்பதும் தங்களின் மூத்த சகோதரியைத் திருமணம் செய்து கொடுத்த ஊர்தான் பணியான் கிராமம் என்பதும் உண்மை வரலாறு. இவர்களின் பிரதான திருவிழா என்பது "எருதுகட்டு திருவிழா" எனும் குதிரை எடுப்புத் திருவிழாதான். பெரும் பொருட்செலவில் கொண்டாடப்படுவதால் இத்திருவிழா வருடந்தோறும் கொண்டாடப்படுவதில்லை.

நான்கு முக்கிய குதிரைகளும் மற்றும் நேர்த்திக்கடன் குதிரைகளும் கொடிமங்கலத்தில் மண்ணெடுத்துவந்து க.பாறைப்பட்டியில் செய்யப்படுகின்றன. சுமார் ஐந்து லட்சம் பேர் கலந்துகொள்ளும் இத்திருவிழா 23 ஆண்டுகளுக்குப் பிறகு 2019 ஜூன் மாதம் நடந்தது. இந்தத் திருவிழாவை 1996லும், அதற்கும் முன் என் சிறு பிராயத்திலும், கடந்த என் 41 வயதிலுமென மூன்று முறை நான் பார்த்திருக்கிறேன். இந்த ஆ.கொக்குளம் ஆறுகரைத் திருவிழாவில் நான் யாரெனில் பணியானில் திருமணம் செய்துகொடுத்த அந்த ஆறு அண்ணன் தம்பிகளின் அக்கா பெயரன்.

ஆறூரில் ஓர் ஊரான க.பாறைப்பட்டியில் என் நண்பரும் மாமாவுமான சிவமணி அவர்களும் நானும் 2019இல் நடந்த எருதுகட்டுத் திருவிழாவிற்கு ஒரு பாடலை உருவாக்கத் திட்டமிட்டோம். சாதி மதம் கடந்து மனித ஒற்றுமையை உண்டாக்கும் விதமாக அந்தப் பாடலை அமைப்பதென முடிவெடுத்தோம். சிவமணி மாமா அவர்களிடம் ஆறூர் தொடர்பான தரவுகளைப் பெற்றுக்கொண்டு பாடலை எழுதினேன். பாடல் உருவாக்கத்தில் நண்பர் புவனேஸ்வரன் உதவியாக இருந்தார். இந்தப் பாடலுக்கு ஜெய கே தாஸ் இசையமைத்தார். பாடகர் வேல்முருகன் பாடித் தந்தார். காடாய் அலையாய்ச் சனங்கள் திரண்டிருந்த மாபெரும் திருவிழா குதிரையெடுப்பின்போது சிவமணி மாமா என்னைப்பற்றி உணர்ச்சி பொங்க அறிமுகம் செய்து முடித்த நொடி என் குரல் காற்றுக்கும் என் மக்களின் காதுகளுக்கும் ஒரு முன்னுரை ஓலையை,

"பேரன்பிற்கும் பெரும் கோபத்திற்கும் சொந்தமான ஆறூர் கிராமப் பொதுமக்களே! கள்ளநாடு எட்டில் ஆ.கொக்குளம் ஆறாவது நாடு. தேசம் கடந்தும் வாழ்ந்துகொண்டிருக்கும் நம் மக்கள் அனைவரும் கூடிக் கொண்டாடவே இந்த எருதுகட்டுத் திருவிழா. வெயிலும் மழையும் விளையாடிய பூமி, இன்று மனிதப் பாதங்களால் நிரம்பிக் கிடக்கிறது. சுமார் கால் நூற்றாண்டு கழித்து இதோ நம் மண்ணில் கருப்பனின் களியாட்டம்.. "

என எழுதி வாசிக்க, கோவில் மணியா இது குரலா எனச் சந்தேகப்படும்படியான நண்பர் வேல்முருகனின் தொகையறாவும் அடுத்தடுத்து வரும் பல்லவியும் சரணங்களும் கபடி விளையாடின. ஜெய கே தாஸின் இசையால் அருளிறங்க நம்மவர்கள் ஆடினர். பாடல் வெளியீடாகி நான்காண்டுகள் கழித்தும் அந்த மண்ணின் பிள்ளைகள் பாடலைக் கேட்டால் கொலைக்குத்து குத்துகிறார்கள்.

தொகையறா

சுத்தியுள்ள ஊர்களுக்கும்

சொந்தக்கார சனங்களுக்கும்

காவலுக்கு வந்திருக்கும்

காக்கிச் சட்டக் காரருக்கும்

ஓட்டையில்லா கொட்டகைய

ஒழுங்கா போட்டவருக்கும்

மண்டையப் பொளக்கச் செய்யும்

மைக் செட்டுக்காரருக்கும்

எங்களோட வணக்கமிங்க - இது

எருதுகட்டு வணக்கமிங்க

பல்லவி

எட்டுத் தெசையும்

கொட்டுக் கொலவையும்

முட்டி முழங்கிடும் திருவிழா

எட்டப் பிரிந்த

ரத்த சொந்தங்களும்
ஒண்ணு கலந்திடும் திருவிழா

ஆவனா கொக்குளம்
கே. பாறப்பட்டி
தேங்கல்பட்டி சிக்கம்பட்டி
ஒத்தப்பட்டி அய்யம்பட்டி

நாங்க ஆறூருக் காரெய்ங்க - அந்த
பேக்காமன் பேரெய்ங்க (2)

சரணம் - 1

வாடிப்பட்டி கொட்டுக்குத்தான்
வாங்கிப் போட்டுக் குத்துங்கடா
வடக்கம்பட்டி வேட்டுப் போட்டு
வானத்தையே முட்டுங்கடா (2)

ஆளொசரம் இருந்திடுமே
அய்யனாரு வாளுதாண்டா
அநீதி கண்டால் வச்சிடுவார்
பூமியில காலுதாண்டா (2)

கொறச்சலுன்னு ஒண்ணுமில்ல
கொஞ்சம் ஏழதான்
கொடுத்துதவும் எண்ணத்தில
சிகரம் போலதான் (2)

நாங்க ஆரூருக் காரெய்ங்க - அந்த
பேக்காமன் பேரெய்ங்க (2)

சரணம் - 2

கொடிமங்கலம் மண்ணெடுத்து
குதிர செஞ்சோம் பாருங்க
எட்டுத் தேவர் கொடை பிடிச்சு
எட்டு வைக்கும் ஊருங்க (2)

ஆறுகர காப்பாத்த
கறம்ப மண்ண தின்னவரு
காணியாளன் மண்ணுலதான்
கடைசிவர நின்னவரு (2)

மோசஞ்செஞ்சா மூக்குமேல
கோவம் வந்துரும்
பாசங்காட்டி நின்னுபாரு
உசுரத் தந்தரும் (2)

நாங்க ஆரூருக் காரெய்ங்க - அந்த
பேக்காமன் பேரெய்ங்க (2)

சரணம் - 3

கொக்குளத்துப் பெரிய மந்த
எங்களுக்குக் கோர்ட்டுதான்
தப்பக்கண்டா பொண்ணுகளும்
கத்திகளத் தீட்டுந்தான் (2)

பெண்மக்க மார்களுக்கு
பேனளவுத் துயரம்கண்டா
பேக்காமன் கருப்பசாமி
படைபோல புறப்படுண்டா (2)

எல்லையிங்கு ஏதுமில்ல
வெறுங் கோடுதான்
ஆறூரும் எங்களுக்கு
ஒரு வீடுதான் (2)

நாங்க ஆரூருக் காரெய்ங்க - அந்த
பேக்காமன் பேரெய்ங்க (2)

இந்தப் பாடல் பெற்றுத் தந்த புகழுக்கு எல்லையே இல்லை. அந்த ஊர்களிலிருந்து சாமானிய மக்களும் என் தொடர்பு எண்ணைப் பெற்றுப் பேசி வாழ்த்தியதை என்னால் மறக்கவே முடியாது. எங்கள் ஆறூருக்குள் சின்னச் சின்ன கருத்து வேறுபாடு இருந்தது ஆனால்,

"எல்லையிங்கு ஏதுமில்ல

வெறுங் கோடுதான்

ஆறூரும் எங்களுக்கு

ஒரு வீடுதான்"

எனும் இந்தப் பாடலின் கடைசி இரண்டு வரிகள் எங்களை அழவைத்து ஒன்றிணைத்துவிட்டதெனச் சொல்கிறபோது என் கண்களிலும் நீர் ஊறாமல் கடக்க முடிந்ததில்லை.

எருதுகட்டுத் திருவிழாவன்று ஆறூர்களிலும் இரவில் மேடைக் கச்சேரிகள் நொறுங்கிக்கொண்டிருக்க, தேங்கல்பட்டியில் முன்பே கச்சேரிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த வேல்முருகன்

மேடை ஏறியபோது அந்த எருதுகட்டுப் பாடலை ஏழு முறை பாடச்சொல்லி இளைஞர்கள் களமிறங்கிக் கருப்பசாமிகளாய் ஆடியிருந்திருக்கிறார்கள்.

இதில் எங்கள் ஊரான பணியான் கிராமம் மக்களுக்கு சின்ன வருத்தம், அந்த ஆறு அண்ணன் தம்பிகளுக்கும் ஒரே அக்காவான நம் பூட்டி வாக்கப்பட்ட ஊரான நம் ஊரை ஏன் அந்தப் பாடலில் சேர்க்கவில்லையென்று. நான் அவர்களிடம் சொன்னேன், பாடல் முடிந்ததும் கீழே இதை எழுதியது ஏகாதசி என்று வருவதே நம் ஊர்ப்பெயரும் பாடலில் இடம்பெற்றதாய்த்தானே பொருள் என்று. அது உண்மையும் கூட.

அந்தச் சுத்துப்பட்டில் எங்கு விசேசம் விழாக்கள் நடந்தாலும் இந்தப் பாடல் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது. பலருடைய ரிங் டோனாகவும் இப்பாடல் ஒலிக்கிறது. ஆட்டோக்களில் வாசகமாக இதன் வரிகளை எழுதிவைத்திருக்கிறார்கள். செக்கானூரணி காவல் நிலையம் ஒரு கட்டத்தில் இப்பாடலுக்குத் தடை விதிக்கும் அளவிற்கு அந்த மக்களால் கொண்டாடப்பட்டிருக்கிறது.

ஒரு கவிஞனாக இப்படி ஒரு பாடலை எழுதியதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். பாடலை எழுதிய என்னை ஆ.கொக்குளம் பஞ்சாயத்து சார்பில் மாலைகளும் பொன்னாடைகளும் அணிவித்தது எனக்குத் தேசிய விருது பெற்றது போன்ற உணர்வை ஏற்படுத்தியது.

அதன் பின் சமீபத்தில் க.பாறைப்பட்டியில் "சோறு மாத்து" திருநாள் இரவு மேடையில் அங்குள்ள நான்கு பங்காளிகள் ஆறூர் சார்பில் அளித்த கேடயமும், நான்கு துணிப் பொட்டலத் தானியங்களும், புத்தகப் பரிசும், அப்போது அங்கே கொட்டித் தீர்த்த பெருமழையும், பெருமழையைத் தோற்கடித்த இளையோர்களின் விசில்களும் என் நெஞ்சில் எழுச்சியை எற்படுத்தின.

அது குலசாமி கோவில் பற்றிய பாடல். எங்கள் குலதெய்வம் எம் மூதாதையர் என்பதற்குச் சான்று ஒன்றே ஒன்றுதான். அது மக்களின் இதயமாக இருக்கிறது. அந்த இதயத்திலிருந்து மறு இதயத்திற்கு எங்கள் வரலாறு மாற்றமின்றிக் கடத்தப்பட்டு வருகிறது.

ஆழ்மனத் தேடல் – 23

பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள்

● ஜின்னா அஸ்மி

என்ன
யோசித்துக்கொண்டிருக்கிறாய்
என்றபடியே
வெளியே வந்தான் அவன்...
வானம் பெரியதா
பூமி பெரியதா
என யோசிக்கிறேன்
என்றேன்
நல்ல யோசனை..
உன் முடிவு என்ன என்றான்
பூமிதான் பெரியது என்றேன்
ஏன்..
பூமியைப் போலவே
ஆகாயமும் ஐம்பூதங்களில் ஒன்றுதானே
அப்படி என்றால்
ஆகாயமும் பெரியதுதானே
என்றான்
பூமியிடம்
புவி ஈர்ப்புச் சக்தி இருக்கிறது
வெற்று வானத்திடம்
வேடிக்கை பார்ப்பதைத்தவிர
வேறு என்ன இருக்கிறது
என்றேன்

ஆகாயம் அதிரும்படி
சிரித்துவிட்டுச் சொன்னான்
வானம் வெற்று இல்லை
நீதான் வெற்று
புவியீர்ப்புச் சக்தியை
எதிர்த்துப் புறப்பட
உனக்குத் தெரியவில்லை

ஒரு பறவையைப் போல
ஆகாயம் நோக்கி
சிறகு விரிக்க
உன்னால் முடியவில்லை
என்றான்.
எல்லா வளங்களும்
பூமியில்தானே இருக்கின்றன
பிறப்பு முதல் இறப்பு வரை
பூமியில்தானே நிகழ்கிறது
இவ்வளவு ஏன்
இறந்தபின்பு கூட
ஆகாயத்திலா
அடக்கம் செய்ய முடியும்
அதுவும் இந்தப் பூமியின்
மண்ணுக்குள்தானே என்றேன்

நீ வாழத் தகுந்ததாக
பூமி இருப்பதற்கு ஆதாரமே
ஆகாயம்தான்
ஆகாயம் இல்லை என்றால்
பூமி அழிந்துவிடும்
என்பதை அறிவாயா?
அவன் மேலும் சொன்னான்
நீ இறந்தால்
உனது வெற்று உடல்தான்
பூமிக்குள் செல்லும்
உனது ஆன்மா
ஆகாயத்தை அடையும்
என்று சொல்லிவிட்டு
மறைந்தான்

– அவன் இன்னும் சொல்வான் ■

சிறுகதை

ச.மோகன்

ஓவியங்கள் : திண்டுக்கல் தமிழ்பித்தன்

அப்பாவின் காது



இதற்குமேல் மருத்துவம் பார்ப்பதில் பலனில்லை என்று தனியார் மருத்துவமனைகள் கைவிட்ட நிலையில், ஒரு சின்னக்குழந்தையைப் போல, அப்பாவை வீட்டிற்குக் கொண்டுவந்து சேர்த்தோம். எந்தவிதக் கெட்ட பழக்கமுமில்லாத அப்பாவிற்கு நீரிழிவு நோய் எப்படித்தான் வந்ததோ! ஆறேழு ஆண்டுகள் ரொம்பவும் அவதிப்பட்டுப் போனார்.

மரக்கடையில் வேலை பார்த்த அவரின் சம்பாத்தியம் முதலில் நின்றுபோனது. நோயின் தீவிரம் அதிகமாக அதிகமாக, அவரிடமிருந்த இயல்பான குணங்கள் மாறத் தொடங்கின. வாழ்வில் எப்போதும் அமைதியை விரும்பிய அப்பாவின் ஆன்மா, ஏதோவொரு பெரும் இரைச்சலில் சிக்கிக்கொண்டதைப் போல, எல்லாவற்றிற்கும் எரிந்து விழத்தொடங்கினார்.

பக்கவாதம் வந்து, படுக்கையில் நிரந்தரமாக விழுந்துவிட்ட அப்பாவின் கடைசி நாட்களில், அம்மாவின் பாடுதான் திண்டாட்டமாகிப் போனது. உடம்பில் சர்க்கரையின் அளவு உச்சமாய்க் கூடும் இரவுகளில், வாய் குழறி வியர்த்துப்போய் மயங்கிவிடும் அப்பாவை, சர்க்கரைத் தண்ணீரைப் புகட்டி மீட்கும்போது, தன் நாக்கில் படர்ந்து கிடக்கும் இனிப்புச்சுவையைச் சப்புக்கொட்டி எச்சில் விழுங்கியவாறே அம்மாவைப் பார்த்துக் கத்துவார் ; "ஏண்டீ,

சர்க்கரைத் தண்ணிய ஊத்தி என்னக் கொல்லப் பாக்குறியாடீ....''

அப்போதெல்லாம் அவரின் முகம் வெலவெலத்துப்போய்க் கிடக்கும். அவரது மண்டைக்குள் ஓயாத ஏதோவொரு இரைச்சல் ஒலித்துக்கொண்டிருப்பதைப் போல, அவரது காதுகள் மெலிதாய் நடுங்கிக்கொண்டிருக்கும். வீட்டில் ஏற்படும் நிர்வாகச் சிக்கல்களின்போதோ, வேறேதேனும் கருத்து முரண் ஏற்படும்போதோ, அம்மா அதிர்ந்து பேசினாலும்; அப்பா எதுவும் பேசமாட்டார். அமைதியாகப் போய்விடுவார். வீட்டில் அம்மா சமையல் எந்திரங்களைக் கொண்டு மாவரைக்கும்போதோ அல்லது மிளகாய்ப்பொடி அரைக்கும்போதோ அப்பா எழுந்து சென்று திண்ணையில் அமர்ந்துகொள்வார்.

இவ்வளவு ஏன்! நான் குழந்தையாக இருந்தபோது, என் அழுகைச் சத்தம் கூட அவருக்குப் பிடிக்காதாம். உடனே திண்ணைக்குப் போய்விடுவாராம். அழுகிற தன் குழந்தையிடம் பொம்மைகளைக் காட்டியோ, கண்ணு... செல்லம்... என்று கொஞ்சியோ அழுகையை அமர்த்தக்கூட விரும்பாத அப்பா, எப்போதும் ஏதோவொரு அமைதியை விரும்பினார். அவர் விரும்பிய அமைதி, புறச்சூழலிலும் இருக்கவேண்டும் என்று அவர் நினைத்ததுதான் அவருக்கு ஏற்பட்ட எல்லாப் பிரச்சினைகளுக்கும் காரணமாயிருந்தது.

மற்றவர்களைப் போல, அன்றாட ஒலிகளுடன் அவரால் அனுசரித்துப் போகமுடியவில்லை. வீட்டிலும் வெளியிலும் எழுந்த ஒலிகள் அவரை வதைத்துக்கொண்டிருந்தன. பல ஆண்டுகளாக நாள்முழுதும், மரக்கடையில் மரம் அறுக்கும் - இழைக்கும் இரைச்சல் ஒலியைக் கேட்டுக் கேட்டு அவருக்கு இப்படி ஆகியிருக்கலாம். தகரமோ அல்லது கூர்மையான பொருட்களோ உரசப்படும்போது எழுகிற சத்தங்களின் மீது அவருக்கு எப்போதும் ஒரு மனத்தடை இருந்தது. ஆனாலும் சம்பாத்தியம் கொடுக்கிற தொழிலின் சத்தத்தை அவர் பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டியிருந்தது. விரும்பாத அந்த ஒலிகள், காது வழியாக மூளையைத் தாக்கி, அப்பாவின் இதயத்துடிப்பை எகிறச் செய்துகொண்டிருந்தன.

அப்பா, எல்லா ஒலிகளையும் வெறுத்தார் என்றாலும் அச்சமூட்டும் குறிப்பிட்ட சில ஒலிகளை அதிகமாகவே வெறுத்தார். ஒரு கண்ணாடிப் பாத்திரம் மேசையிலிருந்து தவறிக் கீழே விழப்போகும் அந்தக் கணத்தில், கண்ணாடி உடைந்து சிதறப்போகிறதே என்று அவருக்குத் தோன்றாது. மாறாக அப்படி அது உடைந்து உண்டாக்கப்போகும் சத்தம்தான் அவரைப் பெரிதாய்க் கலவரம் கொள்ளச் செய்துவிடும். உண்மையில் அந்தக் கண்ணாடிப் பாத்திரம் தவறி விழுந்து எழுப்புகிற சத்தத்தை, அதன் இயல்பை விட மிகையாய் அப்பாவின் காதுகள் உணர்ந்துகொண்டிருந்தன. குறைந்த ஒலி மூலங்களைக் கூட, அப்பா அதிக அதிர்வெண்களில் கேட்டுக்கொண்டிருந்ததுதான் இதற்கெல்லாம் காரணமாக இருந்திருக்கவேண்டும். ஆலை இயந்திரங்களின் பெரும் சத்தமும் நகர நெரிசலில் எழும் வாகன இரைச்சலும் இங்கே பெரும்பாலானவர்களைப் பாதிப்பதில்லை. ஆனால் அப்பா மட்டும் விதிவிலக்காய் இருந்தார்.

இப்போதெல்லாம் யாரும் அமைதியை விரும்புவதில்லை என்றே தோன்றுகிறது. இளைஞர்கள் இரைச்சலான திரையிசைப் பாடல்களைத்தான் விரும்பிக் கொண்டாடுகிறார்கள். குழந்தைகளோ கைப்பேசி விளையாட்டில் தடதடவெனச் சுட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

திருமணமாகும் வரை அப்பா கிராமத்திலேயே வாழ்ந்ததால், வேலைக்காக இடம் பெயர்ந்த நகரத்தின் சத்தங்கள், அவரின் காதுகளுக்கு ஓர் ஒவ்வாமையை ஏற்படுத்திக்கொண்டிருந்தன. நல்ல வீணை இசையையோ, மெலிதான வயலினையோ கேட்பவர்கள் அரிதாகத்தான் இருக்கிறார்கள். இவ்வளவு இரைச்சல்களுக்கிடையில் வாழ்வதற்கு எல்லோருமே பழகிவிட்டார்கள்.

ஆனால் அப்பாவுக்கோ, குண்டூசியைத் தரையில் போட்டால்கூட சத்தம் கேட்கவேண்டும். பேசாமல் வனாந்திரங்களில்

சென்று ஒரு துறவியைப் போல, ஏதாவதொரு மரத்தின் நிழலில், கண் மூடி அமர்ந்துவிடலாமா என்று கூடச் சில நேரங்களில் அவருக்குத் தோன்றியிருக்கலாம். முதலில் குடியிருக்கும் இந்த வீட்டை மாற்றியாகவேண்டும். எதிரே இருக்கும் தேநீர்க் கடையில் எந்த நேரமும் ரேடியோ சத்தம் ஓயாமல் காதைப் பிளக்கிறது என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பார். ஆனால் பொருளாதாரப் போதாமையால் அப்பாவால் அப்படி உடனடியாக வீட்டை மாற்றமுடியவில்லை.

மழை பெய்யும் நாட்களில் வீட்டின் கூரைத் தகரத்தில் மழை உண்டாக்குகிற சத்தம் கூட, அப்பாவை எரிச்சலூட்டி அவரின் முகத்தைக் கடுமையானதாக்கிவிடும். மழையின் சத்தம் கூட அப்பாவுக்குப் பிடிக்காமல் போனது எனக்கு இன்றுவரை பெருவியப்புதான். மரக்கடையிலிருந்து திரும்பும் இரவுகளில், தேவையிருந்தாலொழிய வீட்டில் யாரிடமும் பேசமாட்டார். அரிதாக சில நேரங்களில் தொலைக்காட்சி பார்ப்பார். அவருக்குப் பிடித்த பாடல்கள் ஒலிக்கும்போது, எழுந்துசென்று மின்விசிறியை நிறுத்திவிடுவார். காற்றின் சத்தத்தில் அவருக்குப் பிடித்த பாடலின், பின்னணி வாத்தியங்களின் இசையை, துல்லியமாகக் கேட்பதில் கூட அவருக்குச் சிரமம் இருந்தது.

நாற்காலியில் சாய்ந்துகொண்டு கோழி இறகால் காதைக் குடைவதும், மாதம் தவறாமல் காதுக்கு எண்ணெய் விட்டுக் குரும்பி எடுப்பதும் அப்பாவுக்குப் பிடித்தமான விடுமுறை நாள் வேலைகள். கலாச்சார மாற்றங்களில் காதுக்கு எண்ணெய் விடுவதெல்லாம் வழக்கொழிந்துவிட்ட பின்னாலும், அப்பா மட்டும் தவறாமல் எண்ணெய் விட்டுக் காதுகளைச் சுத்தம் செய்துகொண்டிருந்தார். அப்போதெல்லாம் அவர் தன்னுள் மண்டிக்கிடக்கும் மாதாந்திர ஒலிக்கசடுகளை, காது வழியாக எடுத்து வெளியே எறிந்துகொண்டிருக்கிறார் என்றே எண்ணத் தோன்றும்.

அவரே ஒரு கட்டத்தில், தன் காதில் ஏதோ பிரச்சினை இருக்கிறது என்று நினைத்து, ஒரு ஈ.என்.டி. மருத்துவரை அணுகினார். அப்பாவின் சராசரி செவிப்புலன், வரம்பிற்கு மேலே ஒரு சுருதியையும் கீழே ஒரு சுருதியையும் கேட்டுக்கொண்டிருக்கிறதோ என்று அந்த மருத்துவர் குழம்பிப்போனார். ஒரு ரேடியோவின் ஒலி அளவைக் குறைத்து வைப்பது போல, என் காதின் ஒலி அளவைக் குறைத்துவைக்க முடியுமா என்று அப்பா கேட்டபோது, அந்த மருத்துவர் அதிர்ந்துதான் போனார்.

இப்போது இந்த நெருக்கடியான நகர வாழ்வில் மட்டுமல்ல, கிராமத்தில் இருந்த நாட்களிலும் கூட, அப்பாவுக்கு நிறைய ஒலி இடைஞ்சல்கள் இருந்தன. திருவிழா மற்றும் திருமண நாட்களின் ஒலிபெருக்கிச் சத்தங்கள், அவரின் ஒலி வெறுப்பை அதீதப்படுத்திக்கொண்டிருந்தன. அந்த மாதிரி சமயங்களில், நரம்புகள் வழியாகப் பாயும் கோபத்துடனும் ஆத்திரத்துடனும் நுரையீரலின் அடியிலிருந்து கத்துவார்; "அதை யாராவது கொஞ்சநேரம் நிறுத்தச் சொல்லுங்களேன்...!"

அந்த மாதிரி நாட்களில் உரத்த சத்தங்களைக் கேட்காமல் இருக்க அவர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, வீட்டிற்குள்ளேயே அடைந்துகொண்டுவிடுவார். தெருவில் விளையாடும் குழந்தைகளின் கூப்பாடும், கோவில் கூம்பு ஒலிபெருக்கியிலிருந்து ஒலிக்கும் இரைச்சலான பாடல்களும் அவரைப் படுத்தி எடுத்துவிடும். அப்போது அவரது உள்ளங்கைகள் கூட வியர்த்துவிடும்.

அப்பா ஒரு ஆட்சியாளராக இருந்திருந்தால், இந்த மாதிரி விசயங்களை எல்லாம் தடை செய்திருப்பார் என்றே தோன்றியது. இல்லை அவரிடம் ஏதாவது ஒரு அதீத ஆற்றல் வழங்கப்பட்டிருந்தால், தன் காதுகளைக் கழற்றி வீட்டிலேயே வைத்துவிட்டு, வேலைக்குச் சென்றிருப்பார்.

மொத்தத்தில் தன்னைச் சுற்றி நிகழும் ஒலி உபாதைகளால், அப்பாவின் காதுகள் சொல்லொணா வேதனையை அனுபவித்துக்கொண்டிருந்தன. விட்டால், ஹாலந்து ஓவியன் வின்சென்ட் வான்கா தன் காதைக் கத்தியால் அறுத்துக்கொண்டதைப் போல, அப்பா அவரின் காதுகளை அரிந்து

யாருக்காவது கொடுத்துவிடுவாரோ என்று கூட பயந்திருக்கிறேன்.

தொடர்ச்சியாக இன்சுலின் எடுத்துக்கொண்டும், அடிக்கடி மயக்கம் உண்டாகி, வேலைக்குப் போகமுடியாத அளவிற்கு நீரிழிவு நோய் அவரைப் பாதித்தபோது, வீட்டின் அறைகளிலேயே முடங்கிவிட்டார். தனிமையிலும் கூட அவரால் அவர் விரும்பிய அமைதியை நுகரமுடியவில்லை. அவரின் பெருமூச்சு சத்தம் கூட, அவரது காதுகளை அவ்வப்போது நடுங்கவைத்துக்கொண்டிருந்தது.

சத்தங்களிலிருந்து விடுபட நினைத்த அவர், முதலில் சத்தமில்லாமல் பேசத்தொடங்கினார். பிறகு அதுவும் குறைந்து சைகை மொழியாகிப் போனது. சாப்பாடு, தண்ணீர் கேட்பதில் தொடங்கி, வீட்டில் அவருக்கான தேவைகள் எல்லாவற்றிற்கும் சைகைதான், வாய் என்று ஒன்று இருப்பதையே மறந்துவிட்டதைப் போல!

நிச்சயம் அப்பாவுக்கு இருந்தது மிசோபோனியா எனும் ஒரு அரிய வகை செவித்திறன் கோளாறுதான். மற்ற எல்லாரையும் விட, அவரது காதுகள், மிகச்சிறிய ஒலியைக் கூட, துல்லியமாக உணர்ந்ததுதான் பிரச்சினை. சில நேரம் அந்த ஒலிகள் அவருக்கு வலியை ஏற்படுத்தின. சில நேரம் படபடப்பை உண்டாக்கின. இந்த மாதிரியான நிலை, ஒரு மனிதனை நரம்புக்கோளாறுகளுக்கு இட்டுச்சென்று முகத்தின் தசைகளைப் பாதித்துவிடும் அபாயம் இருக்கிறது என்று எங்கோ படித்திருக்கிறேன்.

ஆங்கிலத்தில் பெல்'ஸ் பால்ஸி என்று சொல்லக்கூடிய முக வாதம் அப்பாவுக்கு ஏற்பட்டுவிடுமோ என்று கூட, சில நேரங்களில் பயந்தேன். நாளாக நாளாக அப்பாவிற்கு ஒலிகளின் மீதிருந்த வெறுப்பு அச்சமாகிப்போனது. இது முன்பிருந்ததை விட மோசமான ஒன்று. ஒலி மூலங்களைத் தவிர்த்த அவரின் காதுகள், அப்படி முடியாதபோது, அவருக்குள் வேறுமாதிரியான விளைவுகளை ஏற்படுத்திக்கொண்டிருந்தன. தலைவலி அல்லது நெற்றிப்பொட்டில் வலி ஏற்பட்டுத் துடித்துக்கொண்டிருந்தார்.

அவரின் இந்த மிசோபோனியாவுக்கு மருத்துவத்தில் தீர்வில்லை என்றான பிறகு, நான் செய்யக்கூடியது ஒன்றே ஒன்றுதான். எப்படியாவது புறநகரின் அமைதியான பகுதியில், ஒரு வீட்டைக் கட்டி, அப்பாவை அங்கே கூட்டிச் சென்றுவிடுவதுதான்.

அப்பா நீரிழிவு நோய்க்கு ஆட்பட்ட தொடக்க நாட்களில், கிராமத்திலிருந்த எங்கள் பழைய வீட்டை விற்றுவிட்டு, அந்தப் பணத்தில் புறநகரில் ஒரு சிறிய வீடு கட்டும் அளவிற்கு இடம் வாங்கிப் போட்டிருந்தேன். அலுவலகத்தில் வீட்டுக்கடன் விரைவில் ஒப்புதலாகிவிடும். வீடு கட்டும் வேலையைத் தொடங்கின தருணத்தில்தான், சிறுநீரக மாற்றுச் சிகிச்சை என்கிற அளவிற்கு அப்பாவிற்கு



நீரிழிவு மிகுந்து, என் பொருளாதாரச் சிக்கல்களை மேலும் அதிகப்படுத்திவிட்டது. ஆனாலும் தொடர்ந்து தாக்கிய பக்கவாத நோயிலிருந்து அவரை என்னால் காப்பாற்ற முடியவில்லை.

வீட்டில் ஒரு கட்டிலில் அப்பா செயலிழந்து முடங்கியதைப் போலவே, வீடு கட்டும் வேலையும் முடங்கிப்போனது. படுக்கையில் கிடந்த நாட்களில் அப்பா ஒரு குழந்தையைப் போல் ஆகிவிட்டார். மருத்துவர் தடுத்திருந்த உணவுகளை, பலகாரங்களைக் கேட்டுப் பிடிவாதம் பிடித்தார். சத்தமே பிடிக்காத அப்பா, தொட்டத்திற்கெல்லாம் சத்தம் போடத் தொடங்கினார். சட்டென்று கோபப்பட்டார். அவரை நாங்கள் சரியாகக் கவனித்துக்கொள்ளவில்லை என்று தன்னைப் பார்க்க வருபவர்களிடம் எல்லாம் புகார் சொல்லிக்கொண்டிருந்தார்.

நான் அலுவலகத்திற்குச் சென்ற பிறகு, அம்மா மட்டுமே வீட்டில் அப்பாவுக்குத் துணை. மகனுக்குத் திருமணம் செய்யவேண்டும், மனையைக் கட்டி முடிக்கவேண்டும், கணவரைக் கட்டிலிலிருந்து மீட்கவேண்டும் என்று அம்மாவிற்குள் ஆயிரம் வேதனைகள். வீட்டு வேலைகளில் தொடங்கி, அப்பாவிற்குப் பீ, மூத்திரம் வாரித் துடைக்கும் வரை அம்மா எதுவும் பேசாமல் அமைதியாகவே செய்துகொண்டிருப்பார்.

வீட்டில் நிலவிய இந்த மயான அமைதி இப்போது அப்பாவை வேறு மாதிரி கொன்றுகொண்டிருந்தது. அவர் மீண்டும் மரம் அறுக்கும் எந்திரங்களின் சத்தத்தையும், பாத்திரங்கள் தவறி விழுந்து எழுப்பும் ஒலிகளையும் கேட்க விரும்பினார் போல இருந்தது. அந்தச் சத்தங்களைக் கேட்காமல் அவருடைய காதுகள் தூங்க மறுத்தன.

ஒரு மனிதன் தூங்கத் தொடங்கும்போது, அவனது காதுகள்தான் கடைசியாகத் தூங்குமாம். ஆனால் அப்பா தூங்கிய பின்னும் கூட, அவரது காதுகள், இரையை நோக்கித் தன் நாக்கை நீட்டும் பாம்பைப் போல, இரவின் அமைதியையும் தாண்டி எதேனுமொரு இரைச்சலைத் தேடித் தூங்காமல் நீண்டுகொண்டிருந்தன.

சில வேளைகளில் அவர் தனியாகத் தன்னிடமே பேசிக்கொண்டிருந்தார். அப்பாவின் சொற்கள் எதுவும் காற்றில் சிதறிவிடாமல் மீண்டும் அவரின் காதுகளிடமே சேர்ந்துகொண்டிருந்தன. எதிரே இருந்த தேநீர்க்கடை இப்போது இல்லை என்றாலும் இன்னமும் அவருக்குள் அந்தக் கடையிலிருந்து வரும் இரைச்சலான பாடல் சத்தம் கேட்டுக்கொண்டுதானிருந்தது. அவரது காதுகள் இன்னமும் நடுங்கிக்கொண்டுதானிருந்தன. சில நேரங்களில் அவருக்குள் பொதிந்து கிடந்த அத்தனை இரைச்சல்களும் உரையாடல்களும் ஒன்றாகத் திரண்டெழுந்து, அவரை வாட்டி வதைத்து, அவரது காதுகளை அதிரச்செய்ததோடு மட்டுமல்லாமல், அவரின் கண்களிலும் கண்ணீரை வழியச் செய்துகொண்டிருந்தன. அவரால் ஏன் சராசரி ஒலிகளைக்கூட பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அவருக்கு இருந்த இந்தப் பிரச்சினை, நரம்பியல் சம்பந்தப்பட்டதா அல்லது உளவியல் சம்பந்தப்பட்டதா என்பதை ஃபிராய்டிடம்தான் கேட்கவேண்டும்.

கடைசியில், யாரும் எதிர்பார்க்காத ஒரு பின்னிரவில் அப்பா செத்துப்போனார். இந்த உலகின் ஒலிகளிலிருந்து அவர் நிரந்தரமாகத் தப்பித்துக்கொண்டார் என்றுதான் சொல்லவேண்டும். அப்பாவின் சாவு ஒருவகையில் எனக்கு ஆறுதலாகத்தான் இருந்தது. சுவரில் சாய்ந்தபடி அம்மா ஒடுங்கிப்போய்க் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தாள்.

வீட்டின் தாழ்வாரத்தில் மரப்பெஞ்சில் கிடத்தப்பட்டிருந்த அப்பாவைச் சுற்றி அம்மாவும் அக்கம்பக்கத்தார்களும் அழுதுகொண்டிருந்தார்கள். சாவு மேளத்தின் சத்தம், தெருவின் அமைதியைக் கலைத்துக்கொண்டிருந்தது. அம்மாவின் உடன்பிறந்தவர்களும், அத்தையும் வந்தபோது அழுகைச் சத்தம் இன்னும் பெரிதானது.

திடீரென, நான் அப்பாவின் முகத்தை உற்று நோக்கினேன். இப்போதும் அவரின் காதுகள் மெலிதாக நடுங்கிக்கொண்டுதானிருந்தன. ■

மாணவர் பக்கம்
நான் வாசித்தேன்

சு. அருண்குமார்,
முதலாம் ஆண்டு, முதுகலை வரலாறு,
பாரதியார் பல்கலைக்கழகம்.

வ.உ.சி.யை ஏமாற்றினாரா காந்தி?



நூல் : வ.உ.சி.யும் காந்தியும் 347 ரூபாய் 12 அணா

ஆசிரியர் : ஆ.இரா. வேங்கடாசலபதி

வ.உ.சியை ஏமாற்றினாராகாந்தி? என்றுதன் முன்னுரையைத் துவங்குகிறார், பல காலமாய் வலம்வந்த வதந்திக்கு முற்றுப்புள்ளி வைத்த ஆய்வாளர் சலபதி. அந்த முற்றுப்புள்ளிதான் இந்நூலா என்றால் இல்லை. அதற்கும் மேலாய்ப் பல வரலாற்றுத் தரவுகளை இதில் பதிய வைத்துள்ளார்.

தென்னாப்பிரிக்கத் தமிழர்கள் பற்றி இந்நூலில் விவரமாகப் பேசப்படுகிறது. தமிழர்கள் ஏன் அங்கு குடிபெயர்ந்தார்கள், அவர்களது வேலை, அடைந்த எண்ணிலடங்காத் துயரங்கள், அதனால் ஏற்பட்ட பல சட்டங்கள், அதன் விளைவுகள் போன்ற பல தரவுகளை நேர்த்தியுற விளக்கி இத்தகைய அவலநிலையில் உள்ள தமிழர்கள்தான் துயருற்ற வ.உ.சி குடும்பத்திற்கு உதவினர் என்பதையும் ஆதாரப்பூர்வமாகத் தெளிவுபடுத்துகிறார் ஆசிரியர்.

இதற்கிடையில்தான் இருளடைந்த சில பக்கங்கள் நூலாசிரியரால் வெளிச்சத்தைக் காண்கின்றன. ஆம், இங்குதான்

முதன்முறையாகத் துக்கம் கொள்கிறது கப்பலோட்டிய தமிழரின் மனைவி மீனாட்சியம்மாளின் வாழ்வு.

வசதிபடைத்த பாரம்பரியமான நிலவுடைமைக் குடும்பத்தில் வாழ்க்கைப்பட்ட மீனாட்சியம்மாள் வ.உ.சியின் தியாக வாழ்க்கை துவங்கிய பின் தன்னிடமிருந்த பொருட்களும் நகைகளும் வ.உ.சியின் வழக்குகளுக்கும் அத்தியாவசியக் குடும்பச் செலவுகளுக்கும் தீர்ந்து, பலரிடமும் உதவிபெற்று வாழ்ந்த நிலையில் அவர் எழுதிய பல கடிதங்களின் சில வார்த்தைகள் மிக முக்கியமானதாக கவனிக்கப்படவேண்டியவையாக உள்ளன.

'எங்கள் உற்றாரும் உறவினரும் எங்களுக்குக் கொடுத்துச் சலித்துப்போனார்கள்' என்றும் 'நான் எனது மானம் கெடாத கூலி வேலைகள் செய்யவும்; தயார்'; (இதற்கு முன்பக்கத்தில் மீனாட்சி அம்மாள் நல் ஆடை அணிகலன்களுடன் வ.உ.சி அருகில் நிற்கும் படம் இடம்பெற்றிருக்கிறது. கடிதத்தையும் படத்தையும் ஒப்புநோக்கும்போது அவர்களின் வலி புரிபடுகிறது) என்றும் எழுதியதைப் படித்து உணர்கையில் நிச்சயம் கண்ணீரை வரவழைக்கும். அதே நேரத்தில் மீனாட்சி அம்மாள் வ.உ.சியின் கல்வித் திறத்தினையும் மெய்ஞானத்தினையும் உச்சத்தில் ஏற்றிப்போற்றி அவருக்கு உற்ற உறுதுணையாக அதேசமயம் ஓர் ஆளுமையாகவும் இருந்துள்ளார்.

இரட்டை ஆயுள் தண்டனை பெற்று சிறையில் இருந்த வ.உ.சிக்கும் வெளியில் துயர்மிகு வாழ்க்கை வாழ்ந்த அவரது குடும்பத்தினருக்கும் மாபெரும் உதவி புரிந்தவர்கள் பற்றிய தரவுகள் எளிமையாகவும் விரிவாகவும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. அதில் வ.உ.சிக்கும் தென்னாப்பிரிக்கத் தமிழர்களுக்கும் தொடர்பு ஏற்படக் காரணமாக இருந்த சுவாமி வள்ளிநாயகம், பெரும் பொருளுதவி புரிந்த த.வேதியப்பிள்ளை, சொ. விருத்தாசலம் பிள்ளை ஆகியோரின் முக்கியப் பங்கும் வெளிப்படுகிறது. இவற்றையெல்லாம் அலசி ஆராய்ந்த பின்தான் நூலின் மையச் சரடு விழிப்புக்கொள்கிறது.



ஆம்! வ.உ.சிக்குச் சேரவேண்டிய பணத்தினைக் காந்தி கொடுத்தாரா? அல்லது தராமல் ஏமாற்றினாரா? என்பதுவே அது. ஆய்வாளர் சலபதி அவர்களின் பலவருட முயற்சியால் கிடைத்த வ.உ.சி. எழுதிய 8 கடிதங்களும் காந்தி எழுதிய 11 கடிதங்களும் இதற்கு முற்றுப்புள்ளி வைத்ததுடன் இருவரது பண்பாளுமைத் தன்மையினையும் வெளிப்படுத்த உதவுகின்றன.

வ.உ.சியின் விடுதலைப் போராட்ட வாழ்க்கையினைப் பற்றி அறியாதவராகக் காந்தி இருந்துள்ளாரோ என இக்கடிதப் போக்குவரத்து தோன்ற வைக்கிறது. மேலும், இதில் வ.உ.சியின் வறுமைநிலையிலும் அடங்காத் தமிழ்ப்பற்று, பண விவகாரங்களில் காந்தி காட்டிய உறுதித்தன்மை ஆகியன வெளிப்படை.

இதற்கிடையே, வ.உ.சி தனக்கு உதவிய எவர் பெயரையும் தன் நூற்களின் முன்னுரையில் குறிப்பிட்டு நன்றிகூறும் பண்பு எத்தகைய நெகிழ்ச்சி வாய்ந்தது என்பதை வாசிப்போர் அறிவர்... இத்தன்மை மீனாட்சி அம்மாளிடமும் இருந்துள்ளது என்பது கூடுதல் தகவல். நூலின் பின்னிணைப்புகளில் பல கடிதங்களும் அறிக்கைகளும் இடம்பெற்று நூலினை முழுமையாக்குகின்றன. இந்நூலினை உருக்கொடுத்து முழுமையாக்க ஆய்வாளர் சலபதி எடுத்துக்கொண்ட பலவருட முயற்சி நூலெங்கும் தென்படுகிறது. நூலின் மையச்சரடான வதந்திக்கு எங்ஙனம் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது... அப்புள்ளி எப்படிப்பட்டது? ஆதாரங்கள்? என்பன போன்ற கேள்விகளுக்கெல்லாம் நூலையே நான் பதிலாகத் தருகிறேன்...

சூரியனை
தோள்மீது போட்டுக்கொண்டு
விடிகிறது
நகரத்தின் இரயில் நிலையம்

தேநீரும் காப்பியும்
ஆவி பறக்க
பனித்துளிகளோடு முட்டி மோதி
விளையாடுகின்றன

கண்களை
அறிவிப்புப் பலகை மீதும்
செவிகளை
தகவல் ஒலிப்பான் மீதும்
வைத்துவிட்டு
காத்திருக்கிறார்கள் பயணிகள்

பைகள்
முதுகில் ஏறிக்கொண்டும்
தோளில் தொங்கிக்கொண்டும்
சக்கரங்களின் மீதமர்ந்துகொண்டும்
பயணத்தின் நோக்கங்களை
சுமந்திருக்கின்றன

வாழ்வின் பொதிகள் மீது
கவனம் தப்பாமல்
படிந்திருக்கிறது
போர்ட்டர்களின் விழிகள்

தலை நிறைய பூ வைத்து
மேல் சட்டை அணிந்து
சிரித்த முகத்தோடு
தானியங்கித் துப்புரவு வண்டியை
இயக்கியவாறு
ப்ளாட்பாரம் முழுவதும்
ராணி போல் பவனி வருகிறாள்
இளம் யுவதி

அவளை மட்டும்
மிச்சமாக ரசித்த மயக்கத்தில்
மெல்லச் சரிந்து
தள்ளாடத் தொடங்குகிறது
அதிகாலைச் சூரியன்.

– தி.கலையரசி

• •

ஒரு கையளவு நீரை மொண்டு
இந்த நதியை உன்னிடம்
தாரை வார்க்கிறேன்

குட்டி குட்டி நட்சத்திரங்கள்
உள்ளங்கைக்குள் கண்ணடிக்கின்றன

இனி இது போல ஒரு பிரியம்
வாழ்வில் இந்த நதியின் மீது
மீண்டும் வருமா
என்று தெரியவில்லை

படித்துறையில் சொரியும் பூக்களில்
கைகளை அளைந்து
நுரை பூத்துக் கிடக்கும் இந்த நாளை
அள்ளி முகத்தில் அப்பிக்கொள்கிறேன்

பிறகு எப்படித்தான் இந்த நதியை
நாம் நம்மோடு
எடுத்துச் செல்ல முடியும் சொல்?

இந்த நதி நம் ஞாபகத்தில்
இல்லாமலே போனாலும்
நாம் இந்த நதிக்கொரு
ஞாபகமாக
போய்விட வேண்டும் தானே

– தங்கேஸ்

● கோ.லீலா

காடு செழித்தால் நாடு செழிக்கும்

காடெனும் பச்சைய பாத்திரத்தின் பல்வேறு கூறுகளையும் அறிந்தவர்கள் ஆதிவாசிகள்தான்.

1982ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் அமைப்பானது ஆகஸ்ட் 9ஆம் தேதியினைச் சர்வதேச ஆதிவாசிகள் தினமாக அறிவித்துள்ளது. அவர்கள் பாரம்பரிய அறிவுப் பொக்கிஷம் என்பதை உணர்ந்து 2022 வருடத்தின் மய்யக் கருத்தாக - *The Role of Indigenous Women in the Preservation and Transmission of Traditional Knowledge* - பாரம்பரிய அறிவினைப் பாதுகாப்பதில் கடத்துவதில் ஆதிவாசிப் பெண்களின் பங்கு – என்பது வைக்கப்பட்டுள்ளது.

ஆதிவாசிகளின் வாழ்விடத்தில்தான், உலகின் 80 விழுக்காடு சூழலியல் உயிர் பன்முகத்தன்மை நிலவுகிறது.

ஆதிவாசிகளின் ஒட்டுமொத்த அறிவே பாரம்பரிய அறிவு எனச் சொல்லப்படுகிறது. இயற்கையோடு இயைந்து அமைதியானதொரு வாழ்வை வாழும் இவர்களிடம் எண்ணற்ற இயற்கை சார்ந்த மருத்துவ அறிவுகள் நிரம்பியுள்ளன வெளிப்படைத்தன்மையுடன்.

இவர்களின் கலாச்சார, பண்பாட்டு

அசைவுகள், பாடல்கள், வழிபாடுகள், உணவுகள் என அனைத்திலுமாக இப்பேரறிவு விரவிக் கிடக்கிறது. வனத்தில் தனித்துக் குழுவாக வாழும் இவர்களின் பாரம்பரிய அறிவாற்றலைக் கொண்டே, கானுறை உயிர்களிடமிருந்து தன்னைப் பேணிக்கொள்கிறார்கள்.

குழந்தை பிறப்பு முதல் இறப்பு வரை யாரையும் சார்ந்திராமல், பாரம்பரிய அறிவு அனுபவம் மற்றும் முன்னோரின் அனுபவ அறிவினையும் கொண்டு தீர்வு காண்கின்றனர்.

ஆதிவாசிகளைக் காட்டினை விட்டு வெளியேற்றுவது என்பது பல்லுயிர் பெருக்க அழிவு மற்றும் சூழலியல் சமமின்மையை உருவாக்குவதற்கு ஒப்பு.

குறிப்பாக, பெண்கள் எனக் குறிப்பிடப்பட்டதற்குப் பொருள் உண்டு. பொதுவாக ஆதிவாசிகளின் வாழ்வானது சுதந்திரம், அன்பு, போராடும் குணம், சத்தியத்தை மீறாத கட்டுப்பாடு ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும்.

அதிலும் பெண்கள் தன் வனம், அதில் உள்ள மரங்களைக் காக்க உயிரையும் துறந்த சம்பவங்கள் உலகெங்கும் நிகழ்ந்து இருக்கின்றன, நிகழ்கின்றன.

•

<u>மரம் காக்க மரணித்த இந்தியாவின் முதல் பெண்மணி</u>

ஜோத்பூர் மாவட்டத்தில், கேஜ்ராலி கிராமம் பிஷ்னோய் எனும் ஆதிவாசிகள் சமூகம் அதிகமாய் வாழும் பகுதி. ஜம்பேஷ்வர் எனும் குரு மூலம் வகுக்கப்பட்ட 24 சட்டதிட்டங்களை இன்றுவரை பின்பற்றி வாழ்கின்றனர்.

14ஆம் நூற்றாண்டிலேயே எழுதப்பட்ட சட்ட திட்டங்களில் தனிமனிதச் சுகாதாரமும், இயற்கையை, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவமும் குறித்து எழுதப்பட்டிருக்கிறது.

17ஆம் நூற்றாண்டில் இப்பகுதியை மார்வார் தேசத்து மன்னன் அபய்சிங் ஆண்டு வந்தான். நள்ளிரவு நேரத்தில் ஊரே உறங்கிக்கொண்டிருந்த வேளையில், கேஜ்ரி மரத்தை வெட்டி எரித்துச் சாம்பலில் சுண்ணாம்பு குழைத்துக் கட்டடம் கட்டத் திட்டமிட்டு, கேஜ்ரி மரத்தை வெட்ட அபய்சிங்கின் படைவீரர்கள் வந்தனர்.

நள்ளிரவில் சத்தம் கேட்டு எழுந்த அம்ரிதா தேவி, மரத்தை வெட்டுவதைத் தடுக்கப் போராட, படைவீரர்கள் மரத்திற்குப் பதிலாகப் பணம் கேட்டனர்.

ஒரு மரத்தைக் காப்பாற்ற ஒரு மனிதத் தலைதான் சன்மானம் என்றால், அந்தச் சன்மானத்தைத் தாராளமாகத் தரலாம்.

- அம்ரிதா தேவி.

மரத்தைப் பற்றிக்கொண்டு அவர் அப்படிக் கூறிக்கொண்டிருந்தபோதே, மன்னர் அபய்சிங்கின் படைவீரர்கள் அம்ரிதாவின் தலையை வெட்டினார்கள். மரத்தைக் காப்பாற்றும் போராட்டம் அம்ரிதாவோடு நின்றுவிடவில்லை.

அம்ரிதாவின் மூன்று மகள்கள் அஷூ, ரத்னி, பாகூ ஆகியோரையும் படைவீரர்கள் வெட்டிக் கொன்றார்கள். இந்த விஷயம் கிராமம் முழுவதும் பரவவே, பிஷ்னோய் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டார்கள். எல்லோரும் கேஜ்ரி மரங்களைக் கட்டிப்பிடித்துக்கொண்டார்கள். அந்த மக்களை மரங்களோடு சேர்த்து இருதுண்டுகளாக வெட்டிய ரணக் கொடூரங்களும் நடந்தன. மொத்தம் 363 பிஷ்னோய் பழங்குடி மக்கள் மகாராஜாவின் ஆட்களால் கொல்லப்பட்டார்கள். அம்ரிதா, செப்டம்பர் மாத மத்தியில் ஒரு இருள் சூழ்ந்த சனிக்கிழமை அன்று கொல்லப்பட்டதால், இன்றும் அந்த மக்கள் செப்டம்பர் மாதச் சனிக்கிழமையைத் துக்க தினமாக அனுசரிக்கிறார்கள்.

இந்திய வரலாறுகளில்

இடம்பெற்றிருக்கும் முதல் சூழலியலுக்கான போராட்டம், பிஷ்னோய் மக்களின் இந்தத் தியாகம்தான்.

இதைத் தொடர்ந்துதான் *சிப்கோ* அமைப்பு உருவானது.

சிப்கோ என்றால் என்ன பொருள்?

சிப்கோ என்றால் இறுகத் தழுவிக்கொள்ளல். ஆம் அனைவரும் தழுவி வெட்டப்படுவதிலிருந்து தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள்.

இமாலயப் பகுதிகளில் ஏற்படும் நிலச்சரிவு, காலநிலை மாற்றம் ஆகியவற்றுக்கும் மரங்கள் வெட்டப்படுதலே காரணம் என்று ஆய்வறிக்கைகள் கூறுகின்றன.

மரம் என்பது வெறும் மரம் மட்டுமல்ல, அது ஒரு நிலத்தின் வரலாறு, மண்ணில் ஊடுருவும் வேர், மனித சமூகத்தில் ஊடுருவி நிற்கும் கலாச்சாரம், பண்பாடு.

தேன், கிழங்கு, மூங்கில் அரிசி, போதை புல், சதாப்பு, ஊணாங்கொடியென இன்னும் பலவற்றின் பயன்களை அறிந்தவர்கள்.

மரப் பிசின்கள், போதை புல் போன்றவற்றை மதிப்பு கூட்டிய பொருளாக மாற்றும் வல்லமை வாய்ந்தவர்கள்.

எந்தக் கடிகாரமும், மழைமானியும் இன்றிக் காலத்தையும், மழையையும் கணிக்கவும் அளக்கவும் கூடியவர்கள்.

தொற்று நோய்க்குக் காலநிலை மாற்றமும், சுற்றுச்சூழல் சீர்கேடுமே காரணம் என்பதை அறுதியிட்டு முன்னறிவிக்கும் திறன் கொண்டவர்கள்.

இயற்கையாகவே கொரோனா போன்ற பெருந்தொற்றுகளை எதிர்கொள்ளும் resilience அவர்களிடம் இயல்பாக இருக்கிறது.

காட்டை விட்டு வெளியேறிய நம்மின் புலன்கள் தன் நுண் திறனை இழந்துவிட்டன என்பதே உண்மை.

ஆதிவாசிக் குழுக்களில், பெண்ணிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது, பல்வேறு பணிகளில் தலைமை வகிக்கின்றனர். பாரம்பரிய அறிவைப் பாதுகாக்கவும், அதை மற்றவர்களிடம் பகிரவும் கூடிய திறமை மிக்கவர்களாக இருக்கும் இம்மக்களின் வாழ்வாதாரம், சுய சார்பு போன்றவை உறுதி செய்து கொடுக்கப்பட வேண்டும்.

ஆதிவாசிகளிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள ஏராளமானவைகள் உள்ளன. *Sharing of Traditional Knowledge* என்பதை ஒரு திட்டமாகச் செயல்படுத்த முன்னெடுப்புகள் செய்ய வேண்டும்.

காட்டைக் காப்பதற்கு, ஆதிவாசிகளின் பாரம்பரிய அறிவு மிகமிக முக்கியமான ஒன்று.

பச்சைய பாத்திரம் பச்சையம் மாறாமல் இருக்க, மண்ணின் மைந்தர்கள் ஆன ஆதிவாசிகள் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும்.

வேர்களான ஆதிமனிதம் போற்றுவோம் காட்டின் புனிதம் காப்போம்!

நா.வானமாமலை

தமிழ்நாட்டில் தாய்வழிச் சமுதாயம்

மனிதன் வேட்டையாடி உணவு தேடிய காலத்தில் ஆண்களே வேட்டைத் தொழில் செய்தனர். அவர்களே சமுதாயத்தில் ஆதிக்கம் வகித்தனர். அதனால் பெண்கள் குகைகளிலும், குடிசைகளிலும் தங்கினர். அவர்கள் செடி, கொடிகளைக் கண்டனர். அவற்றின் இனப்பெருக்கத்தை அனுபவத்தில் கண்டனர். இயற்கையைப் பின்பற்றித் தாங்களும் கொட்டைகளைப் பூமியில் விதைத்தனர். விதைகளை நிலத்தில் ஊன்றினர். கிழங்குகளை நிலத்தை அகழ்ந்து புதைத்து மூடினர். அவை வளர்ச்சியுற்றுப் பலனளித்தன. இவ்வாறு பண்டைப் பயிர்த்தொழில் தோன்றிற்று. பயிர்த்தொழிலிலிருந்து, வேட்டைத் தொழிலிலிருந்து கிடைப்பதை விட அதிகமாக உணவு கிடைத்தது.

முதலில் பெண்களே பயிர்த்தொழிலில் ஈடுபட்டனர். அவர்களே பயிர்த்தொழிலைக் கண்டுபிடித்தனர். பயிர்த்தொழில் செய்ய ஆள்பலம் வேண்டும். அதற்குரிய மக்களை ஈன்றதும் அவர்களுக்குப் பயிர்த்தொழிலைக் கற்றுக்கொடுத்ததும் பெண்களே. ஆண்கள் வேட்டைக்காக நெடுந்தூரம் சுற்றி அலைவார்கள். சில நாட்களுக்கு ஒருமுறையே குடில்களுக்குத் திரும்புவார்கள். ஆகவே பயிர்த்தொழிலின் தொடக்கக் காலத்தில் ஆண்களுக்கு அதில் அதிகப் பங்கு இருந்ததில்லை. குடும்ப வளர்ப்பிலும், அதிகப் பங்கு இருந்ததில்லை. பெண்களே புராதனப் பண்பாட்டை உருவாக்குவதில் முக்கியப் பங்கு பெற்றனர். வேட்டை முக்கியத் தொழிலாக இருந்தது மாறிப் பயிர்த்தொழில் முக்கியத்

தொழிலாயிற்று. பயிர்த்தொழிலில் பங்கு பெற்ற பெண்களும் ஆண்களை விட உயர்வு பெற்றனர். தொல்குடிகளைப் பற்றி ஆராய்ந்த அறிஞர் அனைவரும் ஒருமுகமாக ஒப்புக்கொள்ளும் உண்மை இது.

இந்நிலையில் மனிதனது கருத்துக்களும் மாறின. பெண் ஆதிக்கச் சமுதாயம் தோன்றி வளரும் சரித்திர முற்காலத்தில் பெண் தெய்வங்கள் தோன்றின. பயிர்த் தொழில் செழிப்பைக் கொடுத்தது. ஆகவே செழிப்பைக் குறிக்கும் தெய்வங்கள் பல நாடுகளிலும், பெண் தெய்வங்களாகவே இருக்கின்றன. சீதேவி, கிரேக்க தெய்வங்களான சைபீல்டெடோனா, டெல்பி முதலியவை பெண் தெய்வங்களே. செழிப்பை வேண்டி நடத்தப்படும் விரதங்களிலும், விழாக்களிலும், இன்றும் ஆண்களுக்குப் பங்கில்லை. உதாரணமாக, பாவை நோன்பை நோக்குவோம். பாவைகள் பலவகைப்படும்; அல்லிப்பாவை, கொல்லிப்பாவை, தெற்றிப் பாவை, மணற்பாவை, வண்டற்பாவை முதலியன. நாடுவளம் கொழிக்க இவற்றைப் பெண்கள் பூசை செய்வார்கள். மழைவளம் சுரக்கவும், ஆற்று நீர் நிலத்தை விதையேற்கும் பருவமாக்கவும், முளை வளரவும், பயிர்வளம் பல்கவும் பாவையை வாழ்த்துகிறார்கள். ‘திருப்பாவை’ இப்பாவை நோன்பை வருணிக்கிறது. இந்நோன்பிலே ஆண்களுக்கு இடமில்லை. பாவையை வணங்கி விழா கொண்டாடினால் வளம் சுரக்கும். பெண்மக்களுக்கு இன்பமும் சுரக்கும் என்று திருப்பாவை கூறுகிறது. பாவைக்கு நோன்பு செய்தால் கண்ணன் பறை தருவான்.. அருள் தருவான் என்றும் ‘திருப்பாவை’ கூறுகிறது. இதிலே கூர்ந்து நோக்க வேண்டியது, கண்ணனுக்குப் பூசை இல்லை. விழாவும் இல்லை. பாவைக்குத்தான் பூசை, பாவை மணலாலும் வண்டலாலும் கிழங்கினாலும் செய்யப்பட்டது. பாவை நிலத்திற்கு அடையாளம், நிலமோ பெண்; பெண்ணே செழிப்பைத் தருபவள். அவளை வணங்கினால் வளம் அருளுவாள். இங்கே கண்ணன் பார்த்து நிற்பவனே; அவனுக்கு முக்கியத்துவம் இல்லை. ஆண்டாளுடைய காலத்துக்கு முன் தமிழ்நாட்டுப் பெண்கள் பாவை நோன்பு கொண்டாடியிருக்க வேண்டும். அப்பொழுது கண்ணனுக்கு அதில் சற்றும் இடமிருந்திராது என்பது நிச்சயம். பாவைநோன்பு, பாவைக்கு மட்டுமே. அதில் பங்கு பெறுபவர் பெண்கள் மட்டுமே. ஆண்டாள் காலத்தில், மிகப் புராதன காலத்தில் நடந்த விழாவொன்றின் மிச்சங்கள் பாவை நோன்பில் எஞ்சிக் காணப்பட்டன.

பண்டைத் தமிழ் நூல்களில் பெண் தெய்வம் ஒன்றின் பெயர் காணப்படுகிறது. அவள் பலவாறு அழைக்கப்படுகிறாள். ‘முதியோள்’ என்பது அவளது பெயர்களுள் ஒன்று. எல்லோரிலும் பெரியவள் என்று அதன் பொருள். அதே பொருளில் அவள் ‘பழையோள்’ என்றும் அழைக்கப்பட்டுள்ளாள். இவள் யாரால் வணங்கப்பட்டாள்? அதற்கு அவளுடைய மற்றொரு பெயர் பதிலளிக்கிறது. பரிபாடல் பதிகத்தில் அவள் ‘காடுகள்’ என்று அழைக்கப்படுகிறாள். ‘காடு கிழாள்’ என்ற மறு பெயரும் அவளுக்கு உண்டு. குறிஞ்சி நில மக்கள், வேட்டைத் தொழிலிலிருந்து புராதனப் பயிர்த் தொழிலுக்குத் திரும்பிய காலத்தில் புன்புலப்பயிர் செய்யத் தொடங்கினார்கள். அக்காலத்தில் பெண்கள் ஆதிக்கம் பெறத் தொடங்கினார்கள். ஆகவே காட்டில் பெண்கள் பயிர் செய்யத் தொடங்கிய காலத்தில் காடு கிழாளும் தோன்றினாள்.

அதற்கு முன்பே சேயோன் (வேலன்) கடவுளாகிவிட்டானல்லவா? அவனுடைய சிறப்பு ஆண் ஆதிக்கத்தையல்லவா குறிக்கிறது? பெண் ஆதிக்கச் சமுதாயம் அவனுக்கும் ஓர் இடம் கொடுக்க வேண்டும். ஆகவே அவனைக் காடு கிழாளின் மகனாக ஏற்றுக்கொண்டது. அவன் வீரன் ஆகவே அவளையும் வீரமங்கையாக்கியது. வீரத் தொழிலில் வெற்றி பெறுவோருக்கு அவள் கொற்றவை ஆனாள். அவனும் கொற்றவைச் சிறுவன் ஆனான்.. பிற்காலத்தில் வேட்டைத் தொழிலை விட்டு, ஆண்கள் ஏர் உழவின் மூலம், பயிர்த் தொழிலில் முக்கிய பங்கு பெறத் தொடங்கியபின், மறுபடியும் வேலன் தாய்க் கடவுட் சேய் ஆகிவிட்டான். பெண்ணாதிக்கச் சமுதாயத்தில் தாய்வழி உறவு பெருமையாகச் சொல்லப்படுகிறது. ஆணாதிக்கச் சமுதாயத்தில், தந்தை வழி உறவு பெருமையாகச் சொல்லப்படுகிறது.

சிலப்பதிகாரத்தில் கொற்றவை வழிபாட்டு முறை சொல்லப்படுகிறது. கொற்றவை கோயில் ஐயைக் கோட்டம் என அழைக்கப்படுகிறது. ஐயைக்கு விழாச் செய்ய

வேண்டுமென நாள் குறித்துச் சொல்லுபவள், அவள் தெய்வவெறி கொண்டு ஆடுபவள். 'பழங் கடனுற்ற முழங்குவாய்ச் சாலினி' என்று அவள் வருணிக்கப்படுகிறாள். ஐயைக்குப் படிவமில்லை. ஒரு குமரிப் பெண்ணைக் கோலம் புனைந்து ஐயை என்று பெயரிட்டுக் கலைமான் மீது ஏற்றி வணங்குகிறார்கள்.

பறையும் குழலும் சூறைச் சின்னமும், முழங்கவும் மணியிரட்டவும் தெய்வமென எழுந்தருளுவித்து வேடர்கள் (எயினர்) வணங்குகின்றனர். பூசைக்குரிய சந்தனத்தையும், மலரையும், சாம்பிராணியையும் எயிற்றியர் (பெண்கள்) ஏந்தி வருகிறார்கள். தெய்வமும் பெண் தெய்வம், பூசனை முழுவதும் பெண்களின் உரிமை. இது பழங்காலப் பெண்ணாதிக்கத்தின் எச்சம். சிலப்பதிகாரக் காலம் ஆணாதிக்கமும் தந்தை வழிமுறையும் நன்றாக வளர்ச்சி பெற்றிருந்த காலம், அக்காலத்திலும் தொன்மையின் எச்சம் இவ்வழிபாட்டில் காணப்படுகிறது.

பிற்காலத்தில் ஆணாதிக்கச் சமுதாய அடிப்படையில் தோன்றிய கடவுளர்களும், இத்தெய்வங்களின் உறவினர்களாக்கப்படுகின்றனர். இத்தெய்வத்தின் செயல்களெனப் புராணங்கள் வருணிக்கும் நிகழ்ச்சிகள், ஐயை மீது ஏற்றிக் கூறப்படுகின்றன. உதாரணமாக சிவனது நன்மைகள் சில ஐயை மீது ஏற்றிக் கூறப்பட்டுள்ளன.

'மதியின் வெண் தோடு

சூடுஞ் சென்னி நுதல் கிழித்து விழித்த

இமையா நாட்டத்து பவள வாய்ச்சி, தவள வாய் நகைச்சி

நஞ்சுண்டு கறுத்த கண்டி.'

கண்ணனது செயல் இவள் மீதேற்றிக் கூறப்படுகிறது.

'மருதின் நடந்து நின்

மாமன் செய் வஞ்சம்

உருளும் சகடம்

உதைத் தருள் செய்குவாய்.'

எப்படியாயினும் இப்பெண் தெய்வத்தின் கணவன் எவன் என்று கூறப்படவில்லை. இவளே குமரி, இவளே செழிப்பின் செல்வி, இவளது வழிபாட்டை நடத்தும் உரிமையுடையவர்கள் பெண்களே, ஆண்கள் எட்ட நின்று அருள் பெறுவதற்கே உரியவர்கள். பெண்ணாதிக்கச் சமுதாயத்தின் எஞ்சிய மரபென்று இதனை ஐயமறக் கொள்ளலாம்.

இனி தந்திரம் என்றழைக்கப்படும் சித்தர் தத்துவத்திலிருந்து பெண்ணாதிக்கச் சமுதாயத்தின் எச்சங்களைச் சுருக்கமாகக் காணலாம். சித்தர்கள் சக்தி உபாசகர்கள். பட்டினத்தாரையும், இராமலிங்கரையும் தற்காலத்தார் சித்தர்களாக்கிவிட்டனர். உண்மையான சித்தர்கள் தந்திரத்தில் நம்பிக்கையுடையவர்கள். தந்திரம் தொன்மையான மந்திரவாதம். அதன் அடிப்படை சக்தி. இச்சக்தி பெண்மைதான்.



அவர்கள் பெண் பிறப்புறுப்பை (அல்குல்) இரண்டுவித அடையாளங்களால் குறிப்பிடுவர். ஒன்று தாமரை, மற்றொன்று முக்கோணம். பெண்மையின் ஆற்றலை அடைந்தால் பிரபஞ்சத்தை அடக்கி ஆளலாம் என்பது அவர்கள் தத்துவம். இதற்காகப் பெண்மை ஆற்றலையடைய அவர்கள் யோக முறைகளை ஏற்படுத்தினார்கள். இதற்கு ஒரு புராதன விஞ்ஞான விளக்கமும் கொடுக்கிறார்கள். முதுகுத் தண்டிலுள்ள சுழுமுனை என்னும் நரம்பில் சட்சக்கர பேதம் என்று படிப்படியாக உயரும் நிலையில் 7 தாமரைகள் இருப்பதாகவும் யோகத்தின் மூலம் மனம் ஒவ்வொரு படியாக ஏறிக் கடைசியில் சகல சக்திகளையும் அடையும் என்பதும் அவர்கள் தத்துவம். இவையனைத்தும் பெண்மையின் சக்தியைப் பெறும் முயற்சியே. ஆண்கள் பெண்களின் சக்தியை ஏன் பெற வேண்டும்? பெண்கள் உயர்வானவர்கள் என்று மதிக்கப்பட்ட காலத்தில்தான் அத்தகைய எண்ணம் தோன்ற முடியும். அது பெண்ணாதிக்கம் உண்மையிலேயே இருந்த காலத்தில் உருவான கருத்து. பெண்ணாதிக்கத்திற்கு அடிப்படையான சமுதாய அமைப்பு மாறிய பின்னரும், சக்தி வழிபாட்டிலும், தந்திர முறைகளிலும் சித்தர் தத்துவங்களிலும், எச்சங்களாகக் காணப்படுகின்றன. இவையனைத்தையும் ‘வாமாசாரம்’ என்ற சொல்லால் இந்தியத் தத்துவ நூலார் அழைக்கிறார்கள். வாமம் என்றால் பெண், ஆசாரம் என்றால் ஒழுக்கம். பெண்ணொழுக்கத்தைக் கடைப்பிடித்து பெண்மையின் சக்தியைப் பெறுவதே இம்முறைகளின் நோக்கம். இம்முறைகளின் மூலவேர் பெண்ணாதிக்கச் சமுதாயத்திலிருந்தது என்பதில் ஐயமில்லை.

இனி இன்று நிலவி வரும் அம்மன் வணக்கத்திலிருந்து சில சான்றுகள் காணலாம். ஆண்டுதோறும் நவராத்திரி உற்சவம் நடைபெறுகிறதல்லவா? ஒவ்வொரு ஊரிலும் பெண் தெய்வங்களுக்குத் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இத்தெய்வங்களுக்கு ஆகம முறைப்படி பூசனையில்லை. தந்திரீக முறைகள் சிலவும் தொன்முறை வழக்கங்களும் இப்பூசனைகளில் இடம்பெறுகின்றன. அம்மனுக்கு முன் முக்கோணம் அல்லது தாமரை வடிவத்தில் யந்திரங்கள் கோலமாகப் போடப்படுகின்றன. இவை எதனைக் குறிக்கின்றன என்று முன்னரே கண்டோம். அவற்றின்மீது பூரண கும்பம் வைத்து நெல் நிரப்பி மஞ்சளும் தேங்காயும் வைக்கிறார்கள். அல்குல் இனவிருத்திக்கு அடையாளம். அதனோடு தொடர்பு கொள்ளும் நெல்லும் மஞ்சளும் தென்னையும் பல பயிர்வகைகளுக்கு அடையாளங்கள். பயிர்களெல்லாம் ஒன்று நூறாகப் பெருக வேண்டும் என்பது இச்செய்கையில் மறைந்திருக்கும் பொருள்: அம்மனுக்குக் குங்குமம் அர்ச்சனை செய்கிறார்கள். தந்திர நூல்களில் குங்குமம் மாதவிடாய் இரத்தத்தைக் குறிக்கும்.

முதன் முதலில் பூப்பெய்தியதிலிருந்து, மாதவிடாய் நிற்கும் காலம் வரை, பெண் செழிப்பின் சின்னம். அதற்கு முன்னும் பின்னும் அவள் கருவுயிர்த்து, இனச்செழிப்புக்குக் காரணமாவதில்லை. ஆகவே மாதவிடாய் உதிரம் மாயசக்தி உடையது, செழிப்புக்கு அறிகுறி என்ற கருத்து புராதன மக்களுக்கு ஏற்பட்டது. இன்னும் நாகரிகமடையாத தொல்குடி மக்களுக்கு இந்த நம்பிக்கை உள்ளது. மாதவிடாய்ப் பருவத்திலுள்ள பெண்களை விதை முளைக்கும் வயலைச் சுற்றி வரச் செய்தால் விதை வளர்ந்து நல்ல பயன்தரும் என்று அவர்கள் நம்புகிறார்கள். இதற்கு அடிப்படையான காரணம் மனிதனது பிறப்புக்கு ஆண் பெண் உறவு காரணமாவதுபோல உலகில் எல்லாம் தோன்றுவதற்கு உடலின் நிகழ்ச்சிகள் போன்ற வேறு பிரகிருதி நிகழ்ச்சிகள் காரணம் என்ற நம்பிக்கையும், பிரகிருதியின் செழிப்பைப் பெண்ணின் செழிப்புச் சக்தி வளர்க்கும் என்ற நம்பிக்கையுமே. எல்லா அம்மன்களுக்கும் சிவன் கணவன் என்ற கதை இன்று வழங்கிவருகிறது. முத்தாரம்மன் கதை, குமரியம்மன் கதை போன்ற கதைகளில் இவ்வம்மன்மார் சிவனது மனைவிமாராகப் பேசப்படவில்லை. சிவனை எதிர்த்துப் போராடிய அசுரர்களுக்கு உதவியாகவும் கதை சொல்லுகிறது. இக்கதைகளைப் பற்றிய விரிவான ஆராய்ச்சி தாய் வழிச் சமுதாயம் பற்றிய புதிய கருத்துக்களைக் கொடுக்கும்.

(1966இல் வெளியான தமிழர் வரலாறும் பண்பாடும் நூலிலிருந்து. சற்று சுருக்கப்பட்டுள்ளது.)

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

சுதந்திரக் கூத்து

புது சரித்திரம்

விரைவில்..